

09 மோடி எனும் மோசடி

ராமர் கோயில் நிர்மாணிக்கத் தயாராகும் காவிப் பயங்கரம்

07 இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

ஐ.தே.க. மத்திய குழு உறுப்பினர்



சிறியதொரு கூட்டத்தின் தேவைப்பாடுகளே இனவாதமாக அரங்கேற்றப்படுகின்றது




www.meelparvai.net

# மீள்பார்வை

Registered as a newspaper in Sri Lanka
GPO-QD/63/NEWS/2016 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 334 • 08 ஜனவரி 2016 வெள்ளிக்கிழமை • ரபீஉல் அவ்வல் 1437 • விலை 40.00




# வில்பத்து மீள்குடியேற்றத்தில் அப்பாவி மக்களுக்கு அநீதி - ஜனாதிபதி



மீள்குடியேற்றத்திற்காக வில்பத்துவை அண்டிய சில நிலப்பிரதேசம் விடுவிக்கப்பட்டாலும், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் உரிய முறையில் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை. இப் பகுதிகளின் மீள்குடியேற்ற செயற்பாடுகளில் அதிகாரிகள் பாரபட்சமாக நடந்துள்ளதாகவும், தவறிழைத்துள்ளதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள அபே கம கருத்தரங்கு கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் உரையாற்றுகையில், (பக்.02)

## சிகரட் விற்பனைக்கு தடை

கண்டி மாவட்டத்தின் அகுரண, துனுவில பொதுச் சுகாதார பரிசோதகர் (PHI) பிரிவுக்குட்பட்ட சிங்களப் பிரதேசத்தில் சிகரட் விற்பனையை ஜனவரி முதலாம் திகதி முதல் முற்றாக நிறுத்தி விடுவதற்கு கடை உரிமையாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

துனுவில பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் லின்டன் சேனாரத்ன ஏற்பாடு செய்த கூட்டத்தில் தெரிவித்ததன்படி, இனிமேல் இந்தப் பிரதேசம் புகைத்தலற்ற பிரதேசமாக மாறவிருக்கிறது.

இலங்கையில் தொற்றாத நோயினால் மரணமடைவர்களின் எண்ணிக்கையில் இரண்டாவது இடத்தில் இருப்பது புற்றுநோயாளர்கள் ஆவர். சிகரட், மது ஆகியவற்றினாலேயே ஆண்களில் அதிகமான புற்றுநோயாளர்கள் இறக்கின்றனர். இதேவேளை 2020 ஆகும் போது நாட்டில் சிகரட் தடை செய்யப்படும் என ஜனாதிபதி சிறிசேன தெரிவித்தார். சிகரட்டை தடை செய்வதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் தனது அந்திம காலத்தையே (2015) குறிப்பிட்டிருந்தார்.

## ரிஸானாவும் இல்லை, தருவதாகச் சொன்ன உதவியும் இல்லை



சவூதி அதிகாரிகளினால் ரிஸானா கொல்லப்பட்ட போது அனுதாபத்தின் பேரில் தமக்குத் தருவதாக வாக்களித்த பல உதவிகள் தமக்கு இதுவரை வந்து சேரவில்லை என ரிஸானா நபீக்கின் தாயார் மீள்பார்வைக்குத் தெரிவித்தார். (பக்.02)

## இலங்கையில் ஐ.எஸ். கண்டுபிடிப்புக்கள் வேகமடைகின்றன

கடந்த வாரம் வரை 16 ஐ.எஸ். தீவிரவாதிகள் இலங்கையில் இருப்பதாகச் சொல்லப்பட்ட நிலையில் தற்போது அதன் எண்ணிக்கை 36 ஆக இருப்பதாக



பாதுகாப்புச் செயலாளர் கருனாசேன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

குறைந்தது 36 இலங்கையர் கள் சிரியா சென்றிருப்பதாகவும் அவர்களில் சிலர் தற்போது ஐ.எஸ். இல் இணைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பலர் தமது மனைவி பிள்ளைகளுடன் சிரியா சென்றிருப்பதாகவும், புனிதப் பயணம் என்ற பெயரிலேயே இந்தப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், எப்படி யார் மூலமாக அவர்கள் அங்கு (பக்.02)

## மும்மொழிகளிலும் முஸ்லிம் மாணவர்கள் சாதனை





கடந்த வாரம் வெளியான க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் முஸ்லிம் மாணவர்கள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் சாதனை படைத்துள்ளனர்.

ஆங்கில மொழி மூலம் வர்த்தகப் பிரிவில் தோற்றிய குருநாகல மலியதேவ ஆண்கள் பாடசாலை மாணவன் எப்.எம்.அகில் மொஹமட் தேசிய ரீதியில் முதலிடம் பெற்றுள்ளார். தமிழ் மொழியில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் (பக்.02)

## எல்லை மீள்நிர்ணயம் முடியும் வரை உள்ளூராட்சி தேர்தலை பிற்படுத்த முடியும் - பைசர் முஸ்தபா



தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற எல்லை மீள்நிர்ணய செயற்பாடுகள் முடியும் வரை உள்ளூராட்சித் தேர்தல்களை பிற்போடுவதற்கு சட்டத்தில் இடமிருக்கிறது என மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூராட்சி சபைகள் விஷேட ஒழுங்குகள் சட்டம், 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டம் மூலம் உள்ளூராட்சித் தேர்தலின் போது தொகுதிக்கொரு பிரதிநிதியை தெரிவு செய்தல், விகிதாசார முறைப்படி இன்னும் சிலரை தெரிவு செய்தல் ஆகிய இரண்டு முறைகளும் கலந்த தேர்தல் முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (பக்.10)

## சிங்ஹ லே தேசிய இயக்கமாக வேண்டும்

- ரோஹித ராஜபக்ஷ



நுகேகொட பிரதேசத்திலுள்ள முஸ்லிம் வீடுகளில் சிங்ஹலே வாசகம் பொறித்திருந்ததை அழிப்பதற்கு சிங்கள இளைஞன் ஒருவன் முன்வந்துள்ள நிலையில் சிங்ஹலே இயக்கம் பொதுபல சேனாவைப் போலன்றி தேசிய இயக்கமாகச் செயற்பட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதியின் மகன் ரோஹித ராஜபக்ஷ தனது முகநூலில் கருத்து வெளியிட்டிருக்கிறார். (பக்.10)

## தாஜுதீன் கொலையாளிகள் மறைவு



கொல்லப்பட்ட ரகர் வீரர் தாஜுதீனின் கொலையுடன் சம்பந்தப்பட்ட சீசீடீவி கமெரா பதிவுகள் சிக்கியுள்ளதாகவும் இதனை வைத்து கொலையாளியை கண்டு பிடிக்க முடியும் என அமைச்சர் ராஜித சேனாரத்ன முன்னர் கூறியிருந்த போதும் இந்த கமரா பதிவுகளில் அவர்களை தெளிவாக இனங்காண முடியாதுள்ளது என கொழும்புப் பல்கலைக்கழக கணனிப்பிரிவு தெரிவித்துள்ளது. (பக்.10)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வில்பத்து மீள்குடியேற்றத்தில்... (01ம் பக்கத் தொடர்)



தற்போது வில்பத்து தேசிய வனப்பகுதி தொடர்பில் நாட்டு மக்களின் அவதானம் திரும்பியுள்ளது. இருந்தபோதிலும் முன்னைய ஆட்சியின் போது வில்பத்து வனப்பகுதி மீள்குடியேற்றத் திற்காக விடுவிக்கப்பட்டமை குறித்து அமைச்சர் என்ற வகையில் நான் அறிந்திருக்கவில்லை.

வில்பத்து காடழிப்பு தொடர்பில் பல்வேறு தரப்பினரும் கவனம் செலுத்தியிருந்தனர். 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் ஆட்சியில் இருந்த அரசாங்கம் அமைச்சுக்களின் குழு எடுத்த தீர் மானத்திற்கு அமைவாக வனப்பாதுகாப்பு திணைக் களத்திற்கு சொந்தமான 3500 ஏக்கருக்கும் அதிகமான வனப்பகுதிகள் வடக்கு மாகாணத்தில் விடுவிக்கப் பட்டுள்ளது.

மீள்குடியேற்றத்திற்காக விடுவிக்கப்பட்ட நிலப் பகுதிகளில் அப்பாவி மக்கள் ஒழுங்கு முறையின் பிரகாரம் குடியேற்றப்படவில்லை. முன்னைய ஆட்சி யின் போது காணிகள் மீள்குடியேற்றத்திற்காகவே விடுவிக்கப்பட்டுள்ளன. எனினும் யுத்தத்தினால் பாதிக் கப்பட்ட மக்களுக்கு உரிய முறையில் காணிகள் கையளிக்கப்படவில்லை. இந்த விடயத்தில் அதிகாரிகள் தவறிழைத்துள்ளார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

2016 ஆம் ஆண்டுக்கான பொங்கல் விழாவில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதியவர்கள் யாழ்ப்பாணம் செல்லும் வேளையில் இராணுவம் வசம் உள்ள மேலும் 600 ஏக்கர் காணிகள் மீள்குடியேற்றத்துக்காக விடுவிக்கப் படவுள்ளன.

## இலங்கையில் ஐ.எஸ்.... (01ம் பக்கத் தொடர்)



சென்றார்கள் என்பதை தம்மால் சொல்ல முடியாமலிருப்பதாகவும் பாதுகாப்புச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

தற்போது 9 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 45 நபர்கள் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புடன் தொடர்புகளை வைத்துள்ளதாகவும், கிழக்கு மாகாணம், குருணாகல், கண்டி, கொலன்னாவை, தெஹிவளை பகுதிகளைச் சேர்ந்தவர்களே இக்குழுவில் இணைந்துள்ளதாகவும் புலனாய்வுப் பிரிவு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஜூலையில் அபூஷுரையா என்பவர் சிரியாவில் கொல்லப்பட்ட தாக சொல்லப்படுவதில் இருந்து இலங்கையில் ஐஎஸ் வேட்டை ஆரம்பித் துள்ளது. இதன் பின்னர் 16 இலங்கையர்கள் ஐஎஸ் இல் இணைந்துள்ளதாக தகவல் வெளியாகின.

இந்திய பாதுகாப்புத் துறை இலங்கையில் ஐஎஸ் ஏஜன்ட் இருப்பதாக கடந்த வாரம் கண்டுபிடித்துத் தெரிவித்திருந்தது. இதனைத் தொடர்ந்து இந்த ஏஜன்டைத் தேடுவதற்கான முயற்சிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இவர் கைது செய்யப்படும் பட்சத்தில் இந்த 36 பேரையும் தேடிக் கண்டுபிடிக்கும் வேட்டை ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மும்மொழிகளிலும் ... (01ம் பக்கத் தொடர்)

தோற்றிய புத்தளம் ஜனாதிபதிக் கல்லூரி மாணவன் ஜே.எம். மொஹமட் முன்சிப் தேசிய ரீதியில் இரண்டாவது நிலையில் சாதனை படைத் துள்ளார்.

சிங்கள மொழி மூலம் கலைப் பிரிவில் தோற் றிய கொழும்பு 07 சி.எம்.எஸ். (கிறிஸ்டியன் மிஷினரி )பெண்கள் கல்லூரி மாணவி பாதிமா அமீரா இஸ்மாயில் மூன்றாவது நிலையை பெற்றுள்ளார். நாடு முழுவதும் அனைத்துத் துறைகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொடுத்த பாடசாலைகளில் புத்தளம் ஜனாதிபதி கல்லூரி மாத்தி ரமே முஸ்லிம் பாடசாலை என்பதும் குறிப்பிடத்தக்கது. இதேவேளை கடந்த ஆண்டின் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் 10 வீத அதிக மாணவர் களை உள்ளீர்க்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர்தரத்தில் மேலதிகமாக தொழில்நுட்ப பாட நெறியும் உள்ளடக்கப்பட்டுள்ளமையால், இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மொஹான் சில்வா தெரிவித்துள்ளார்.

## ரிஸானாவும் இல்லை,... (01ம் பக்கத் தொடர்)



குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கான வாழ்வாதாரம் தேடியே தனது மகள் உயிரை ஈந்தாள். அவரது தந்தையின் தொழிலால் சீவிக்க முடியாது என்று தான் அவள் வெளிநாட்டுக்கு உழைப்பதற்காகச் சென்றாள். தற்போது ரிஸானாவும் இல்லை. எமது பிழைப்புக்கு வழியுமில்லை. ஏதேதோ தருவதாகச் சொன்ன வர்களை இன்றுவரை காணவுமில்லை என அவர் தெரிவித்தார்.

இராணுவத்தினர் வீடு கட்டித் தந்தார்கள். ஜனாதிபதி 10 இலட்சம் தந்தார். அதில் அடுத்த மகளுக்கு காணி வாங்கி அத்திவாரம் போட்டிருக்கிறேன். இது தவிர எந்த முஸ்லிம் அரசியல்வாதியும் எங்களது வீட்டுக்கு வந்து பார்க்கக் கூட இல்லை. தனது அமைச்சினூடாக பணம் தருவதாகச் சொன்ன முஸ்லிம் அமைச்சரின் பணம் எதுவும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. பணம் சேகரித்துத் தருவதாக சொன்ன மற்றுமொரு முஸ்லிம் கட்சியின் தலைவர் சேகரித்த பணம் எதுவும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. இது தொடர்பாக நான் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவிடமும் முறையிட்டிருக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.


கண்டி மடவளையில் பெண்களுக்கான

ENGLISH & LIFE SKILLS

4 Months Full Time

அரச அங்கீகார சான்றிதழ் மற்றும் ISO சர்வதேச சான்றிதழ் உட்பட 5 சான்றிதழ்கள் வழங்கப்படும்

- English Language (Special)
- Computer Application
- Pre- Marriage Counseling
- Cookery
  - Bakery Items
  - Cake Varieties
  - Rice Varieties
  - Sweets
- Dress Making (Cutting Method)
  - Shalwar
  - Blouse
  - Skirt
  - Habaya & More
- Self Employment Courses
  - Ribbon Embroidery
  - Brazilian Embroidery
  - Crochet
  - Doll Decorating
  - Patch Work & More
- Human Development
- Human Nutrition & Hazard
- Life Skills
- Motivation
- Psychology
- Sinhala Language
- Bridal Dressing
- Herbal Beauty Culture
- Social Media & Safety
- Tajweed , Ahlak , Tarbia உட்பட மேலும் சில இஸ்லாமிய பாடநெறிகள்

சிறப்பு தேர்ச்சி பெறும் மாணவிக்கு UK சான்றிதழ் வழங்கப்படும்

இப் பிரிவுக்கு குறிப்பிட்டளவு மாணவிகள் மாத்திரமே அனுமதிக்கப்படுவர்

Diploma in ENGLISH

அடிப்படையில் இருந்து கற்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்ட பாடநெறி

2 CERTIFICATES ISO சான்றிதழ் உட்பட

3 Months Mon - Sat 8.30 - 4.30

→ Grammar → Writing → Listening → Reading

பாதுகாப்பான வதிவிட வசதி

தினமும் 3 மணித்தியாலத்துக்கு அதிகமான பேச்சுப் பயிற்சி

Next Intake : FEB 1st

Hotline : 0777 877 966

EMERRAD Ladies Academy

36/3B | SIRIMALWATTA ROAD | MADAWALA BAZAAR | KANDY

M: 0777 71 71 29 T: 081 20 50 600



IT, Hardware , Networking, Web design 3 Months Course

Spoken English 8 Months Course

After O/L

DIPLOMA IN PRE SCHOOL TEACHER TRAINING (NURSERY TEACHING)

100% Government Recognition

G.C.E. A/L

G.C.E. O/L

யாருக்கு?

COURSE CENTERS THIHARIYA | COLOMBO | KANDY | BERUWELA

PSYCHOLOGICAL counselling

CONTENTS: Introduction to Psychology, Child Psychology, Teenage Psychology, Introduction to Counseling, Family Counseling & Successful Parenting

National Institute of Social Development (NISD)

O/L பரீட்சை எழுதியவர்கள்

A/L பரீட்சை எழுதியவர்கள்

6500/=

3 MONTHS

COURSE CENTER THIHARIYA | KANDY | KEKUNUGOLLA

DIPLOMA IN PHARMACY MANAGEMENT (PHARMACY COURSE)

QUALIFICATIONS

3S in Science / Maths in A/L (இவர்களுக்கு Medical Council இன் Pharmacy Licence பெறலாம்)

O/L பரீட்சை எழுதியவர்கள் (இவர்களுக்கு AGRA வின் Course Certificate வழங்கப்படும்)

Duration : 15 Months (Sat / Sun)

Centre : Thihariya

Medium : English & Tamil

Monthly Fee Rs.1500

THE GATEWAY TO IT FUTURE COMPUTER COURSES

MS OFFICE : Rs. 6000

GRAPHIC DESIGNING : Rs. 6500

WEB DESIGNING : Rs. 8500

THIHARIYA

A/L 2017 ARTS & COMMERCE TAMIL & ENGLISH MEDIUM

NURSING COURSE (Nursing Assistant)

THIHARIYA

முஸ்லிம் மாணவிகள் தங்களது கலாசார உடையுடன் பாடநெறியையும் பயிற்சியையும் தொடர முடியும். (Practical in Hospital)

1 வருடம் (Theory & Practical)

MONTHLY FEE 1700/= Admission Now

THIHARIYA

ÂGRA Institute

66/20C, Warapalana Road, Thihariya.

Tel : 0718 073797 / 0779 99 54 19

Email : agrainst@gmail.com

or SMS அனுப்பவும்



## ஒருநாள் சமையல் வகுப்பு

- வார்னாசி பிரியாணியும், மும்பாய் பிரியாணியும் (7 வகையான சுவையில் - கோழியிறைச்சி டிக்கா, கோழி குருமாவுடன் கூடிய ஏனையவை)
- செட்டிநாட்டு பிரியாணியும், முகல் பிரியாணியும் (7 வகையான சுவையில் - கோழி குருமாவுடன் கூடிய ஏனைய பதார்த்தங்கள் வகுப்பு சனிக்கிழமை)
- மும்பாய் இனிப்புப் பண்டங்கள் (7 வகையான இனிப்புப் பண்டங்கள் - வகுப்பு)
- அரேபிய உணவுகள் (சவர்மா, அரேபிய சோறு, கிரேக்கிய விஷேட உணவுடன் கூடிய கோஸ்லோவும் லஸ்ஸாக்னா - வகுப்பு)
- சுடச்சுட உறைப்பான குனாபா
- இனிப்புச் சுவையான குனாபா
- கேக் மற்றும் பிறந்தநாள் விழா கேக் - 3 வகையானவை
- பேஸ்டியுடன் கூடிய பனிஸ் வகைகள் - 7 வகையில்
- சைனீஸ் குஸீன்
- கப் கேக்ஸ் அலங்காரம் - 6 வகை
- டெஸட் மற்றும் புடிங் வகைகள் - 4 வகை
- இத்தாலிய குஸீன்
- மீன், இறால் சுவையில் - 7 விதமான உணவுகள். (மசாலா மீன் மோலி, இறால் பிலாஸான் மீன் மல்வானி, மீன் மன்சூரி, தக்காளி மீனும் கோன் கறியும், மீன் ஸ்டப்புடன் கிறில் மீன்.

கட்டணம் 1000 ரூபா மட்டுமே

நேரம்: காலை 9.30 முதல் 1.30 வரை

QUIZEEN

தொடர்புகளுக்கு: ஸஹாமா ஸவ்ஹர், 198, பன்சல வீதி, மருதானை, கொழும்பு. மொபைல் 0774302314

5 வகுப்புக்களுக்கு தொடர்ந்து வருகை தந்து சித்தி பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்படும்.

குறிப்பு: வெளிப் பிரதேச பெண்களுக்கும் மாணவிகளுக்கும் பிரத்தியேகமான விடுதி வசதி உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சியாளர்களின் அழுத்தங்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கவே அரசியலமைப்பொன்று தேவைப்படுகிறது



## சட்டத்தரணி லால் விஜேநாயக்க

(புதியதொரு அரசியலமைப்பு தொடர்பில் மக்கள் கருத்துக்களை பெற்றுக்கொள்ள நியமிக்கப்பட்டுள்ள குழுவின் தலைவர்)

நேர்காணல்: தரிது உடுவரகெதர - தமிழில்: ஆரா

***• அரசியலமைப்பு உருவாக்கத்தில் மக்களுடைய கருத்துக்களை வினவுவது, உங்களுடைய குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பாகும். தற்பொழுது உங்களுக்கு அவ்வேலைத் திட்டம் தொடர்பில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதா? அப்பணியை எவ்வாறு ஆரம்பிக்கவுள்ளீர்கள்?***

மக்களுடைய கருத்துக்களை வினவுவதற்கு, குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் அதன் செயற்பாடுகள் பற்றியும் தற்பொழுது எமக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இக்குழு பிரதமரினால் அமைச்சரவை தீர்மானமொன்றாக முன்வைக்கப்பட்டு நிறைவேற்றிக்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குழு உறுப்பினர்களுடைய பெயர்கள் எவ்வாறு முன்மொழியப்பட்டது என்பது பற்றி எமக்குத் தெரியாது. புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் மக்களுடைய கருத்துக்களை கண்டறிந்து, பிரதமர் தலைமையிலான அமைச்சரவை இணைப்புக் குழுவுக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதே எமது பொறுப்பு என்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

***• அரசியமைப்பு உருவாக்கம் தொடர்பில், பல்வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. புதியதொரு அரசியலமைப்பை ஏன் உருவாக்க வேண்டும் என யாராவது ஒருவர் கேட்டால் அதற்கு வழங்கப்பட வேண்டிய பதில் என்ன?***

நாட்டிலுள்ள பல்வேறுபட்ட இனவர்க்கங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஒதுக்கீடுகளுடன் கூடிய அரசியல் யாப்பொன்றை உருவாக்குதல் வேண்டும் என்பதை நாம் அனுபவவாயிலாகக் கண்டோம். இனங்களின் உரிமைகளை வாயால் மாத்திரம் பாதுகாப்பது பிரயோசனமில்லை. அரசியலமைப்பு அத்தியாயங்களுக்கூடாக சிறுபான்மையின் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். தேசிய பிரச்சினைக்கு தீர்வொன்று காணப்பட வேண்டும்.

1972 மற்றும் 1978 அரசியலமைப்புக்களை சிங்களவர்கள் மாத்திரமே ஏற்றுக்கொண்டார்கள். யாப்பென்பது, நாட்டின் சகல மக்கள் பிரிவினரும் ஏற்றுக்கொண்ட யாப்பாக அமைய வேண்டும். மறுபுறத்தில் சட்ட ஆதிக்கம் வலுவிழந்து போயுள்ளது. நிறுவனங்களின் சுயாதீன தன்மைகள் இழக்கப்பட்டுள்ளன. இந்நிலமைகள் மீள ஏற்படாமல் இருக்க அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டியுள்ளது.

மக்களுக்குரிய உரிமைகள் மாற்ற முடியுமான அமைப்பில் இருக்கக்கூடாது. 18 ஆவது சீர்திருத்தத்தின் மூலம் மக்களுடைய உரிமைகள் உறுவப்பட்டமையினை நாம் கண்டோம். மக்களுடைய அடிப்படை உரிமைகளை இல்லாமல் செய்ய முடியாதவாறு அரசியலமைப்பு உருவாக்கப்படல் வேண்டும். அவ்வாறானதொரு அரசியலமைப்பை எவ்வாறு உருவாக்கிக் கொள்வது என்பது பற்றியே நாம் மக்களுடன் கலந்துரையாடவுள்ளோம்.

அரசியலமைப்பொன்றை உருவாக்கும் உரிமையை ஆட்சியாளர்களுக்கு மாத்திரம் வழங்கிவிட முடியாது. ஆட்சியாளர்களின் அழுத்தங்களிலிருந்து மக்களை பாதுகாத்துக் கொள்ளவே அரசியலமைப்பொன்று அவசியப்படுகின்றது.

***• மக்களுடைய கருத்துக்களை வினவுவது அரசியலமைப்பொன்றை உருவாக்கிக் கொள்வதில் மாத்திரம் எவ்வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது?***

இது ஒரு முக்கியமானதொரு விடயம். முதலில் அரசியலமைப்பொன்று சட்டபூர்வமாக வேண்டும். 2/3 பெரும்பான்மையுடன் அல்லது தேவைப்பட்டால் மக்கள் கருத்துக் கணிப்பொன்றின் மூலம் அரசியலமைப்பொன்று சட்டபூர்வமாக நிறைவேற்றப்படுகின்றது. 1972 மற்றும் 1978 யாப்புக்கள் அதன்படி சட்டபூர்வமானதாகும். ஆனால், இவ்வரசியலமைப்புகள் உருவாக்கப்பட்ட பொழுது மக்களுடைய கருத்துக்கள் வினவப்படவில்லை. அதன் காரணமாக, சரியான தெளிவொன்று கிடைக்கவில்லை.

அரசியலமைப்பொன்று வெற்றிகரமானதாக அமைய வேண்டுமெனில், அது சட்டபூர்வமானதாக மாத்திரம் இருந்தால் போதாது. அதன் உருவாக்கம் சிறந்ததாகக் காணப்பட வேண்டும். இது எங்களுடைய அரசியலமைப்பென மக்கள் நினைக்க வேண்டும். அத்தகைய மக்கள் வரவேற்பை பெற்றுக்கொள்ளவே எமது குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் டொனமூர் ஆணைக் குழுவும் சோல்பரி ஆணைக்குழுவும் மக்களுடைய கருத்துக்களை வினவும் பணியை தொடர்ந்திருந்தது. சுதந்திரத்திற்கு பின்னர் எமது தேசம் சார்ந்த வகையில் உருவாக்கப்பட்ட இரண்டு அரசியல் அமைப்புக்களிலும் மக்கள் கருத்து வினவல் எனும் விடயம் கருத்தில் கொள்ளப்படவில்லை. அதனை மாற்றுவதற்கே இம்முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

அரசியலமைப்புக்குழு யாப்பு உருவாக்கம் தொடர்பில் கலந்துரையாடும் வேளையில் மக்களுடைய கருத்துக்களும் வினவப்படுகின்றது. தென் ஆபிரிக்காவிலும் கிராமத்துக்கு கிராமம் சென்று கருத்து வினவப்பட்டு, அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. மக்களிடமிருந்து நல்ல பல கருத்துக்கள் கிடைத்ததாக தென் ஆபிரிக்க அரசியலமைப்பு உருவாக்க குழு தெரிவிக்கின்றது.

அரசியலமைப்பு நிறைவேற்றப்பட்டு மக்கள் கருத்துக் கணிப்புக்கு விடப்பட்டதன் பின்னரே அது சட்ட அந்தஸ்து பெறும். மக்கள் கருத்துக் கணிப்பு இடம் பெறும் பொழுது அவர்கள் அதனை வித்தியாசமானதாக கருத வேண்டியதில்லை. மக்கள் மத்தியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களே யாப்பில் உட்பொதிந்திருக்கும்.

மக்களுடைய எல்லா கருத்துக்களும் இடம்பெறாமல் போகலாம். எல்லோரும் கூறியவிடயங்கள் அங்கு இடம்பெறாமல் போக வாய்ப்பிருக்கும். நாம் கடந்த காலம் பூராக மக்களுடைய கருத்து வினவல் நல்லதொரு விடயம் என்பதாகவே கூறி வந்தோம்.

***• இலங்கையிலுள்ள சாதாரண மக்கள் மத்தியில் அரசியலமைப்பு தொடர்பிலான புரிதல்கள் மிகக் குறைவல்லவா?***

பொதுவாக படித்தவர்கள் கூட அரசியலமைப்பு பற்றி தெரியாமல் உள்ளனர். பலர் அதனை வாசித்தது கிடையாது. உரிமைகளை பாதுகாப்பது தொடர்பிலான ஒழுங்குகளை மக்கள் அறியாமல் உள்ளனர். இது மேலிடத்திருந்து வந்த அரசியலமைப்பு என்பதுவே அதற்கான காரணமாகும்.

அரசியலமைப்புக்கு விளக்கம் கொடுக்கக் கூடியவர்கள் சட்டத்தரணிகள் என்பதாகவே மக்கள் நினைக்கிறார்கள். தென்ஆபிரிக்காவில் சிலர் அரசியலமைப்பை அச்சடிக்கப்பட்ட சிற்றேடாக தம்வசம் வைத்துக் கொண்டுள்ளார்கள்.

***• பொதுவாக எத்தகைய விடயங்களுக்கு கூடுதல் அவதானம் செலுத்த எதிர்பார்த்துள்ளீர்கள்?***

நிறைவேற்று அதிகாரம் சம்பந்தமாகவும், ஜனாதிபதி எவ்வாறு தெரிவு செய்யப்பட வேண்டும், அவருக்கு வழங்கப்படும் அதிகாரங்கள் என்ன? அவருடைய அதிகாரங்கள் கேந்திர (பக்.14)


Pre-Degree Course
இப்பாடநெறியின் மூலம் 5 தகைமைகளைப் பெறலாம்
Diploma in Computer studies
Diploma in Graphic designing
Diploma in Web designing
Diploma in Hardware
Diploma in English
3 Month Full Time
Weekly 05 Days 8:30 to 4:30
ஆங்கிலம் மற்றும் கணனிக் கல்வியை அடிப்படையில் இருந்து கற்கும் விதமாக வடிவமைக்கப்பட்ட பாடநெறியாகும்
பாடநெறி ஆரம்பம் Batch - 17 January - 11
02சர்வதேச UK+ ISOதரச் சான்றிதழ்கள் உட்பட 07 DIPLOMA சான்றிதழ்கள் வழங்கப்படும்
TOEIC City&Guilds EDFOCUS

Diploma in ENGLISH+IT with Skills Training
குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் கதைக்க வைக்கும் ஒரே பாடநெறி
02 Months
கணனி பயிற்சியுடன் கூடிய ஆங்கிலப் பாடநெறி
முழுநேர வதிவிட / வதிவிடமற்ற
தினமும் 03 மணித்தியாலத்துக்கு அதிகமான பேச்சுப் பயிற்சி
IT - MS-OFFICE HARDWARE COMP-ACCOUNTING
- WITH GRAMMAR - | Reading | Writing | | Listening | Speaking |
பாடநெறி ஆரம்பம்
53rd Batch Jan - 07
54th Batch Jan - 14
Weekly 06 Days 9:00 to 4:00
பாடநெறி முடிவில் சர்வதேச ISO தரச் சான்றிதழ் உட்பட 03 Diploma சான்றிதழ்கள் வழங்கப்படும்

DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
Contents
Petty cash& Day book
General ledger, journal
Bank reconciliation statement
Debtors and creditors ledger
Sales and purchase registers
Fixed asset registers
Inventory
Profit and loss accounts
Balance sheets
Payroll
LEARN 08 PACKAGES
MS Excel
MS Access
MYOB
Quick Books
ACCPAC
SAGE-50
Peachtree
Tally
Free Study Pack with Software CD
Duration: 1-3 Months Full Time/Part Time (Weekdays/Weekends)
Individual Classes

DIPLOMA IN AIRLINE TICKETING
Course Contents
Airline Ticketing
Air Fare Calculation
Airline Geography
Operation of a Travel Agency
Airline & Travel Terminology
Reservation Procedures
IATA International Regulations
Basics of GDS & Cargo
Individual classes also available
Duration: 1-3 Months Full Time/Part Time

Teacher Training Program in Kandy
Well qualified panel of Lecturers with American Qualification
DIPLOMA IN MONTESSORI TEACHER TRAINING -(AMI)
DIPLOMA IN CHILD PSYCHOLOGY
DIPLOMA IN PRE SCHOOL TEACHER TRAINING
PROFESIONAL ENGLISH
பாடநெறி முடிவில் 2 சர்வதேச சான்றிதழ்கள் உட்பட 5 சான்றிதழ்கள் வழங்கப்படும்.
6 மாதம் Weekends
With UK & Indian Accreditation
பாடநெறி ஆரம்பம் Batch 09 January - 24
TOEIC City&Guilds EDFOCUS

DIPLOMA IN AIR CONDITIONING & REFRIGERATION
A/C Repairing
Refrigeration repairing
House wiring
100% செயல்முறைகளுடன்
Start Jan - 12
01 Month [Full Time] - Weekly 05 Days

AUTO CAD Full Time / Part Time
G.C.E. O/L, A/L
Diploma in AUTO CAD
Diploma in 3D AUTO CAD
Advanced Diploma in AUTO CAD
INDUSTRIAL TRAINING CAN BE PROVIDED

ஆண், பெண் இருபாலாருக்கும் வெவ்வேறான தங்குமிட வசதிகள் உண்டு
GOLDEN COLLEGE
548, Peradeniya Road,Kandy.
No:126, Kandy Road, Thihariya
Kandy 0777 222 529
THIHARIYA 0777 222 528


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL

49, Sri Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258 077 222 7569
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

# நல்லாட்சி அரசின் முன்னேற்ற அறிக்கை

மக்களின் மிகுந்த எதிர்பார்ப்புடன் மலர்ந்த நல்லாட்சி அரசுக்கு இன்றுடன் ஒரு வருடம் பூர்த்தியாகிறது. யுத்தத்திலிருந்து நாட்டை மீட்டெடுத்து, அந்த நன்னம்பிக்கையை வைத்து நாட்டைச் சூறையாடிய குடும்ப ஆட்சி ஒழிக்கப்பட்ட நல்ல நாளாக மக்கள் இந்த நாளை நினைத்திருந்தனர்.

அடக்குமுறை, அராஜகங்களுக்கு எதிராகத் திரண்டெழுந்த மக்கள் மாற்றமொன்றை நாடி நல்லாட்சி அரசை ஆட்சியில் அமர்த்தினார்கள். ஒரு வருட காலம் முடிவதற்குள்ளேயே மக்கள் இந்த நல்லாட்சி அரசை ஓரக் கண்ணால் பார்க்கத் துவங்கியுள்ளார்கள்.

பொதுச் சொத்துக்களை வகை தொகையின்றி சூறையாடுதல், கணக்கு வழக்கின்றிய ஊழல் மோசடிகள் என நூற்றுக்கணக்கான குற்றச்சாட்டுக்கள் கடந்த அரசின் மீது சுமத்தப்பட்டிருந்தன. இந்த விடயங்களில் மக்கள் அதிருப்தியுற்றதனால்தான் மக்கள் ஆட்சி மாற்றத்தை வேண்டியிருந்தார்கள். இவ்வளவும் நடந்து ஒரு வருட காலமாகியும் இதுவரை எந்த ஊழல் பேர்வழிகளுக்கு எதிராக எந்த விதமான சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படாமல் இருப்பது மக்களை ஏமாற்றத்துக்குள்ளாக்கியிருக்கிறது.

தேர்தல் பிரச்சாரங்களுக்காக இ.போ.ச. பஸ்களை பயன்படுத்தியமை, அரச இலத்திரனியல் ஊடகங்களை துஷ்பிரயோகம் செய்தமை, விமானப் படையின் ஹெலிகொப்டர்களை சொந்தப் பாவனைக்கு எடுத்தமை போன்ற கண்ணுக்குப் புலப்படக் கூடிய குற்றங்களை யாவது விசாரணைக்கு எடுத்திருக்கலாம். இது தொடர்பில் நல்லாட்சி அரசு மெத்தனமாக நடந்து கொள்வது நல்லாட்சி அரசிலும் கள்வர்கள் இருப்பதனாலா என்ற கேள்வி தற்பொழுது எழுப்பப்பட்டு வருகிறது.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறை நாட்டிலிருப்பதன் மோசமான விளைவுதான் ராஜபக்ஷக்களின் அத்துமீறலுக்குக் காரணம் எனவும், இதற்கு முன்னர் பலரும் உறுதிமொழி அளித்ததைப் போலன்றி தனது முதல் நூறு நாட்களிலேயே இதனை ஒழித்துவிடுவது என்றும் மக்கள் நம்பும்படியாக வாக்குறுதியளிக்கப்பட்டது. ஆனால்தான் அதிகாரத்திலிருக்கும் வரைக்கும் இது ஒழிக்கப்படப் போவதில்லை என ஜனாதிபதியே கூறியிருப்பது மக்களது எதிர்பார்ப்பில் மண்ணை வாரிப் போட்டுள்ளது.

30 பேர் கொண்ட அமைச்சரவை என மக்களுக்கு ஆர்வமூட்டி விட்டு ராஜபக்ஷவின் சாதனை படைத்த அமைச்சரவை போல பாரிய அமைச்சரவை உருவாக்கப்பட்டுள்ளது. அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிப்பால் மக்களது பணம் வீணாகக் கொட்டப்படுகிறது என்று இப்போது யாரும் வாய் திறப்பதில்லை. தேர்தலில் தோற்றவர்களுக்குக் கூட நல்லாட்சி அரசாங்கத்தில் அமைச்சுப் பதவி வழங்கப்படுகிறது.

இத்தனைக்கும் மத்தியில் ராஜபக்ஷ காலத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த இனவாத, முஸ்லிம் விரோதச் செயற்பாடுகளுக்கு எதிராக முஸ்லிம் சமூகம் ஒட்டுமொத்தமாகத் திரண்டு வந்து மைத்திரி அரசை அரியணையில் ஏற்றியது. இனவாதிகளிடம் இருந்து பாதுகாப்பையும் நிம்மதியான வாழ்வையும் முஸ்லிம் சமூகம் எதிர்பார்த்தது.

இனவிரோத கருத்துக்கள் பேச இடமளிக்கப்பட மாட்டாது என அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் காற்றோடு கலந்து விட்டன. முஸ்லிம்களுக்கு எதிரான பொதுபல சேனாவின் செயற்பாடுகளில் எந்தக் குறைவும் ஏற்படவில்லை. புதிதாக முளைத்துள்ள சிங்ஹலேக்கு எதிராகவும் எந்த நடவடிக்கையும் இல்லை.

இவற்றை இல்லாதொழிப்பதற்கு மாற்றமாக இனரீதியான பாடசாலைகளை ஒழிப்பது சம்பந்தமாக நல்லாட்சி பேசி வருகிறது. அரசின் வெளிநாட்டுக் கொள்கைகள் காரணமாக முஸ்லிம்கள் மட்டுமன்றி மனிதநல செயற்பாட்டாளர்கள் பலரையும் அரசு சந்தேகக் கண்கொண்டு பார்க்கத் தூண்டியுள்ளது.

இந்த நிலையில்தான் நல்லாட்சி அரசு தொடருமானால் அது மக்களை விட்டுத் தூரமாக வேண்டியேற்படும். மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்படாமல் போகுமிடத்து அரசாங்கம் மக்களின் அதிருப்தியை சம்பாதித்துக் கொள்ள நேரும்.

மக்களின் சக்தி பலமானது என்பதை உலக அரங்கின் நிகழ்வுகள் தெளிவுபடுத்தி வருகின்றன. இந்த வகையில் தனக்கு மேலுள்ளவர்களின் திருப்தியை விட தனது குடிமக்களின் திருப்தியை வெல்வதற்கு நல்லாட்சி அரசு முன்வர வேண்டும்.

# சிங்கள பௌத்த மதம் மஹாவம்சத்தின் திரிபு

**திஸரணி குணசேகர**

தமிழில் - ஹெட்டி ரம்ஸி

''ஒருகுழுவின் பகைமை ஏனையவர்களின் பகைமைக்கு வழிகோலலாம்''
- அமிர்தியாசென்
('வாதம்புரியும் இந்தியர்கள்' என்னும் நூலிலிருந்து)

இலங்கையில் புனை கதைக்கும் வரலாற்றுக்குமிடையிலான எல்லைக்கோடு, மிகப் பயங்கரமான முறையில் ஒழுங்கற்றுப் போயுள்ளது. இலங்கையின் அரசியலில் அத்தகைய இருள் உலகம் வகிக்கும் பாத்திரம் மிகவும் தீர்மானமிக்கதாகும்.

இந்து-ஆர்ய இளவரசியொருத்தி சிங்கமொன்றுடன் ஓடிச் சென்றதனால் தோற்றம் பெற்ற இனமொன்றிற்கு தாம் சொந்தமுடையவர்கள் என்பதாக சிங்களப் பாடசாலைகளில் மாணர்களுக்கு போதிக்கப்படுகின்றது. மாணவர்கள் இதனை கதை வடிவிலான பாடமொன்றாக அல்லாமல் வரலாற்றுப் பாடமொன்றாகவே கற்கின்றார்கள்.

பெரும்பான்மையான பௌத்த சிங்களவர்கள் புனிதமானதொரு வரலாற்று நூலாக போற்றி வழிபடுகின்ற மஹாவம்சத்திலேயே இத்தகைய சிங்கம் பற்றிய புனை கதை இடம்பெற்றுள்ளது. மேற்குறிப்பிட்ட இளவரசியினதும் சிங்கத்தினதும் பேரப்பிள்ளையான விஜயனை சிங்கள இனத்தின் நிறுவுனராக மஹாவம்சம் குறிப்பிடுகின்றது.

மஹாவம்சத்தின்படி, விஜயன் முரட்டுத்தனமான இயல்புடையவர். விஜயனும் அவனுடைய சகபாடிகளும் வன்முறைகளிலும் குற்றங்களிலும் ஈடுபட்டு வந்ததனால் தந்தை அரசனுக்கு, விஜயனோடு அவர்கள் எல்லோரையும் நாடு கடத்த நேர்ந்தது.

புராணக் கதையில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி, இவ்வாறு நாடு கடத்தப்பட்ட விஜயனும் அவனுடைய தோழர்களும் தமது கடல் வழிப் பயண இறுதியில் புத்தபெருமான் பரிநிர்வாணமடைந்த தினத்திலேயே இலங்கையில் தரையிறங்குகிறார்கள். மஹாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி, புத்தபெருமான் பரிநிர்வாண தருவாயில் இருந்து கொண்டு, தெய்வங்களுக்கு அதிபதி சக்கர தேவேந்திரனை அழைத்து பின்வருமாறு உபதேசித்துள்ளார்.


''லால தேசத்திலிருந்து சிங்க பாகு அரசனின் புதல்வரான விஜயன், 700 ஆதரவாளர்கள் புடைசூழ இலங்கை வந்தடைந்துள்ளார். இலங்கையில் அவர்கள் எனது மதத்தை நிறுவுவார்கள். அதனால், சக்கரதேவனே! பரிவாரங்களுடன் வந்தடைந்துள்ள விஜயனையும் இலங்கையையும் பாதுகாத்திடுங்கள்.''

இவ்வகையில், புனிதத் தன்மை பெற்ற வாய்ப்பொன்றுக்காக தெரிவுசெய்யப்பட்ட இனமொன்றினது போலியான நம்பிக்கைகள் (பொய்மைகள்) மஹாவம்சத்திலிருந்து உருவானது. இலங்கையில் விருந்தோம்பல் பண்பாட்டுக் கருத்தின் (விஜயனை உபசரித்தல்) அடிப்படையாக இருப்பது இப்போலியான நம்பிக்கைகளாகும்.

இதன் பிரகாரம், இலங்கை சிங்கள பௌத்தர்களுக்கே உரித்தாகும்; அதன் உண்மையான ஒரே சொந்தக்காரர்கள் அவர்களாவர்; எந்த வழிமுறையிலேனும் தீங்குகள், தொந்தரவுகள், அழிச்சாட்டியங்களை புரிந்தாவது இந்த புனிதச் சொத்தை பாதுகாக்க வேண்டியுள்ளது.

புத்தரின் போதனைகளில் புனித யுத்தமொன்று பற்றிய கோட்பாடொன்றில்லை. மதத்தை அல்லது அதைப் பின்பற்றுகின்றவர்களை பாதுகாப்பதற்காக வேண்டி தீங்குகளை செய்வது, பலாத்காரம் புரிவது போன்ற விடயங்கள் புத்தரின் போதனைகளில் இல்லை. விலங்கொன்றினை கொல்வதற்குக் கூட எவ்வகையிலேனும் அனுமதியொன்றில்லாத மதத்தில் 'பௌத்த மதத்தை பாதுகாப்பதற்காக வேண்டி' மனிதர்களைக் கொல்வதை நியாயமானதாக்க வேண்டும் என்றால் அம் மதத்தில் முக்கியமான புதிய அத்தியாயமொன்றை இணைத்துவிட வேண்டியிருந்தது.

பௌத்த துட்டகைமுனுவுக்கும் இந்து எல்லாளனுக்குமிடையில் அரசியல் ஆதிக்க அதிகாரத்திற்காக வேண்டி புரியப்பட்ட யுத்தத்தை 'சிங்களத்தின் புனித யுத்தம்' ஒன்றாக




கொண்டுவந்ததன் மூலம் மஹாவம்சத்தின் ஆசிரியர் வரலாற்றையே திரிபுபடுத்தி விட்டார்.

மஹாவம்சத்தின் பிரகாரம், எல்லாளன் மனிதர்களினதும் தெய்வங்களினதும் பாராட்டுதலுக்கு பாத்திரமான நேர்மையான அரசனொருவன்; அவன் சிறந்ததொரு நேர்மையான ஆட்சியாளன்; அதுவல்லாமல் வன்முறைச் சுயரூபமிக்க திருட்டுச் செயல்களுக்கு அடிபணிந்த ஆக்கிரமிப்பாளன் ஒருவனோ அல்லது அரச கொடும் பாதத்தினால் மக்களை மிதிக்கும் கொடிய ஆட்சியாளன் ஒருவனோ அல்ல.

ஆனால் எல்லாளனின் இத்தகைய பாராட்டுதல் குணாதிசயங்களுக்கு எவ்வித முக்கியத்துவங்களும் பொருத்தப்பாடுகளும் இல்லை. ஏனெனில் அவன் பிற சமயத்தைச் சார்ந்த மத நம்பிக்கையாளன் என்பதன் காரணத்திலாகும். அதனால் சிங்கள பௌத்த மதத்தையும் அதற்காக வேண்டி தெரிவு செய்யப்பட்ட தேசமான இலங்கையையும் வெளி எதிரிகளிடமிருந்து பாதுகாக்கும் புனித திட்டத்தின் கட்டாயமான ஓர் அங்கமாக எல்லாளனை விரட்டியடிக்க வேண்டியிருந்தது; கொலை செய்ய வேண்டியிருந்தது.

மஹாவம்சத்தின் நட்சத்திரம் துட்டகைமுனு ஆவான். இவனுக்குப் பின் ஆட்சிக்குவந்த சகல மன்னர்களினதும் தரத்தை உருவாக்கிய சிங்கள பௌத்த மதத்தின் வீர அரசன் அவனாவான். மஹாவம்சத்தின் பிரகாரம் விரிந்து செல்லும் அவனுடைய வாழ்க்கை சரிதத்தில் உள்ள மிகவும் யதார்த்தமான, மானிட தெய்வத்தன்மை வாய்ந்த தனிச் சிறப்பம்சங்களுக்குரிய கலவைகளை, நவீன யுக இலங்கைக்குள்ளும் நிஜமான வரலாறொன்றாகக் காட்டப்படுகின்றது.

தெய்வீ முறையில் கர்ப்பம் தரித்ததாகக் கூறப்படுகின்ற துட்டகைமுனுவுக்கு நாடெங்கும் பௌத்த ஆட்சியை ஸ்தாபிக்கும் தெய்வீகப் பொறுப்பொன்று ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. 'பௌத்த அருள்' தொடர்பில் போலியான கதைப் பின்னலுக்கூடாக விருந்தோம்பல் அதாவது விருந்தினர்களை உபசரிக்கும் சிந்தனை நோக்குடைய அடிப்படையொன்று வழங்கப்படுவதோடு, அவ்வகையில் நிலவும் சட்ட திட்டங்களை மீறுகின்ற விருந்தினர்களை எவ்வகையில் கவனிக்க வேண்டும் என்பது தொடர்பில் துட்டகைமுனு கதைப் பகுதிக்கூடாக எடுத்துக் காட்டப்படுகின்றது.

கருவிலுள்ள சிசுவினைப் போன்று உறங்கிக் கொண்டிருப்பது ஏன் என தாயார் வினவியதற்கு, துட்டகைமுனு இளவரசர் அளித்த பதில், பூமியில் உயிர் வாழ்வது தொடர்பில் சிக்கல்களை காட்டும் விதமாக உள்ளது. ''தாயாரே! வீட்டுக்கு அப்பால் தமிழர்கள் உள்ளார்கள். மறுபுறத்தில் பெரும் கடல் உள்ளது. நான் எப்படி கை கால்களை விரித்து சுகமாக உறங்குவது?''

அத்தோடு, இளவரசர் துட்டகைமுனுவை பிரசவிக்கும்போது அவருடைய தாயார் விகாரமஹாதேவிக்கு கனவில் உதித்த மூன்று கற்பனை ஆசைகள் (கனவுகள்) தொடர்பிலான கதையில் எதிரி இனங் காணப்படுகின்றார். தன்னுடைய கணவனான அரசனிடம் அக் கற்பனைகளில் ஒன்றை அவள் பின்வருமாறு கூறுகிறாள்: ''இலங்கைத் தீவிலுள்ள வனப்பு மிகு அநுராதபுரத்தில் எல்லாள அரசனின் முதன்மைக் காவலாளியான இராட்சத அரக்கனின் தலை யைக் கொய்து வாள்மீது நட்டி தங்கப் பாத்திரத்தில் நீரூற்றி அதை அவ்வரக்கனின் தலைமீது நின்று கொண்டு அருந்துவேன்.''

இக்கனவு தொடர்பில் அரசன் குறி சொல்பவர்களிடம் வினவினான். அதற்கு அவர்கள் ''தெய்வமே! உங்களுடைய புதல்வர் (துட்டகைமுனு) தமிழர்களைக் கொன்று தேசத்தை ஒன்றுபடுத்தி பௌத்த சமயத்தை ஒளிரச் செய்வார்'' என்று கூறினார்கள்.

யுத்தத்தின்போது தனது கரங்களால் கொல்லப்பட்ட எதிரிகளின் உயிர்தொடர் பில் துட்டகைமுனு அரசனுக்குள் ஏற்பட்ட மன உளைச்சல் தொடர்பில் கேள்வியுற்ற துறவிகள் 8 பேர் அரசனின் உள்ளத்தை ஆற்றுப்படுத்த செய்த உபதேசம் 'சிங்கள புனித யுத்தம்' பற்றிய சிந்தனைக்கு உதாரணமாக உள்ளது. அவர்கள் புரிந்த உபதேசம் பின்வருமாறு உள்ளது.

''அரசனே! பயப்படாதீர். பௌத்தத்திலும் அதன் மும்மணிகளிலும் உள்ள எவராவது இந்த உலகத்தில் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் மனிதர்களாவர். இம் முன்வினைச் செயல்கள் உங்களுடைய சுவனப் பாதைக்கு பாதிப்பு ஏற்படுத்தப் போவதில்லை. போர்க்களத்தில் லட்சோப லட்ச படையணிக்கிடையில் ஒன்றரை மனிதர்களே கொல்லப்பட்டார்கள். அதில் ஒரு தரப்பினர் பேணுதலுடையவர்கள். மறுதரப்பினர் ஐம்பெரும் பாவச் செயல்களை விட்டும் விலகி இருப்பவர்கள். ஏனையவர்கள் மூடநம்பிக்கைகள் கொண்ட துர்க்குணமிக்கவர்கள்; அவர்கள் மிருகங்களை ஒத்தவர்கள்.''

கௌத்தம சித்தார்த்தரின் (புத்தரின்) பௌத்த மதம் சிங்கள பௌத்த மதமாக பெயர்க்கப்பட்ட சந்தர்ப்பம் அதுவாகும். அது மஹாவம்சம் என்னும் நூலிற்கூடாக உருவாக்கப்பட்ட புதிய மதமாகும். இப்புதிய மதத்திற்குள் போலி நம்பிக்கையாளர்களுக்கு எதிரான யுத்தம் பாவமற்ற புனித முன்வினைப் பயனொன்றாக அர்த்தம் கொடுக்கப்பட்டது. அது சிலுவை யுத்தம், ஜிஹாத் போராட்டங்களுக்கு ஒப்பானதாக விண்ணுலகப் பேரின்பத்தை நேரடியாக அடைந்துகொள்ளக் கூடிய மார்க்கமொன்றாகக் கொள்ளப்பட்டது.

(பக். 14)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆட்சியின் ஒரு வருட நிறைவும்

# புதிய கல்விக் கொள்கையும்



றவூப் ஸெய்ன்



நல்லாட்சி அரசியல்

நல்லாட்சி அரசாங்கத்தின் ஒரு வருட நிறைவில் ஆட்சி குறித்து ஒரு பக்கம் காரசாரமான விமர்சனங்களும், இன்னொரு புறம் நல்லாட்சியின் சாதகமான அம்சங்கள் குறித்த புகழுரைகளும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை அரசும் (State) சிவில் சமூகமும் சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து எதிர்கொள்ளும் மிகப் பெரும் பின்னடைவு; இலங்கைக்கு என நிலையான பொருளாதார, கல்வி, வெளியுறவுக் கொள்கையொன்று இல்லை என்பதே. அயல் நாடான இந்தியாவுடன் ஒப்பிடுகையில் இலங்கை எதிர்கொள்ளும் பாரிய பின்னடைவே இது என்பதில் சந்தேகமில்லை.

ஏனெனில், எந்த அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்தாலும் கொள்கை வகுப்பாளர்கள் தூர நோக்கோடும் எதிர்கால சிந்தனையோடும் வரைந்துள்ள தேசியக் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இலங்கையில் அத்தகைய தொரு கொள்கைச் சட்டகம் (Policy Frame work) உள்ளதா என்பது கேள்விக்குறி.

ஒரு அரசாங்கம் மாறும்போது எல்லாமே தலைகீழாய் மாறிவிடக் கூடிய ஆபத்தே இங்கு நிலவுகின்றது. ஓர் அரசாங்கம் அதிகாரத்தை நீடிப்பதற்கு சொகுசானதும் வசதியானதுமான கொள்கைகளை அவ்வப்போது வெளியிடுவதும் தேர்தல் விஞ்ஞாபனமாக அவற்றை முன்நிறுத்துவதுமாக காலத்தைக் கடத்துகின்றது.

அடுத்த முறை அதிகாரத்திற்கு வரும் இன்னொரு அரசாங்கம், அதற்கு மாற்றமான கொள்கையொன்றை அறிமுகம் செய்கிறது. இவ்வாறு மாறி மாறி வரும் அரசாங்கங்கள், தேசத்தின் நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கு (Sustainable Development) ஏற்ற, நிலையான கொள்கையொன்றை வகுப்பதில்லை என்பது துரதிஷ்டமே.

அரசாங்கங்கள் மாறலாம். ஆனால், நாட்டின் தேசியக் கொள்கைகள் மாறக் கூடாது. இலங்கையில் இன்றைய கல்வித் துறை எதிர்கொண்டுள்ள பின்னடைவுகள், கொள்கை வகுப்பிலுள்ள கோணலையே பிரதிபலிக்கின்றது. கடந்த பத்தாண்டுகளில் இலங்கையில் நடந்த, அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களிலும், வீதி மறியல் போராட்டங்களிலும் அநேகமானவை மாணவர்களாலும் பல்கலை விரிவுரையாளர்களினாலுமே மேற்கொள்ளப்பட்டவை.

பாடசாலைக் கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி வரை கல்வித் துறையானது பாரிய சீர்திருத்தமொன்றை வேண்டி நிற்கின்றது. இத்தகைய ஒரு சூழ்நிலையில், மைத்திரி-ரணில் அரசாங்கத்தின் ஒரு வருட நிறைவில் கல்வித் துறையில் சீர்திருத்தத்திற்கான சில சமிக்ஞைகள் வெளிப்படத் தொடங்கியுள்ளமை ஆரோக்கியமானதே.

தேசிய கல்வி நிறுவகமும் கல்வி அமைச்சும் வெளியிட்டுள்ள 2016-2020 கல்விக் கொள்கை தொடர்பான அறிக்கை கல்வித் துறையில் குறிப்பிடத்தக்க கொள்கை மாற்றம் நிகழப் போகின்றது என்பதை எதிர்வுகூறுகின்றது.

### பாடசாலைக் கல்வி

பாடசாலைக் கல்வியில் சில முக்கிய சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு கொள்கையளவிலான உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. இதுவரை இலங்கையில் காணப்பட்ட 9 வருடக் கட்டாயக் கல்வி 13 ஆண்டுகளாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதாவது உயர் தரம் வரை ஒரு இலங்கை மாணவன் முறைசார் கல்வியைப் பெறுவது கட்டாயமாக்கப்படுகின்றது.

இந்தியாவில் இது 5 ஆண்டுகளாகவும் சீனாவில் 7 ஆண்டுகளாகவும் இருக்கின்றது. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் 13 ஆண்டு காலக் கல்வி கட்டாயமானது. விதிவிலக்காக சில நாடுகள் உள்ள போதும், பெரும்பாலான வளர்ச்சியடைந்த நாடுகளில் 13 ஆண்டு கட்டாயக் கல்வி நடைமுறையில் உள்ளதை அவதானிக்கலாம். இந்த வகையில் இது ஒரு சாதகமான சீர்திருத்தமாகும்.

அதேபோன்று கல்விக்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு 6 வீதமாக உயர்த்தப்படவுள்ளது. தெற்காசியாவில் இந்தியா உள்ளிட்டு, அனைத்து நாடுகளிலும் போல் கல்வித் துறைக்கான ஒதுக்கீடு அதிகபட்சம் 4% ஆகவே இருந்து வருகின்றது. 6% உயர்த்தப்படுவதானது கல்வித் துறையிலுள்ள பாரம்பரிய சவால்களையும் பௌதிக வளத் தட்டுப்பாடுகளையும் நீக்குவதற்குப் பெரிதும் உதவும் என்று நம்பலாம்.

| இலங்கையிலுள்ள பாடசாலைகள் பற்றிய அடிப்படைத் தகவல்கள் | |
|---|---|
| மொத்தப் பாடசாலைகள் | 10,119 |
| தேசிய பாடசாலைகள் | 352 |
| மாகாண பாடசாலைகள் | 9762 |
| **இன ரீதியாக** | |
| சிங்களப் பாடசாலைகள் | 6928 |
| தமிழ் பாடசாலைகள் | 2253 |
| முஸ்லிம் பாடசாலைகள் | 938 |
| **பிரதேச ரீதியாக** | |
| நகர்ப் புற பாடசாலைகள் | 1116 |
| கிராமப் புற பாடசாலைகள் | 8160 |
| பெருந்தோட்டப் புற பாடசாலைகள் | 643 |

கல்வியமைச்சின் அறிக்கையின்படி இலங்கையில் மொத்தமாக 10,119 பாடசாலைகள் உள்ளன. அதில் 3000 பாடசாலைகளே எல்லா வசதிகளையும் கொண்டு காணப்படுகின்றது. பெரும்பாலான பாடசாலைகளில் பாரியளவிலான பௌதிக வளத் தட்டுப்பாடுகள் நிலவுகின்றன. கல்விக்கான ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட்டால் பாடசாலைகளை பௌதிக ரீதியில் மேம்படுத்துவதற்கான வாய்ப்பு அதிகரிக்கும்.

இலங்கையில் நடைமுறையிலுள்ள பாடசாலைக் கல்வி வெறுமனே பரீட்சை மையக் கல்விமுறையாகவே இருந்து வருகின்றது. ஆரம்ப நிலை வகுப்பறைகள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்படுத்துகின்றன. இடைநிலை வகுப்புகள் சாதாரண தரப் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார் செய்கின்றன.

நினைவாற்றலையும் கிரகித்தல் திறனையுமே சோதிப்பதாகவே இந்தக் கல்வி முறை அமைந்துள்ளது. தலைமைத்துவ திறன்கள், புத்தாக்கம், தொடர்பாடல் திறன் போன்றவற்றை வளர்ப்பதற்கான வாய்ப்பை, நிலவும் கல்வி முறை தடுப்பதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து கல்வி அமைச்சு கவனம் செலுத்தி வருகின்றது. இதுவும் ஒரு ஆரோக்கியமான திருப்பமே.

தகவல்களை சேமிக்கும் களஞ்சியங்களாக மட்டும் மாணவர்களை மாற்றாமல், தேசத்தைச் சுமக்கின்ற ஆளுமைகளாகவும் அவர்களை மாற்ற வேண்டும் என்ற அக்கறை கல்வித் துறையில் துளிர் விடுகின்றது. இது வரவேற்புக்குரியது.

இலங்கை பல்லின சமூகங்களைக் கொண்ட நாடு. சமூகக் குரோதங்கள் கடந்த காலங்களில் மூன்று தசாப்த




போருக்கு இட்டுச் சென்றது. எமது பாடசாலைக் கல்வியினூடாக இனங்களுக்கிடையில் சமாதானத்தையும் சௌஜன்யத்தையும் உருவாக்குவதற்கான பொறிமுறை ஒன்று கண்டடையப்பட வேண்டும் என கல்வியியலாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர். இப்போது பாடசாலைகளில் சமாதானக் கல்வியையும் உள்ளீர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க இது குறித்து விசேட கவனம் செலுத்தி வருகின்றார்.

இலங்கையில் நடைமுறையிலுள்ள பாடத்திட்டத்தில் சமாதானம் குறித்த கலைத் திட்டமொன்றும் உள்வாங்கப்படவுள்ளது. நீடித்த சமாதானம் கல்வியின் விழுமியமாகக் கருதப்படுவது நம்பிக்கைக்குரிய மாற்றமாகும்.

பாடசாலைக் கலைத் திட்டம் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை மாற்றப்படவுள்ளது. மாணவர்களின் அறிவை இற்றைப்படுத்துவதே இதன் நோக்கம். தற்போது தரம் ஒன்று முதல் 13 வரையான பாடசாலை கலைத் திட்டம் 8 ஆண்டுகளுக்கு ஒருமுறையே மாற்றத்திற்கு உள்ளாகின்றன. வேகமான மாற்றங்களை உள்வாங்கும் வகையில் இது 4 வருடங்களுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படும் என கல்விக் கல்லூரி பணிப்பாளர் பேராசிரியர் குணபால நாணயக்கார கருத்து வெளியிட்டுள்ளார்.

8 வருடங்களுக்கு ஒரு முறை மாற்றப்படும்போது, பல விடயங்கள் காலாவதியாகி விடும். விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகள் இதற்குப் பொருத்தமான உதாரணமாகும். இதனைக் கருத்திற் கொண்டு பல்வேறு துறைகளைச் சேர்ந்த 20 பேர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அது எதிர்கால கலைத் திட்ட மாற்றம் பற்றிய கொள்கைச் சட்டகமொன்றை வரையவுள்ளது எனவும் குணபால கூறுகிறார்.

தனியார் பாடசாலைகளை அரச கண்காணிப்பு முகாமைத்துவத்தின் கீழ் கொண்டு வருவது இன்றுள்ள உடனடித் தேவையாகும். குறிப்பாக சர்வதேசப் பாடசாலைகளின் தராதரங்களை மேம்படுத்துவதற்கும் கல்வியை தரப்படுத்துவதற்கும் அரசாங்கத்தின் தலையீடு அவசியமாகும். இது குறித்தும் கவனம் செலுத்தப்படுவதாக அரசாங்கம் தெரிவிக்கின்றது.

### பல்கலைக்கழகக் கல்வி

புதிதாக பல்கலைக்கழகங்களை ஸ்தாபித்தல் தொடர்பாக உயர் கல்வி அமைச்சு தெளிவாக எந்தக் கொள்கையையும் முன்வைக்கவில்லை. ஆனால், தனியார் பல்கலைக்கழகங்களை ஸ்தாபிப்பதற்கு அரசாங்கம் தொடர்ந்தும் அனுமதியளித்து வருவது கல்வித் துறை சார்ந்தோரிடையே பெரும் மனக் கிளர்ச்சியை உருவாக்கி வருகின்றது. இருக்கும் பல்கலைக்கழகங்களில் பீடங்களை அதிகரித்தல் தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 2016 இல் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயாராகின்றது.

2016 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை அரச பல்கலைக்கழகங்களில் அனைத்து வகைப் பீடங்களையும் (Faculties) ஸ்தாபிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளதாக அதன் தலைவர் பேராசிரியர் மொஹான் டி சில்வா தெரிவித்துள்ளார். முதற்கட்டமாக வயம்ப பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் நிறுவப்படவுள்ளது.

பல்கலைக்கழகங்களில் தேவையான பீடங்களையும் முற்றிலும் புதிய பீடங்களையும் உருவாக்குவதற்கு ஏற்கனவே 2000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், ஆசிய அபிவிருத்தி வங்கி இதற்கு மேலதிகமான ஒரு தொகையை ஒதுக்கவுள்ளதாகவும் மொஹான் டி சில்வா கூறுகிறார்.

வயம்ப மருத்துவ பீட மாணவர்களின் வசதிக்காகவும் மருத்துவ பயிற்சிக்காகவும் குருநாகல, குளியாப்பிட்டிய வைத்தியசாலைகள் மேலும் தரம் உயர்த்தப்படவுள்ளது. இப்பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்திற்கு 100 மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர். மருத்துவ பீடங்களை அதிகரிப்பதற்கான காரணம், நாட்டில் வைத்தியர்களுக்கும் எந்திரவியலாளர்களுக்கும் தட்டுப்பாடு நிலவுவதே எனக் கூறப்படுகின்றது.

இதேபோன்று யாழ் பல்கலைக்கழகத்துடன் இணைந்த வகையில் கிளிநொச்சி வளாகத்தில் தொழில்நுட்பத் துறைக்கான தனியான பீடமொன்று ஸ்தாபிக்கப்படவுள்ளது. இலங்கையின் பல்கலைக்கழக கல்வி வரலாற்றில் இது போன்ற பீடமொன்று ஸ்தாபிக்கப்படுவது இதுவே முதன்முறையாகும். இப்பீடத்தில் நான்கு விரிவான கற்கைகள் இடம்பெறவுள்ளன. எந்திரவியல் தொழில்நுட்பம், உயிரியல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் நனோ தொழில்நுட்பம் என்பனவே அவை.

கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் தொழில்நுட்பப் பீடமொன்று உருவாக்கப்படவுள்ளது. இங்கு Quantity Surveyng துறையில் BSc பட்டம் வழங்கப்படவுள்ளது. ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலும் தொழில்நுட்ப பீடம் உருவாக்கப்படவுள்ளது. அதில் சிவில் எந்திரவியல், கணினி எந்திரவியல், இலத்திரனியல் எந்திரவியல், மின் எந்திரவியல் போன்ற கற்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. துறைவாரியாக மாணவர்கள் விஷேட நிபுணத்துவம் பெறும் வகையில் பல்கலைக்கழகக் கல்வியில் மாற்றங்களை ஏற்படுத்தவுள்ளதாக மானியங்கள் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

இதுபோன்று பாடசாலைகளில் ஒழுக்கத்தைப் பேணவும் மாணவர்களிடையே பரவி வரும் போதைவஸ்துப் பாவனையை இல்லாதொழிக்கவும் அரசாங்கம் பாரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. உயர் தரத்தில் கற்கும் மாணவ, மாணவிகளை HIV பரிசோதனைக்கு உட்படுத்தும் திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்துகின்றது. அதேபோன்று கல்வியமைச்சின் கீழ் போதைவஸ்துப் பாவனைக்கு எதிரான விழிப்பூட்டலை உருவாக்குவதற்கு பாடசாலை மட்ட விழிப்புணர்வுக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. ஏற்கனவே, ஆசிரியர்களின் ஊதியம் அதிகரிக்கப்பட்டுள்ளமை அவர்களிடையே பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மொத்தத்தில் எடுத்தோம், கவிழ்த்தோம் என்று மைத்திரி அரசாங்கம் இரவோடு இரவாக மாற்றங்களை உருவாக்கவில்லை. அப்படி உருவாக்கவும் முடியாது. கல்வித் துறை முழு மொத்த மாற்றமொன்றை வேண்டி நிற்கும் இத்தருணத்தில் அதற்குரிய ஆரம்ப கட்ட சமிக்ஞைகளை அரசாங்கம் வெளிப்படுத்தி வருவது ஆரோக்கியமானது. இது ஒரு நல்ல தொடக்கமாகும். நல்லாட்சியின் தொடக்கம் போன்று கல்வித் துறையில் நம்பிக்கைக்குரிய மாற்றங்கள் நிகழ்வதற்கான ஆரம்பமாகவே இதைக் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கிப் பிரா வாகிக்கும் துகிலுரியும் கலாச்சாரம்

பியாஸ் முஹம்மத்

அரையும் குறையுமாக தொங்கிக் கொண்டிருந்த இலங்கையின் ஆடைக் கலாச்சாரம் அவிழ்ந்து விழுந்திருக்கிறது. நியூசிலாந்து அணியுடன் மொத்தமாகத் தோற்றுப் போனதன் அவமானத்துக்காக முகத்தை தொங்கப் போட வேண்டிய நிலையில் இலங்கையின் கிரிக்கட் ஜாம்பவன்களான மஹேலவும் சங்காவும் நாட்டின் கலாச்சாரத்தை தொங்கப் போட்டிருக்கிறார்கள்.

என்ரிக் இக்லேஷியஸ் இலங்கைப் பெண்மணியின் மார்புக் கச்சையை தனது தோள்மேல் சுமக்கும் வரைக்கும் இலங்கை மக்களிடையே வெகுவாக அறியப் படாதவர். ஆசியாவிலேயே முதல் தடவையாக அவர் இலங்கைக்குத் தான் வரவழைக்கப்பட்டிருக்கிறார். அதிலும் இதுகாலவரை இல்லாத அதிகூடிய கட்டணம் இவரது இசைக்கச்சேரியின் நுழைவுச் சீட்டுக்குத்தான் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. இப்பொழுது இவர் இலங்கையரின் நெஞ்சங்களில் எல்லாம் ஊசலாடிக் கொண்டிருக்கிறார்.

இவரது கச்சேரிக்கு வந்த பெண்மணி தனது மார்புக் கச்சையால் இவரை அபிஷேகம் பண்ணியதும் இன்னுமொரு பெண்மணி இவரைக் கட்டித் தழுவி முத்தமழை பொழிந்ததும் தான் என்ரிக்கை இவ்வளவு பிரபல்யமாக்கியிருக்கிறது. போதாமைக்கு இந்த நிகழ்வுக்கு ஜனாதிபதி கொடுத்த விளம்பரம் நாட்டின் பட்டிதொட்டியெங்கும் இதனைப் பேசுபொருளாக்கியிருக்கிறது.

இலங்கையைப் பொருத்தவரைக்கும் இது ஒன்றும் புதிய விடயமல்ல. கலாச்சாரம் என்ற பெயரில் சிகிரியா ஓவியங்கள் நாடு முழுவதும் சுற்றித் திரிவது புதுமையுமல்ல. பண்டைய காலத்திலிருந்து இதுதான் கலாச்சாரமாக போற்றப்பட்டிருக்கிறது. சிங்கள கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் பாரம்பரிய உடையான பாவாடையும் சட்டையும் (ரெத்த-ஹட்ட) இப்பொழுதெல்லாம் அவுருது குமாரிகளின் அலங்காரத்தை வெளிப்படுத்துவதற்காகத்தான் அணியப்படுகிறது.

அந்தளவு தூரம் கலாச்சார ஆடைகள் அங்கங்களை வெளிப்படுத்துவதாகத்தான் அமைந்திருக்கிறது. இந்தவகையில் தான் பௌத்த மதகுருமார்களும் உடம்பை மறைப்பதற்கு எதிராக போர்க்கொடி தூக்குகிறார்களே அன்றி உடம்பை வெளிக்காட்டுகின்ற இது போன்ற நிகழ்வுகளுக்கெதிராகவெல்லாம் குரல் கொடுப்பதில்லை. ஆசைகளை சற்றும் துறக்காத இந்தத்துறவிகள் ஆடைகளை முற்றும் துறப்பதை எதிர்ப்பதே இல்லை.

பௌத்த நாட்டின் கலாச்சாரம் இப்படியாகிப் போயிருக்கிறது. கலாநிதி சேபாலி கோட்டெகொடவின் கருத்துப்படி சரி பிழை என்பதற்கப்பால் தற்போது இது எமது நாட்டின் பொதுவான கலாச்சாரம். ஆடை அவிழ்ப்பும் கட்டிப்பிடிப்பதும் எமது நாட்டின் பொதுப் போக்குவரத்துகளில் கூட நடக்கின்ற சாதாரண விடயம். இதனை யாரும் தட்டிக் கேட்பதில்லை. இனி இதுபோன்ற விடயங்களெல்லாம் கலாச்சாரமாக அங்கீகரிக்கப்படும் நிலை தான் நாட்டில் உள்ளது என்கிறார்.



தொலைக்காட்சியும் இணையமும் வெளிநாட்டிலிருந்து விட்டு திரும்புபவர்களும் இப்படியான ஒரு கலாச்சாரத்தை ஏற்கனவே இங்கு வளர்த்துவிட்டிருக்கிறார்கள் என்கிறார். ஜெட்விங் ஹோட்டலின் தலைவர் ஹிரான் குரே. செக்ஸ் என்ற சொல்லை கூகிளிலே தேடும் நாடுகளில் உலகிலேயே முதலிடத்தில் இருப்பது இந்த பௌத்த நாடுதான்.

ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்துக்கு ஸல்மான் கானை அழைத்து வருவதற்கு முன்னாள் ஜனாதிபதி ஆவன செய்ததும் நாட்டு மக்களின் கலாச்சார உணர்வை அவர் நாடிபிடித்து வைத்திருந்ததனால் தான். ஏனெனில் இந்தக் கலாச்சாரத்தை வளர;த்து விட்டதில் அவருக்கும் பெரும்பங்கிருக்கின்றது. கலாச்சாரச் சின்னமாகக் கருதப்படும் தலதா மாளிகையில் கார் ரேஸ் ஓடவைத்து புதிய கலாச்சாரத்தை உருவாக்கியவர். நாட்டில் முதன் முதலாக பீச் வொலிபோல் சர்வதேச சுற்றுப் போட்டியை ஏற்பாடு செய்து மார்புக் கச்சையுடன் இலங்கைப் பெண்களை விளையாட வைத்தவர் என்ற வகையில் மஹிந்தருக்குப் பங்கில்லாமல் போக முடியாது.

இனி மார்புக் கச்சையை கழற்றி எறிவது என்பதும் கலாச்சாரத்தின் ஒரு அங்கமாகத் தான் பார்க்க வேண்டியிருக்கிறது. என்ரிக்கின் இசைக்கச்சேரியே செக்ஸ் அன்ட் லவ் என்ற தலைப்பில் தான் நடக்கிறது. இதில் ஆன்மீகத்தையும் பண்பாட்டையும் யாரும் எதிர்பார்க்க முடியாது. அதிலும் என்ரிக்கின் இசைக் கச்சேரிகளில் இவ்வாறு நடப்பது சர்வ சாதாரணம் என்று பாராளுமன்றத்திலிருக்கும் நடிகர் ரஞ்சன் ராமநாயக்கவும் தெரிவித்திருக்கிறார;. இவ்வளவும் தெரியாமல் தானா என்ரிக்கினது போன்ற இசை நிகழ்ச்சிகள் எங்களது கலாச்சாரத்துக்கு ஒத்து வராது. இவற்றை நிறுத்த வேண்டும என்று ஜனாதிபதி கூவுகிறார்?

ஜிப்ஸீஸ் பாடகர் சுனில்.பெரேராவின் கருத்துப்படி இது ஒரு நாடகம். நாட்டில் கலாச்சாரத்துக்குப் புறம்பான எவ்வளவோ நடக்கிறது. எதனோல் கலாச்சாரம், வெள்ளை வான் கலாச்சாரம்ம இவற்றைப் பற்றியெல்லாம் யார் அலட்டிக் கொள்கிறார்கள் என்று அவர் கேட்கிறார். அவர் சொல்வதும் சரிதான். இலங்கையின் கலாச்சாரத்தினால் ஆளப்படுகின்ற, பெண்கள் சூடேற்றப்பட்டிருக்கிறார்கள். ஒரு சிறு தீப்பொறி போதும் இவர;களின் விரசம் பற்றியெரிவதற்கு.

சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது என்ற வகையில் இது பிழையல்ல என்கிறார். ஹிரான் குரே. என்ரிக் போன்ற பாடகர;கள் இலங்கை மண்ணை மிதிப்பதே தமக்குப் பெருமை என இலங்கையின் கலைஞர்கள் மார்தட்டிக் கொள்கிறார்கள். இந்த வகையில் இவ்வாறான செயற்பாடுகள் எந்தவித எதிர்ப்லையையும் நாட்டில் உருவாக்கப் போவதில்லை. அப்படியானால் இவற்றையெல்லாம் நாளடைவில் கலாச்சாரமாக வரிந்து கட்டிக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

இதனைத் தான் இந்த நிகழ்ச்சியை நடத்துவதன் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட விடயம். இவ்வாறான விடயங்களை யாரும் பெரிதாக அலட்டிக் கொள்ளப் போவதில்லை என்பது புரிந்திருக்கிறது.

ஜனாதிபதி ஆழம் பார்ப்பதற்காக போட்டுப் பார்த்த கருத்துக்களுக்கு பெரிய வரவேற்புக் கிடைக்கவில்லை. மாதுலவாவே சோபித தேரர் சொன்னது போல சட்டி சூடாகவிருக்கிறது. ரொட்டி சுட்டுக் கொள்ள வேண்டியதுதான்.

இந்தத் தருணம் தான் நல்லாட்சிக்குத் தேவைப்பட்ட தருணம். ஐக்கிய நாடுகள் சபையின் 2030 வரையான நிலையான அபிவிருத்தி இலக்குகளை இலங்கையும் உள்வாங்கியாகிவிட்டது. அதில் உள்ளடங்கியிருக்கின்ற ஆண் பெண் வேறுபாடு இருக்கக் கூடாது என்ற தத்துவத்தைப் பேசுகின்ற பால் சமத்துவம் என்கின்ற இலக்கு அடையப்பட வேண்டும். அதனை இலகுவாக அடைய வேண்டுமென்றால் அதனை அரசியல் யாப்பில் நுழைக்க வேண்டும். புதிய அரசியலமைப்பு செய்வதற்காக நாளை பாராளுமன்றம் கூடுகிறது.

முடிச்சுகள் பாராளுமன்றத்திலும் அவிழ முடியும்.

---

2015 ஜனவரி 8 ஆம் திகதி இந்த நாட்டின் பெரும்பாலான குடிமக்கள், அச்சமின்றி எடுத்த வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவின் அடிப்படையில், நல்லாட்சி அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்தது. அவசரமாகவும், பொறுப்புணர்வுடனும் செய்து முடிக்க வேண்டிய கொள்கை ரீதியான முன்னெடுப்புக்கள் பலவற்றையும் இந்தஅரசாங்கம் மேற்கொள்ள வில்லை. எனவே, சமீபத்திய வரலாற்றில் மிகவும் மோசமான அரச இயந்திரமாக அடையாளப்படுத்தப்படும் மஹிந்த ஆட்சியிலிருந்து சிறிதளவே வேறுபடும் நிலைக்கு இந்த அரசாங்கமும் தள்ளப்பட்டிருப்பது விசனத்தை' ஏற்படுத்துகிறது. ஆகஸ்ட் 17 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில், தற் போதைய அரசாங்கமும்கூட நாய்களோடு உறங்கி நாயில் வளரும் ஒட்டுண்ணிகளோடு இருக்கும் இழிகரநிலையைநாம் அவதானித்தோம். தற்போதைய ஆட்சியிலும் அவ்வாறான,'அரசியல் நாய்களை எண்ணிக் கணக்கிடுவதுகூட கடினமான செயலே. தற்போதையபாராளுமன்றத்தையும்,ஆட்சியந்திரத்தின் பிரதிநிதிகளையும் நோட்டமிடும் ஒருவர், இந்த உண்மையை ஏற்றாகவேண்டும். இலங்கை என்பது ஒரு போதும், 'மனிதப்பிராந்தியம்' ஆக மாற்ற முடியாத ஒருநாடுஎன்றசந்தேகம் பலரது மனதையும் குழப்பத் தொடங்கியுள்ளது.

மஹிந்த ஆட்சியிக்கானவரை விலக்கணமாகவும், இன்னும் தெளிவாகச் சொல்வதென்றால் மஹிந்த ஆட்சியின் இதயமாகவும் இருந்தகோத்திரவழக்கங்களை,உத்தியோகபூர்வ மாகபுறக்கணிப்பதற்கு நல்லாட்சி அரசாங்கம் தவறியமை, அதுசெய்தபெரும் தவறாகும். உலகில் பொதுவாக எங்கேனும் ஒரு அநியாயக்கார ஆட்சியொன்றை வீழ்த்தி விட்டு, புதிதாக ஆட்சிக்குவரும் மாற்று அரசாங்கத்திடம் மக்கள் எதிர்பார்ப்பது, முன்னைய ஆட்சியையும் விடநல்ல தெளிவான ஜனநாயக நெருக்கத்தையே. என்றாலும், இலங்கையில் அது நடைபெற்றதா என்று அவதானிப்பது கடினமான ஒரு விடயமல்ல. தற்போதைய அரசாங்கத்தின் கீழும், நன்குபேணப்படுகின்ற,'மஹிந்தகரு' தற்போதுவிளைவுகளைத் தர ஆரம்பித்துள்ளது. இவற்றில் இனவாதத்தை நான் மிகக் கடுமையானதாகவும் மிலேச்சத்தனமானதாகவும் கருதுகின்றேன். 'சிங்கலே' என்று பரவி வருகின்ற உளநோய் அதன் சமீபத்தியவரவாகும்.

# மாபியா



பல வருடயுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நாடென்ற வகையில், சமாதான மானநாளையைக் கட்டி யெழுப்புவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதுஎம் அனைவரதும் கடமை என்பதைபுதிதாகக் கூற வேண்டிய அவசிம் கிடையாது. கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக, எமது நாட்டின் சாபமாக இருந்த யுத்தத்தின் அடிப்படையாகவும், உந்துசக்தியாகவும் இனவாதமே அமைந்திருந்தது. எனவே, சாதாரண அறிவைக் கொண்டவர்கூட, 'இனவாதம்,பயங்கரவாதம் அல்லது சமூகப் பாதிப்பு ஆகியவற்றுக்கிடையில் நெருங்கிய தொடர்புள்ளது'என்றவிடயத்தைப் புரிந்து கொள்வர். ஆனாலும், எம்மில் பலரும் தேர்ந்தெடுத்துள்ளபாதை எது என்பதைப் பார்க்கும்போது, ஜனநாயகம் குறித்துநாம் பேசுவதற்கு எடுத்துள்ளகாலம் நீண்டுவிட்ட தோ என்றுதோன்றுகின்றது.

இப்போதுதொற்றாகப் பரவி வருகின்ற,'சிங்கலே'பைத்தியம் எவரது தேவைக்காக,யாரால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்று எனக்குத் தெரியாது.ஆனாலும்,அதில் ஏதோஒழுங்குபடுத்தல் இருப்பதனால், அது குறிப்பிட்டளவு திட்டமிடலுடன் பரவுகிறது என்றும், யாரோ இதன் பின்னால் செயற்படுகிறார்கள் என்றும் தெரிகிறது. பேஸ்புக் மூலம் இனவாதத்தைப் பரப்புவதுமட்டுமன்றி, வாகனங்களில் காட்சிப்படுத்துவதற்கா இலவசமாக ஸ்டிகர்வழங்கும் வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கிடையில், இவர்கள் தமதுகுறிக்கோள்களாகத் தெரிவிக்கும் கருத்துக்கள் ஏனைய இனத்தவர்களிடம் இன ரீதியான வெறுமையையும் பாதிப்பையும் ஏற்படுத்தியிருக் கின்றது.

'சிங்கள இனத்தின் பெயரை பாதுகாத்துக் கொண்டு, எந்தவொருமதத்தவருக்கும், இனத்தவருக்கும் எனதுசிங்களநாட்டில் சுதந்திரமாக வாழமுடியும்,அதுஒருசிங்கள இனத்தவனாகவே. உதாரணமாக, ஜப்பானில் பல இனத்தவர்கள் வாழ்கின்றனர். ஆனால்,அவர்கள் அனைவரும் ஜப்பானியர்கள். இது சிங்களநாடு. எனவே,எந்தமதத்தைப் பின்பற்றினாலும், எந்தமொழியைப் பேசினாலும் ஒரே இனம்தான்,அதுதான் சிங்கள இனம். அதற்கானநாட்டை ஒழுங்குபடுத்து வதைகுறிக்கோளாகக் கொண்டநாம் சிங்கலே.' இந்தப் பிரகடனத்திலுள்ளஅநியாயத்தைநாம் சிறியதொருவிடயமாகப் பார்க்கத் தேவையில்லை. இந்தப் பிரகடனத்தைபின்வருமாறு சாராம்சப்படுத்தலாம். 'இதுஎமதுநாடு,நீ இதில் இருப்பதுபிரச்சினையில்லை.

ஆனால், எமக்குத் தலை குனித்து, நாம் சொல்வதுபோல் இருக்க வேண்டும். ''தீவுமனப்பான்மை' (சுருங்கியபார்வை) யினால் அடிக்கடி பாதிக்கப்படுகின்ற, ஏனையோரின் பிழையான கருத்துக்களை விழுங்கிக் கொள்கின்ற எம்நாட்டுமக்களுக்கு இவ்வாறான கருத்துக்களை கொண்டு செல்வது அவ்வளவு பெரியவிடயம் அல்ல. எனவே, இவ்வாறான வன்முறைத் தனமான போலி தேசப் பற்றுக்கு மத்தியில் இன மற்றும் தேசியநல்லிணக்கம் குறித்து எவ்வாறு பேசுவது என்று அரசாங்கம் மிகவும் சீரியஸாக ஆராயவேண்டும்.

இந்த மூட நம்பிக்கையில் இளம் பரம்பரையைச் சேர்ந்தசிலரும் சிக்கியிருப்பது உள்ளத்தை நெருடச் செய்கின்து. ஒருதேசியம் என்ற வகையில் இது எம்மைப் பாதிக்கும் என்பதைச் சொல்லியே ஆக வேண்டும். பொதுவாக, இளைஞர்கள் குறித்துச் சொல்லும்போது, அவர்கள் பழையகருத்துக்களிலேயே தங்கியிராத, வித்தியாசமான கருத்துக்களைச் சுமந்தவர்கள் என்றே அடையாளப் படுத்தப்படுவர். முன்னோரைவிட வேகமாகமாறும் உலகைக் காணும் சந்தர்ப்பமும், ஆசையும் அவர்களிடம் இருப்பதேஅதற்கானகாரணம். அத்தோடு, தம்மைச் சூழ உள்ளகுப்பைகளைநோக்கி இந்த ஆசை திசை திரும்பக்கூடாது என்பதையும் சொல்லியாகவேண்டும்.

ஒரு நாட்டின் இளம் சமூகத்திடம் தீவிரவாத அடையாளங்கள் தென்படுவதாயின், உலகின் வேறுநாடுகளில் நிகழும் நிகழ்வுகள் குறித்தும் மாற்றங்கள் குறித்தும் கிணற்றுத் தவளை போன்று இருப்பின், அந்த நாட்டின் எதிர்காலவியூகம் குறித்தும் முன்னேற்றம் குறித்தும் என்னதான் சொல்லமுடியும்? எவ்வாறாயினும், இன்னும் சிலதிறந்த, விமர்சனரீதியான இளைஞர்களும் யுவதிகளும், இந்த'சிங்கலே'மோட்டுத்தனத்துக்கு எதிராக சமூக ஊடகங்களில் விமர்சனமும் நையாண்டியும் செய்வதையும் சொல்லவேண்டும். (இங்குநான், இளம் பரம்பரை யைநோக்கி மட்டுமல்ல எனது அவதானத்தை செலுத்துகிறேன். இக் கட்டுரையில் மொத்தகுடி மக்களை நோக்கியேநான் விளிக்கிறேன். ஆனாலும், எந்தவொருநாட்டினதும் பயணத் திசையைத் தீர்மாணிப்பதில் இளம் பரம்பரைமிக முக்கியமான தரப்பு என்று நான் நம்புகிறேன்.)

அண்மைய வரலாற்றில் ஞானசார தேரர்போன்றவர்களினால், இலங்கை சமூகத்தைதுண்டு துண்டாக உடைப்பதன் மூலம் தமதுஅபிலாஷைகளைநிறைவேற்றிக் கொள்வதற்கானமுன்னெடுப்புக்கள் பல எடுக்கப்பட்டன. அவற்றுக்கு கோத்தாபய ராஜபக்ஷ போன்ற மஹிந்த ஆட்சியின் முக்கிய ஏஜெண்டுகளின் நேரடி ஆதரவும் கிடைத்தமை குறித்து, தேவேந்திரமுனை தொட்டுபருத்தித் துறைவரையுள்ள அனைவரும் அறிவர்.

போலிமதகுருக்கள் உள்ளிட்ட போலிபௌத்தர்கள் சிலர்சத்தாதிஸ்ஸ தேரர்உள்ளிட்டராவணாபலயமற்றும் அதுபோன்ற இயக்கங்கள் சிலவற்றை சுற்றிசேர்ந்துகொண்டனர். இந்த அனைத்து முன்னெடுப்புக்கள் மூலமும் இலங்கை சமூகத்துக்கு வழங்கப்பட்டஅனுபவங்கள் ஒருபோதும் நேரான அனுபவமாகக் கணிக்க முடியாதவை. இந்த அனைத்து இன வாத முன்னெடுப்புகளின் பின்னாலும் எந்தவகை தேசியப் பற்றோ, மதம் மீதான அன்போ இருந்ததாகக் கருதுவது கேலிக்கையாகும்.

அஷான் வீரசிங்ஹ
தமிழில்: அஷ்கர் தஸ்லீம்
நன்றி: ராவய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறியதொரு கூட்டத்தின் தேவைப்பாடுகளே இனவாதமாக அரங்கேற்றப்படுகின்றது

நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி
தொழில்நுட்ப உதவி: இஸ்பஹான், மில்பர், அனஸ் அப்பாஸ்

## இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்
ஐ.தே.க. மத்திய குழு உறுப்பினர்

**இலங்கை பலஸ்தீன் நட்புறவுச் சங்கத் தலைவரும் ஐ.தே.க மத்திய குழு உறுப்பினருமாகிய இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் அவர்கள் சமகால விவகாரங்கள் தொடர்பில் மீள்பார்வை பத்திரிகைக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வி.**

**• நீங்கள் அரசியலை விட்டு ஒதுங்கியிருப்பதற்கான காரணம் என்ன?**

எனது தந்தை முதலாவது 1947 தேர்தலில் போட்டியிட்டார். நான் இறுதியாக 2002 ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டேன். எனவே 50 வருட காலமாக பேருவளை உள்ளிட்ட களுத்துறை மாவட்ட மக்கள் தந்தைக்கும் மகனுக்கும் வாக்களித்துள்ளார்கள்.

தொடர்ந்தும் இவ்வாறு வாக்கு கேட்கும் போது புதிதாக கற்ற சமுதாயமும் அரசியல் தொடர்பில் ஆர்வமுள்ள இளைஞர்களும் எப்பொழுதும் ஒரு குடும்பத்திற்கு மாத்திரம் வாக்களிக்க வேண்டுமா என நினைப்பார்கள். அது என்னுடைய மனச்சாட்சியை உறுத்தியதொரு விடயம். அதனால், நான் கூறினேன் இம்முறை (2002) தேர்தலில் போட்டியிடுவது இறுதிச் சந்தர்ப்பம். தெரிவுசெய்யப்பட்டால் நான் அமைச்சரவைக்குச் செல்வேன். அங்கு இருப்பது ஒரு தடவைதான் என்று. எனது வாக்குறுதியை நான் நிறைவேற்றியுள்ளேன்.

**• அவ்வாறென்றால் அரசியலில் நுழையும் எதிர்பார்ப்பொன்றில்லையா?**

நான் அரசியலில் உள்ளேன். தற்போது நான் ஐ.தே.க மத்திய குழு உறுப்பினராக அங்கத்துவம் வகிக்கின்றேன். பாராளுமன்றத் தேர்தலொன்றில் போட்டியிடும் எண்ணம் இல்லை. ஆனால், நான் அரசியல் விவகாரம் குறித்து விழிப்பாகவுள்ளேன். எமக்கு செய்ய முடியுமானவற்றை சம்பந்தப்பட்டவர்களைத் தூண்டி நிறைவேற்றிக் கொண்டுள்ளோம்.

எனது சிந்தனையை சமூக மயப்படுத்துவதற்காக பல்வேறு புத்தகங்களை எழுதுகிறேன். பொது மேடைகளில் உரையாற்றுகிறேன். தேசிய ஐக்கியத்திற்கான பாக்கிர் மாக்கார் மத்திய நிலையத்திலும் பணியாற்றுகின்றேன். இந்நாட்டிலுள்ள பலஸ்தீன் நட்புறவுச் சங்கத்தின் தலைவராகவும் செயற்படுகிறேன். என்னால் முடியுமானவற்றை சமூகத்திற்காகச் செய்கிறேன். தேர்தலில் போட்டியிடாதது மாத்திரமே குறையாகவுள்ளது.

**• நல்லாட்சி அரசாங்கத்திற்கு ஒரு வருடம் பூர்த்தியாகிறது. ஒரு வருட காலத்திற்குள் நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுத்த வேலைத் திட்டங்கள் தொடர்பில் உங்களது கருத்து என்ன? எதிர்வரும் காலத்தில் நல்லாட்சி அரசின் செயற்பாடுகள் எவ்வகையில் அமையுமென எதிர்பார்க்கின்றீர்கள்?**

இன்னும் நிறைய வேலைத் திட்டங்கள் செய்யப்படவுள்ளன. பாரியதொரு அழிவிலிருந்து நாட்டைப் பாதுகாத்தோம். இலங்கையென்றால் என்ன? இலங்கையன் என்றால் யார்? இலங்கையன் என்றால் அங்கு பௌத்தம் இருக்கும். இந்து இருக்கும். இஸ்லாம் இருக்கும். கிறிஸ்தவம் இருக்கும். இப்பல்வகைமையின் ஒன்றிணைவுதான் இலங்கையன் என்பதனால் அடையாளப்படுத்தப்படுகின்றது.

இப்பல்லினத் தன்மையை சுமையாக வைத்து ஒருவருக்கொருவர் முட்டி மோதிக் கொண்டு அரசியல் இலாபம் பெற்றதொரு அழிவுகரமான யுகமொன்றை நாம் முடிவுக்குக் கொண்டுவந்துள்ளோம். தற்பொழுது நல்லாட்சிக்கான போராட்டமொன்று வெற்றிகொள்ளப்பட்டுள்ளது.

நல்லாட்சி குறித்து, பேசிப் போராடுவது இலகுவானது. ஆனால், அதன் பிரகாரம் வாழ்வதுதான் கடினமானது. தற்பொழுது அச்சவாலுக்கு இவ்வரசாங்கம் முகம் கொடுத்துள்ளது. அரசியல் மேடைகளில் உரையாடிய நல்லாட்சி கதையாடல்களை அமுல்படுத்த வேண்டியுள்ளது. அரசாங்கம் இச்சவாலை சிறந்த முறையில் எதிர்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கின்றேன். பிரார்த்திக்கின்றேன்.

**• கடந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட இன வாதச் செயற்பாடுகள் நல்லாட்சி அரசு நிலவும் காலப்பகுதிக்குள்ளும் அரங்கேறி வருகின்றது. இதற்கான காரணம் என்ன?**

பல காரணங்கள் உள்ளன. ஒரு சிலர் அரசியல் இலாபங்களுக்காக வேண்டி இதனை புரிகின்றார்கள். இன்னும் சிலர் பொருளாதார நோக்கங்களுக்காக இனவாரத்தை தூண்டுகிறார்கள். சர்வதேச ரீதியில் ஆயுத உற்பத்தி செய்பவர்களுக்கு போராட்டங்கள் அவசியப்படுகின்றன. இவர்களுடைய நிகழ்ச்சி நிரல்களும் முன்னெடுக்கப்படுகின்றன. அதுபோல உலகில் செல்வம் கொழிக்கும் நாடுகளின் சொத்துகள் சூறையாடப்படும் வேலைத்திட்டங்களும் அமுல்படுத்தப்படுகின்றன.



உதாரணமாக கடந்த ஞாயிற்றுக் கிழமை லங்கா தீப பத்திரிகையில் மொஹான் சமரநாயக்க, இவர் சர்வதேச விவகாரங்கள் தொடர்பில் கூடுதல் புலமையுள்ளவர். உலகிலுள்ள பயங்கரவாத அமைப்புகள் தொடர்பில் வழங்கிய நேர்காணலில் அவர் பின்வருமாறு கூறியிருந்தார். "எனது கருத்தின்படி இப்போராளிகளினுடைய போராட்டங்களை நிறுத்த வேண்டுமென்றால் மத்திய கிழக்கு நாடுகளுக்கு மேற்கு நாடுகள் புரியும் அழுத்தங்கள் நிறுத்தப்படல் வேண்டும். அங்கு சொத்துகள் சூறையாடப்படுவது நிறுத்தப்படவேண்டும். மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள மக்களுக்கு தங்களுடைய விருப்பப்படி ஆட்சியாளர்களை தெரிவு செய்யக்கூடிய உரிமை, வாழக்கூடிய உரிமை வழங்கப்படல் வேண்டும். அவ்வாறு செய்யாதவரையில் போராட்ட அமைப்புக்களை தோற்கடிப்பதற்கு பல காலங்கள் எடுக்கும்."

இதுதான் யதார்த்தம். இலங்கையின் அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக வேண்டி சிங்களம் என்றும் தமிழ் என்றும் பிரித்து சண்டையை மூட்டி விடுவது இலேசானது என நினைப்பவர்கள் அவ்வழிமுறையில் அதிகாரத்தை கைப்பற்ற முயற்சிக்கிறார்கள். வர்த்தக ரீதியாக போட்டியிட்டு சம வாய்ப்புக்களை பெற முடியாது என நினைப்பவர்கள் இன, மத துவேசத்தை விதைத்து இலாபம் பெறுவதற்காய் பிரச்சினைகளை தோற்றுவிக்கிறார்கள்.

உலக நாடுகளை சூறையாட முனைபவர்கள் ஆயுத உற்பத்தியை அதிகரிப்பதற்கு அவர்களுக்கு போராட்டம் அவசியம். அதற்காக இனவாதத்தை தூண்டுகிறார்கள். இவ்வனைத்தும் இனவாதத்தை உண்டாக்கும் காரணிகள்.

ஞாயிறு லங்காதீப பத்திரிகையில் அமைச்சர் ராஜித சேனா ரத்ன வழங்கிய நேர்காணலொன்றில், "அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் பிரச்சினை என்ன?" என கேள்வி ஒன்று அவரிடம் தொடுக்கப்பட்டது. அதற்கு அவர் "நானும் முன்னாள் காணி அமைச்சராக இருந்தேன். அதனால் எனக்கு வில்பத்து விவகாரம் தொடர்பில் நன்றாக தெரியும். எந்தவொரு நிலப்பகுதியையும் சரணாலயத்திற்கு பெற்றுக்கொள்ள அமைச்சர் ஒருவருக்கு அதிகாரமுள்ளது.

அதுபோன்று அரசுக்குச் சொந்தமான வனப்பகுதியிலிருந்து குறிப்பிட்ட நிலத்தை விடுவித்துக்கொள்ளவும் முடியும். நான் காணி அமைச்சராக இருந்த காலப் பகுதியில் சிங்க ராஜ வன எல்லையை 5Km முன்னுக்கு கொண்டு வந்தேன். ஒரு பகுதியை சிங்க ராஜ வனத்துடன் இணைத்தேன். அதுபோன்று நுவரெலியாவில், சரணாலய வனத்திலிருந்து 200 m நிலத்தை விடுவித்து மக்களுக்கு வீடு கட்டிக்கொள்ள இடமளித்தேன். இதுபோன்ற விடயங்களைச் செய்ய முடியும். அமைச்சர் ரிஷாத் இங்கு பிரச்சினையொன்றில்லை என்பதாக சுட்டிக்காட்டுகின்றார். அவர் ஒரு சிறுபான்மையின அமைச்சர் என்பதுதான் இங்கு பிரச்சினை."

அதனால் பத்திரிகையில் வரும் செய்திகளை நுனிப்புல் மேய்ந்து ...களுக்கு வரமுடியாது. அத்திரைகளைத் தாண்டி உள்ளே சென்று ஆழமாக சிந்திக்க வேண்டும். அப்பாவி உயிர்கள் கொல்லப்படுவது இனங்களுக்கிடையில் முரண்பட்டுக் கொள்வதென்பது பெரும்பான்மை மக்களுக்கு அவசியமான விடயமொன்றல்ல.

சிறியதொரு கூட்டத்தின் தேவைப்பாடுகளே இனவாதமாக அரங்கேற்றப்படுகின்றது. இதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும். எனவே, நல்லாட்சி அரசாங்கம் வெற்றி பெற்ற போது மக்கள் ஒரு வரத்தை கொடுத்தார்கள். அது மக்களுக்கு பதிலளிக்க வேண்டுமென்பது; சட்டத்தின் ஆட்சி எல்லோருக்கும் சமமான முறையில் அமைய வேண்டுமென்பது; சகல இன மக்களும் சமமான முறையில் கௌரமாக வாழக்கூடிய சூழல் வேண்டுமென்பது; இவ்வேண்டுகோள்களை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டியுள்ளது. சமாதானமாக வாழக்கூடிய சூழலொன்றை ஏற்படுத்த வேண்டியுள்ளது.

"சிங்களே" பிரச்சாரத்திற்கோ அல்லது பொதுபலசேனா அவ்வப்போது முன்வைக்கின்ற பிரச்சாரங்களுக்கோ பதிலளிப்பதை விடவும் புத்தி சுயாதீனமான முறையில் நாம் சிந்தித்து எமது குழந்தைகளுக்கு சுதந்திரமாக வாழ முடியுமான சமூகமொன்றை உருவாக்குவதற்கு நல்லாட்சி அரசாங்கம் வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

**• இலங்கை பலஸ்தீன் நற்புறவுச் சங்கத்தின் செயற்பாடுகள் எவ்வகையில் உள்ளன?**

இலங்கைக்கும் பலஸ்தீனுக்குமிடையில் நீண்ட காலம் தொட்டு நற்புறவு இருந்து வந்தது. நாட்டிலுள்ள சகல அரசியல் கட்சிகளும் பலஸ்தீன விவகாரங்களிலும் தென்ஆபிரிக்க பிரச்சினைகளிலும் ஒரே நிலைப்பாட்டைக் கொண்டிருந்தன. அதில் வேறுபாடுகள் இல்லை. தென் ஆபிரிக்கா சுதந்திரத்தைப் பெற்றது. பலஸ்தீன் மாத்திரம் தான் இன்னும் சுதந்திரம் பெறவில்லை. நான் நினைக்கிறேன். உலகில் இறுதியாக இன்றுவரைக்கும் காலனித்துவத்திற்கு உட்பட்டுள்ள நாடு பலஸ்தீன் என்று.

பலஸ்தீனை அடிமைப்படுத்தியிருப்பவர்கள் இலங்கை போன்ற சிறிய நாடுகளில் தங்களுடைய ஏஜென்டுகளின் கொத்தடிமைகளை சிறுசிறு சலுகைகளைக்கொடுத்து உருவாக்க முயற்சிக்கிறார்கள். அத்தகைய சிறிய குரல்கள் காலத்திற்கு காலம் மேலெழுகின்றன. பெரும்பான்மையினர்; மனித உரிமை, ஜனநாயகம், சுதந்திரம் போன்றவற்றுக்காக வேண்டி குரல் கொடுத்துள்ளனர். இலங்கையிலுள்ள பெரும்பான்மையினரின் ஒத்துழைப்பு எப்பொழுதும் பலஸ்தீனுக்கு இருந்தது.

**• இஸ்ரேலுக்கும் இலங்கைக்குமிடையில் விமான சேவையொன்று ஆரம்பிக்கப் படவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அது எவ்வகையில் இலங்கையைப் பாதிக்கும்?**

(பக். 14)




## மீளாத் துயர்



உலக மாந்தர்கள் எல்லாம் இன்புற்றிருக்க வேண்டும் என்பதற்காக இறைவனின் தூதராக அனுப்பப்பட்ட நபி முஹம்மத் (ஸல்) அவர்களது பிறந்த தினம், ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் சொன்னது போல, உலகெங்கும் கொண்டாடப்படா விட்டாலும், இலங்கையில் விடுமுறைத் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டு அனுஷ்டிக்கப்பட்டது. மீலாத் தினத்துக்கு அடுத்த நாள் யேசுநாதரின் பிறந்த தினம் கொண்டாடப்பட்ட அளவு அவருக்குப் பின்னர் இறுதி நபியாக வந்த உலகத்தாருக்கான அருட்கொடையின் பிறந்த தினம் இந்த நாட்டில் களைகட்டவில்லை என்பது உண்மைதான்.

ரஸூலுல்லாஹ்வை ஒரு பயங்கரவாதியாக, காமப்பித்தனாக தமக்கு வேண்டிய போதெல்லாம் சித்திரிக்கின்ற மக்களுக்கு மத்தியில், அவர் கொண்டு வந்த தூதைச் சுமந்துள்ள அல்குர்ஆன் தடைசெய்யப்பட வேண்டும் என்ற கூப்பாடுகள் மேலெழுந்த வண்ணம் உள்ள நாட்டுச் சூழலில், உத்தம நபியின் உன்னத போதனைகள் இங்கு உரைக்கப்படாமல் போனதேன்?

எந்த சமூகத்திலும் இல்லாதவாறு தனது தலைவரின் போதனைகளை, அவரது பிறந்த தினத்தன்று ஞாபகப்படுத்துவது நல்லதா இல்லையா என்கின்ற வாதம் நமக்குள்ளால் மட்டும் தான் நடக்கிறது. காந்தி பிறந்த தினத்தில் அகிம்சாவாதமும் புத்தர் பிறந்த தினத்தில் அன்பும் கருணையும் போதிக்கப்படுகின்றன. அதற்காக அகிம்சாவாதமும் அன்பும் கருணையும் ஏனைய நாட்களில் பேசப்படுவதில்லை என்பதல்ல. நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்த பின்னர் ஒவ்வொரு நாளும் சுதந்திரத்தை அனுபவிக்கிறோம். இருந்தாலும் சுதந்திரம் கிடைத்த தினத்தை ஒரு விஷேட தினமாகக் கொண்டாடுகிறோம்.

நபிகளாரின் போதனைகள் வாழ்நாள் முழுக்கவும் போற்றப்பட வேண்டியவை. அதெப்படி அதற்கொரு தினத்தைக் குறித்து கொண்டாட முடியும் என்ற கேள்வி இந்த விதத்தில் அர்த்த மற்றதாகிறது. ஆனாலும் இதனை எப்படிக் கொண்டாடலாம் என்ற கேள்விதான் அர்த்தபுஷ்டியானது. ஏனென்றால் மீலாத் வருகிறது என்றாலே அது ரஸூலுல்லாஹ்வின் புகழ்பாடி, அவரைப் பெரிதும் போற்றியதாகக் கருதும் அன்னதான வைபவங்களை நடத்துகின்ற ஏற்பாடுகள்தான் தடல்புடலாக நடக்கின்றன.

ரஸூலுல்லாஹ்வின் சிறுநீரின் மகத்துவம், உமிழ்நீரின் சிறப்பு, வியர்வை மான்மியம் என சன்மார்க்கப் போதனைகள் காதைப் பிளக்கின்றன. ரஸூலுல்லாஹ்வை ஒரு தெய்வீகப் பிறவியாக சித்திரித்து கவிதைகள் பாடப்படுகின்றன. அவரது பிறப்பில் தொடங்கி, அவரது பேரப் பிள்ளைகளான ஹஸன், ஹுஸைன் (ரழி) மீது அன்பு காட்டுவதன் சிறப்பினை பக்தர்கள் மனதில் பதிய வைப்பது வரை கொண்டாட்டம் கோலாகலமாகிறது.

கொண்டாடக் கூடாது என்ற வாதத்துக்கும் வெறுமனே புகழ்ந்து தள்ளுவது என்ற தீவிரவாதத்துக்கும் இடையில் ரஸூலுல்லாஹ்வை வாழ்க்கைக்கான வழிகாட்டியாக, உலக மாந்தருக்கென படைப்பாளனால் அனுப்பப்பட்ட ஒரு அருளாக இந்த நாட்டில் முன்வைப்பதற்கு இந்நாட்டு முஸ்லிம்கள் மீண்டும் தவறிவிட்டனர். முஸ்லிமல்லாதவரையும் அழைத்து ஆங்காங்கு சில பாராட்டத்தக்க நிகழ்வுகள் நடந்தமை ஆறுதலாக இருந்த போதிலும், முஸ்லிம்களுக்கு மட்டுமே ரஸூலுல்லாஹ்வை எத்திவைக்கின்ற வைபவங்கள்தான் பெரும்பான்மையாக நடந்து முடிந்திருக்கின்றன.

ரஸூலுல்லாஹ்வின் கண்ணையும் காதையும் தோள் புஜத்தையும் வர்ணித்து விளங்காத மொழியில் மெட்டெடுத்துக் கவிபாடி, வயிறு புடைக்க அன்னதானம் படைத்து விட்டு, மீண்டும் மீலாத் வராதா என்ற எதிர்பார்ப்புடன் மக்களை இன்னொரு வருடத்துக்கு அன்னதானத்துக்காக ஏங்க வைத்தவர்கள்தான் ஏராளம்.

ஒரு தனிமனிதனாக ரஸூலுல்லாஹ்வின் வாழ்வின் சிறப்பை எடுத்துக் கூறிய மௌலவிமார்கள் தாராளம். சமூகத்துக்கான வழிகாட்டியாக, ஆட்சியதிகாரத்துக்கான முன்னோடியாக, உலகை ஆளுகின்ற சக்தியாக அவரையும் அவர் கொண்டு வந்த தூதையும் யாரும் எடுத்துச் சொல்வதாக இருக்கவில்லை. ஒருபுறம் தனி மனிதனாக அவரது சிறப்பு ஓதப்பட்டது. மறுபுறம் வணக்க வழிபாடுகளுக்கான முன்னோடியாக அவரது வாழ்க்கை விவாதிக்கப்பட்டது.

இந்த இரண்டையும் தாண்டி உலகத்துக்கு அமைதியையும் சுபீட்சத்தையும் வழங்க வந்தவராக நபியவர்களைக் காட்ட மறுத்தது ஏன்? நீங்கள் தேடும் நிம்மதி இங்கே உண்டு என நபியவர்களின் தூதை அடையாளப்படுத்தாமல் மறைத்தது ஏன்? வாழ்வதற்கான நபியவர்களின் வழிமுறைகளை அடுத்தவர்களுக்குச் சொல்லும் விதத்தில் எத்தனை சிங்களப் புத்தகங்கள் வெளிவந்தன? ரஸூலுல்லாஹ் பற்றியும் இஸ்லாம் பற்றியும் அல்குர்ஆன் பற்றியும் உள்ள சந்தேகங்களை நிவர்த்திக்கும் வகையில் எத்தனை கலந்துரையாடல்கள் முஸ்லிமல்லாதாருடன் நடத்தப்பட்டன?

கூடாது என மேடை போட்டுப் பேசுவதற்கும் வாயாரப் புகழ்ந்து விட்டு ரஸூலுல்லாஹ்வின் போதனைகளை மறந்து செயல்படுவதற்கும் இடையில் செய்ய வேண்டிய பாரிய பணிகளைப் பற்றி புதிய தலைமுறை சிந்திக்க வேண்டும். கூடாது என்றிருந்தால் அதற்குரிய மாற்றீடு என்ன என்பதில் நம்மிடையே தெளிவு இருக்க வேண்டும்.

புத்தாண்டு கொண்டாடக் கூடாது, அது முஸ்லிம்களின் புத்தாண்டு அல்ல என்ற கோஷம் போடும் நேரம், ஜனவரிப் புத்தாண்டுக்கு மாற்றீடு என்ன என்பது பற்றி யோசிக்க வேண்டும். முஹர்ரம் தான் புதுவருடம் என்றிருந்தால் அதனை உலகத்துக்கான புதுவருடமாக மாற்றுவதற்கான முயற்சிகள் நடந்தாக வேண்டும்.

இந்த வாதங்களுக்கு அப்பால் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் தருணத்தையும் இந்தத் தூதை முன்வைப்பதற்கான பொன்னான வாய்ப்பாகப் பயன்படுத்துவதற்கு நாங்கள் தயங்கக் கூடாது. சந்தர்ப்பங்களை நழுவ விட்டு விட்டு மீளாத் துயரில் ஆழ்ந்து போவது மீலாத் தினம் எதிர்பார்க்கும் விடயமல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்பார்வை


# ஜமாஅதே இஸ்லாமியின் தலைவருக்கு தூக்கு



பங்களாதேஷ் ஜமாஅதே இஸ்லாமியின் தலைவர் முதிஉர் ரஹ்மான் நிழாமியிற்கு எதிராக வழங்கப்பட்ட தூக்குத் தண்டனை தீர்ப்புக்கு பங்களாதேஷ் உயர் நீதிமன்றம் ஆதரவளித்திருக்கிறது. 1970 ஆம் ஆண்டு சுதந்திர போரின்போது யுத்தக் குற்றம் புரிந்ததாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. நிழாமியினால் முன்வைக்கப்பட்ட மேன்முறையீட்டையும் நீதிமன்றம் நிராகரித்துள்ளது. அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் உணர்ச்சிபூர்வமானவை என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் அரசியல் ரீதியாக பாரிய அடைவுகளைப் பெற்ற ஜமாஅதே இஸ்லாமியை பழிவாங்கும் நோக்கிலேயே இத்தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். அதேவேளை, அரசாங்கம் நீதி மன்றத்தைப் பயன்படுத்தி எதிர்க்கட்சி அரசியல்வாதிகளை இலக்கு வைப்பதாக எதிரணிகள் குற்றம் சாட்டியுள்ளன.

72 வயதான நிழாமி, 2000 ஆம் ஆண்டு முதல் ஜமாஅதே இஸ்லாமியின் தலைமைப் பதவியை வகித்து வருகிறார். 2001 இலிருந்து 2006 ஆம் ஆண்டு வரையில் இஸ்லாமியவாதிகளை உள்ளடக்கிய கூட்டணி அரசாங்கத்தில் அமைச்சராக அவர் பதவி வகித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேலுக்கான புதிய எகிப்திய தூதுவர்



முர்ஸியின் ஆட்சி அமுலில் இருந்த ஒரு வருட காலத்தில், எகிப்து இஸ்ரேலுடனான தனது ராஜதந்திர உறவுகளைத் துண்டித்தது. பலஸ்தீன் மக்களுக்கு ஆதரவாக இஸ்லாமிய அரசு இந்நிலைப்பாட்டை எடுத்தது. தற்போது இஸ்ரேலுக்கான புதிய தூதுவராக ஹாஷிம் கைராத் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த வாரம் இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவுக்கு விஜயம் செய்த எகிப்திய தூதுவருக்கு இஸ்ரேல் பிரதமர் பெரும் வரவேற்பளித்தார்.

எகிப்துடன் எமது உறவுகளை மென்மேலும் பலப்படுத்துவதற்கு தூதுவரின் வருகை முக்கியமானது எனவும், அவரைத்தாம் மனமுவர்ந்து வரவேற்பதாகவும் பிரதமர் நெடன் யாஹூ கூறியுள்ளார். 1979 இல் கேம் டேவிட் அமைதி ஒப்பந்தத்தை அடுத்து முதன் முறையாக எகிப்து டெல் அவிவில் தனது தூதுவராலயத்தைத் திறந்தது.

# சர்வதேசப் பார்வை

# ஈரான்-சவூதி ராஜதந்திரப் போர் தீவிரம்!





சமீபத்தில் சவூதி அறேபியா ஒரு ஷீஆ அறிஞர் உட்பட 47 பேருக்கு விதித்த மரண தண்டனை தெஹ்ரானில் பெரும் பதட்டத்தை உருவாக்கியதோடு, ஈரான் அதற்கு உடனடியாக பதிலடி வழங்கியது. தெஹ்ரானிலிருந்த ரியாத் தூதரகத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டு பலர் காயப்படுத்தப்பட்டனர். சவூதி அறேபியத் தூதுவர் உடனடியாகத் திருப்பி அனுப்பப்பட்டார்.

பதிலுக்கு ரியாதும் ஈரானுக்கான தனது தூதுவரை திருப்பி அழைத்துள்ளதோடு, ஈரானின் எந்தவொரு தாக்குதலுக்கும் தாம் பதிலளிக்கத் தயார் எனவும் சூளுரைத்துள்ளது. இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இப்பதட்ட நிலை பிராந்தியத்தில் பாரிய இராணுவ அரசியல் மோதல் ஒன்றுக்கு இட்டுச் செல்லலாம் என அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஈரானுக்கும் சவூதிக்கும் இடையில் நிலவி வரும் பகைமைக்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. அதன் உச்ச கட்டம் தற்போதைய சம்வங்களினூடாக வெளிப்பட்டுள்ளது என்று மத்திய கிழக்கு விவகாரங்களுக்கான ஆய்வாளர் அலி திக்ரிதி குறிப்பிடுகின்றார்.

இரு நாடுகளும் ராஜதந்திரிகளை விலக்கிக் கொண்டுள்ளதோடு தீவிர சொற்போரில் இறங்கியுள்ளது. இரு நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் ஒன்றை ஒன்று எதிர்த்து வெளியிட்டு வரும் அறிக்கைகளையும் வாய்ச் சவாடல்களும் பிராந்தியத்தில் புதியதோர் பூகம்பத்தை உருவாக்கப் போவதாக எச்சரிக்கப்படுகின்றது.

சவூதி அறேபியாவுக்கு ஆதரவாக சூடான், பஹ்ரைன், ஐக்கிய அறபு எமிரேட்ஸ் என்பனவும் தமது தூதுவர்களை திருப்பி அழைத்துள்ளதோடு, தெஹ்ரான் தூதுவரை தமது நாடுகளிலிருந்து வெளியேற்றியுள்ளன. தெஹ்ரானில் சவூதி தூதுவராலயத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை இந்நாடுகள் கண்டித்துள்ளன.

பஹ்ரைனில் ஷீஆக்கள் பெரும்பான்மையாக வாழ்வதாகவும், சுன்னிகள் அதிகாரத்தில் உள்ளதாகவும் ஈரான் தலையிட்டு வருகின்றது. இதே வேளை, சிரியாவில் சுன்னிகள் பெரும்பான்மையாகவும் அதிகாரத்தில் உள்ளவர்கள் ஷீஆக்கள் எனவும் சவூதி தலையிட்டு வருகின்றது. யெமனில் ஈரானுக்கும் சவூதிக்கும் இடையில் நடைபெற்று வரும் பனிப்போர் இப்போது நேரடி மோதலாக உரு மாறியுள்ளதையே புதிய அரசியல் காட்சிகள் உணர்த்துவதாக அவதானிகள் நம்புகின்றனர்.

இரு நாடுகளும் தமது நிலைப்பாடுகளைத் தொடர்ந்தும் நியாயப்படுத்தி வருகின்றன. தீவிர சொற்போர் எந்த வேளையிலும் ஆயுத மோதலாக வெடிக்கலாம் என மேற்கு ஊடகங்கள் தமது விருப்பத்தை முற்கூட்டியே வெளிப்படுத்தியுள்ளன. இரு நாடுகளோடும் வெளிப்படையானதும் ரகசியமானதுமான உறவுகளைப் பேணி வரும் வொஷிங்டன், பொறுமை காக்குமாறு தனது ராஜதந்திரப் போதனையை வெளியிட்டுள்ளது. வழமை போன்று ஐ.நா. செயலாளர் பென் கீ மூன் ஈரானும் சவூதி அறேபியாவும் நிதானமாக ராஜதந்திரப் போரை கையாள வேண்டும் என அறிக்கை விடுத்துள்ளார்.

ஈரானில் நடைபெற்ற சம்பவமே பிரச்சினைக்குக் காரணம் என சவூதி அறேபியா வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. இதேவேளை, ஷீஆ மதகுரு ஒருவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டமையே மக்கள் உணர்ச்சிவசப்படக் காரணம் என ஈரான் வெளிவிவகார அமைச்சு கூறுகிறது.

பஹ்ரைனில் ஷீஆ கிளர்ச்சியை அடக்குவதற்கு சவூதி அறேபியா தனது

(பக். 14)

## டென்மார்க், சுவீடன் எல்லைப் புறங்களில் தீவிர பாதுகாப்பு



சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் என மேற்கு நாடுகள் அழைக்கும் சிரிய, ஈராக்கிய அகதிகளின் குடியேற்றத்தைக் கட்டுப்படுத்த டென்மார்க், சுவீடன் ஆகிய நாடுகள் தமது எல்லைப் புறங்களை மூடிவைத்துள்ளன. அங்கு பலத்தை பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளன. குடியேற்றவாசிகள் உள் நுழையாதவாறு முட்கம்பிகளிலான வேலிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

ஜேர்மனுடனான எல்லைப் புறத்திலேயே சுவீடன் இந்நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ஜேர்மனிலிருந்து சுவீடன் நுழையும் பயணிகளின் பயண ஆவணங்கள் கடும் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. தாம் கடைப்பிடிக்கும் இந்தக் கடுமையான வழிமுறைகள் தவிர்க்க முடியாதவை என டென்மார்க் பிரதமர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டில் 163,000 அகதிகள் சுவீடனில் குடியேறினர். ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் ஆகக் கூடுதலான அகதிகள் குடியேறியுள்ள நாடு இதுவே. எனவே, இதனைக் கட்டுப்படுத்த வேண்டிய தேசை தமக்குள்ளது என்று குடிவரவு, நீதியமைச்சர் மோகன் ஜொஹான்ஸன் தெரிவித்துள்ளார்.

## லெபனான் எல்லைப் புறத்தில் இஸ்ரேல் இராணுவத்தை இலக்கு வைக்கும் ஹிஸ்புல்லாஹ்



தமது தளபதி ஒருவரை இஸ்ரேலிய இராணுவம் கொலை செய்தமைக்கு பழிவாங்கும் முகமாக இஸ்ரேலிய இராணுவத்தை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்துவதாக ஹிஸ்புல்லாஹ் இயக்கம் தெரிவித்துள்ளது. லெபனான், இஸ்ரேல் எல்லைப் புறமாக உள்ள ஷிபா பண்ணையிலேயே ஹிஸ்புல்லாஹ் பாரிய தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது.

அடையாளம் காணப்பட்ட 2 இஸ்ரேலிய இராணுவ வாகனங்கள் மீது தாக்குதல் நடத்தியதாக லெனானைத் தளமாகக் கொண்டு செயற்படும் ஷீஆ ஆயுதக் குழுவான ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளது. சிரியாவில் அஸதின் படைகளுக்கு ஆதரவாகப் போராடுவதிலும் இவ்வியக்கம் பங்கு கொண்டுள்ளது.

ஷிபா பண்ணை 1981 இல் ஆக்கிரமிக்கப்பட்ட கோலான் குன்றுகளின் ஒரு பகுதியாக இஸ்ரேலுடன் இணைக்கப்பட்டது. சர்வதேச சமூகம் இந்த இணைப்பை அங்கீகரிக்கவில்லை.

## வத்திக்கானின் நிலைப்பாட்டை பலஸ்தீனர்கள் வரவேற்கின்றனர்



பலஸ்தீனை தனிநாடாக அங்கீகரிக்கும் வத்திக்கானின் தீர்மானத்தை இஸ்லாமிய, கிறிஸ்தவ ஆணைக்குழு வரவேற்றுள்ளது. ஜெரூசலத்திற்கு ஆதரவான இக்குழுவின் செயலாளர் ஹனா இஸ்ஸா, வத்திக்கானுக்கும் பலஸ்தீனுக்கும் இடையில் நிலவும் உறவுகள் தற்போது மேலும் பலமடைந்துள்ளன. ஜெரூசலத்தையும் ஏனைய புனித நகரங்களையும் பாதுகாக்கின்ற வகையில் பலஸ்தீனத்தை ஒரு தனிநாடாக வத்திக்கான் அங்கீகரித்துள்ளமை பலஸ்தீனர்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் செய்தி எனவும் அவர் தெரிவித்தார்.

பலஸ்தீன் விடுதலை அமைப்பின் நிறைவேற்றுக் குழு அங்கத்தவர் வாசில் அபூ யூஸுபும் வத்திக்கானின் இத்தீர்மானம் பலஸ்தீன் தனிநாடு என்பதற்கான கிறிஸ்தவ உலகத்தின் அங்கீகாரத்திற்குரிய அடையாளம் என கருத்து வெளியிட்டுள்ளார்.

## நஹ்ழா கட்சியின் 10 ஆவது மாநாட்டுக்கான புதிய பிரதிநிதிகள் தெரிவு



துனிசியாவின் முக்கிய அரசியல் கட்சியான அந்நஹ்ழா 10 ஆவது தேசிய மாநாட்டுக்கான பிரதிநிதிகளைத் தெரிவுசெய்துள்ளது. ஏற்கனவே அந்நாட்டின் 7 மாகாணங்களில் 41 உள்ளூர் மாநாடுகள் நடத்தப்பட்டன. மாநாட்டு ஏற்பாட்டுக்குழுத் தலைவர் அலி ஹாபி இது குறித்துக் கருத்து வெளியிடுகையில், ''கட்சியின் ஷூறா சபை மற்றும் நிறைவேற்றுக் குழு என்பன மாநாட்டுப் பணிகளை மேற்பார்வை செய்யும்'' எனத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தேசியப் பிரச்சினைகள் குறித்து நஹ்ழா கட்சியின் தேசிய மாநாட்டில் விரிவாக ஆராயப்பட வுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடி எனும் மோசடி

## ராமர் கோயில் நிர்மாணிக்கத் தயாராகும் காவிப் பயங்கரம்

றவூப் ஸெய்ன்


History is the raw meterial for rationalist or ethnic or fundamentalist ideology as poppies are the raw meterials for heroin production.

Eric J. Hobsbawn

கடந்த நூற்றாண்டிலும் அதற்கு முந்தைய நூற்றாண்டிலும் இருந்ததைப் போன்று வரலாற்றின் மீதான குருட்டு நம்பிக்கைகள் மொத்தமாகவே தூர்ந்து போய்விட்டதாகக் கருத முடியாது. இதுவரை எழுதப்பட்ட எல்லா வரலாறுகளுமே சந்தேகத்திற்குரியவை. புனித பீடத்திலிருந்து அவை முற்றிலுமாக அகற்றப்பட்டு விட்டன என்பது இதன் பொருளல்ல.

ஒரு வகையில் வரலாறு என்பது தர்க்க ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட பொய். சாக மறுக்கும் பிசாசு. கற்பனை செய்து பார்க்க முடியாத மாயத்தோற்றங்களுடன் எங்கெங்கும் அலைந்து திரிவதற்கான வரம் அதற்குள்ளது. வரலாறு நம் எல்லோரையும் வசீகரிக்கும் பெரும் கதையாடல்களின் நீட்சி.

இப்பெரும் கதையாடல்களுக்குப் பின்னால் சிலபோது மத நம்பிக்கைகள் இருக்கின்றன. புராணங்களாலும் இதிகாசங்களாலும் கட்டமைக்கப்பட்ட வீரதீரக் கற்பனைகள் இருக்கின்றன. அவற்றின் வரவேற்பறைகளில் ஒளிவட்டங்களையுடைய தேவதைகளும் பின்கட்டுக்களில் சாத்தான்களும் நடமாடுகின்றன.



முற்றத்திலுள்ள பெரு விருட்சத்தில் தெவிட்டாத சுவையுடைய பொய்மையின் ரசம் ததும்பும் கனிகள் பழுத்திருக்கின்றன. கட்டமைக்கப்பட்ட எல்லா வரலாறுகளுக்குப் பின்புலத்திலும் நுண்மையான அரசியல் இருக்கிறது.

அதைத் தாண்டி இனவெறி இருக்கின்றது. அர்த்தமற்ற சடங்குகள், சம்பிரதாயங்கள் கூட இருக்கின்றன.

சமகால இந்தியாவில் இந்துத் தேசியவாதிகள் 'இந்து இந்தியா'வைக் கட்டமைக்க வரலாற்றை புதிது புதிதாய்க் கண்டுபிடிக்கின்றனர். ராமாயணம், மகா பாரதம் இப்போது வெறும் காப்பியங்கள் அல்ல. ராமன் வரலாற்று நாயகன். காப்பியத்தில் இடம்பெறும் அயோத்தி ராமன் பிறந்த இடம்; ரகு வம்சத்தின் தலைநகர் எனும் குருட்டு நம்பிக்கை இப்போது பாடப் புத்தகங்களில் வரலாறாக நிறுவப்பட்டு விட்டது.

அயோத்தியை மையப்படுத்தி இன்றைய இந்தியாவின் வரலாறு திருத்தி எழுதப்படுகின்றது. அதன் மீதே பா.ஜ.க.வின் காவிய அரசியல் கச்சிதமாய் எழுந்து நிற்கின்றது. வரலாற்றுத் திரிபும் புனைவுமே RSS காரர்களின் மூலதனம். இந்த இந்துத்துவ தேசியவாதம் இந்தியாவின் மதச் சார்பின்மையை குழிதோண்டிப் புதைக்கின்றது.

இந்தியாவின் இருள் வெளியிலிருந்து மேற்கிளம்பியுள்ள குருட்டு நம்பிக்கைகள் வரலாறாக மாற்றப்பட்டு, அதன் மீது ஒரு அரசியல் இயக்கம் எழுந்து விட்டது. அதன் கொடிய விளைவுதான் 1990 களில் 600 ஆண்டு பழைமை வாய்ந்த பாபரி மஸ்ஜித் இந்துத்துவ பாசிஸ்டுகளால் இடித்து நொறுக்கப்பட்டது. பாபரி மஸ்ஜித் தொடர்பான விசாரணை அறிக்கை வெளிவருவதற்கு 18 ஆண்டுகள் எடுத்தன. ஆனால், உப்புச் சப்பில்லாத அந்த அறிக்கை காங்கிரஸின் ஆட்சியில் உருப்படியான எந்த செயல் உந்துதலையும் அளிக்கவில்லை. இந்நிலையில் காங்கிரஸ் ஆட்சி கவிழ்ந்தது. RSS முகாமில் வளர்ந்த நரேந்திர மோடி 2014 மே இல் இந்தியாவின் பிரதமரானார். விளைவு இந்தியா மீண்டும் 100 ஆண்டுகள் பின்நோக்கி நகரத் தொடங்கியுள்ளது.

உத்தரப் பிரதேசத்தில் உள்ள அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதற்காக விஷ்வ ஹிந்து பர்ஷத் அமைப்பினர் 2 லொறிகளில் கற்களைக் கொண்டு வந்துள்ளனர். மோடி அரசுதான் ராமர் கோயிலைக் கட்டுவதற்கு அனுமதி கொடுத்து விட்டதாக மற்றொரு இந்துத் தீவிர இயக்கமான அயோத்தி ராம ஜென்ம பூமி நியாஸ் கர்ச்சிக்கின்றது. உத்தரப் பிரதேசத்தில் இது மீளவும் இந்து-முஸ்லிம் கலவரத்தைத் தூண்டலாம் என எச்சரிக்கப்படுகின்றது.

உச்ச நீதிமன்றத்தில் ராமர் கோயில் கட்டுவது தொடர்பான வழக்கு இன்னும் நிலுவையில் இருக்கின்றது. ஆனால், அயோத்தியில் பாபரி மஸ்ஜித் அமைந்திருந்த இடத்தில் ராமர் கோயிலை எப்படியும் கட்டிவிடுவது என்று இந்துத்துவ அமைப்புக்கள் ஒற்றைக் காலில் நிற்கின்றன.

கோயிலைக் கட்டுவதற்காக நாடு முழுவதிலும் கற்கள் சேகரிக்கப்பட்டு அயோத்திக்குக் கொண்டு வரப்படும் என ஆறு மாதங்களுக்கு முன்பே விஸ்வ ஹிந்து பர்ஷர் சூளுரைத்திருந்தது.

இந்நிலையில் திடீரென இரண்டு லொறிகளில் கொண்டு வரப்பட்ட கற்கள் கோயில் கட்டுவதற்கென குவிக்கப்பட்டுள்ளன. இக்கற்களை ராம்ஜென்ம பூமி நியாஸ் அமைப்பின் தலைவர் கோபால் தாஸ் பூஜை செய்தார். அப்போது செய்தியாளர்களிடம் பேசிய அவர், ராமர் கோயிலைக் கட்டுவதற்கான சமிக்ஞையை மோடி அரசு கொடுத்து விட்டது. அதனைத் தொடர்ந்தே ராமர் கோயிலைக் கட்டுவதற்காகத் தயாரிகின்றோம். தொடர்ந்து கற்கள் குவிக்கப்படும் என்றார்.

அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதற்கு மொத்தம் 2.25 இலட்சம் கன அடி கற்கள் தேவை. தற்போது அயோத்தியிலுள்ள விஷ்வ ஹிந்து பர்ஷத் அலுவலகத்தில் மொத்தம் 1.25 இலட்சம் கன அடி கற்கள் குவிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய கற்களை கொண்டு வரும் நடவடிக்கை தொடர்வதனால், உத்தரப் பிரதேசத்தில் பெரும் பதட்டம் நீடிக்கின்றது.


ஆட்சியிலுள்ள பாரதீய ஜனதா கட்சி RSS எனப்படும் தீவிர இந்துத் தேசிய இயக்கத்தின் அரசியல் முகமாகும். விஷ்வ ஹிந்து பர்ஷத், இந்து மகா சங்கம் என அதற்குப் பல்வேறு முகங்கள் உள்ளன. இந்த முகாமில் நன்கு வளர்க்கப்பட்ட இந்துத் தேசியவாதியே தற்போது இந்தியாவின் பிரதமராக உள்ள நரேந்திர மோடி.

2014 மே மாதம் மோடி பிரதமரான கையோடு அந்நாட்டின் இந்துத்துவ தீவிரவாதிகள் உற்சாகத்தோடு இயங்கத் தொடங்கினர். காவிப் பயங்கரத்திற்கு புதிய துணிவும் திமிறும் ஏற்பட்டுள்ளது. கிறிஸ்தவ மனித உரிமைக் குழு சமீபத்தில் மேற்கொண்ட ஆய்வின்படி 2014 மே முதல் 2015 ஆகஸ்ட் வரை சிறுபான்மை சமூகங்களுக்கு எதிராக இந்துத் தீவிரவாதிகள் 600 தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். அதில் 149 தாக்குதல்கள் கிறிஸ்தவர்களுக்கு எதிரானவை. எஞ்சிய சுமார் 450 தாக்குதல்கள் சிறுபான்மை முஸ்லிம்களுக்கு எதிரானவை.

இந்துத் தீவிரவாத அமைப்புக்களோடு தொடர்பான குழுக்களே இத்தாக்குதலை நடத்தி வருகின்றன. காங்கிரஸ் ஆட்சியிலிருந்த காலத்திலேயே RSS காரர்கள் மிகுந்த தீவிரத்துடன் இயங்கினர். கரசேவகர்களே சில மணித்தியாலங்களில் நூற்றாண்டுப் பழமை வாய்ந்த பாபரி மஸ்ஜிதை தகர்த்தனர். இந்தியாவின் பாதுகாப்புத் துறைக்கு வெளியே சட்ட ரீதியற்ற வெடிகுண்டு உள்ளிட்ட ஆயுதத் தொழிற்சாலைகளை நடாத்தி வரும் இந்துத் தீவிரவாதிகள், தற்போது மோடிக்குப் பின்னர் மிகுந்த உற்சாகத்துடன் இயங்குகின்றனர்.

கோப்ரேட் கம்பனிகள், சியோனிஸ இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் ஆதரவோடு தான் மோடி பற்றிய விம்பங்கள் ஊடகங்களில் கட்டமைக்கப்பட்டு, அவர் பிரதமராக்கப் பட்டார். இந்து இந்தியாவை உருவாக்குவதே அவருக்குப் பின்னாலுள்ள இயக்கத்தின் நோக்கம்.





பிஜேபி அதிகாரத்திலுள்ள மாநிலங்களில் இந்துத் தூய்மை வாதத்தைப் போதித்து சிறுபான்மை முஸ்லிம்களுக்கு எதிராக வெறுப்புப் பிரச்சாரம் செய்து வரும் காவிப் பயங்கரவாதம், முஸ்லிம்களை கட்டாய மத மாற்றத்திற்கு நிர்ப்பந்திக்கின்றது. சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன. மாட்டிறைச்சி உண்பவர்கள் அப்பட்டமாகக் கொல்லப்படுகின்றனர்.

தீவிரவாதிகள் ஆட்சியிலுள்ள மாநிலங்களில் பாடசாலை பாடப் புத்தகங்களில் வரலாறு திரித்து எழுதப்படுகின்றது. இந்துக்களுக்கே இந்தியா என்ற பொய் போர்த்தப்படுகின்றது. வளரிளம் பருவத்தினருக்கு ஆயுதப் பயிற்சி வழங்கப்படுகின்றது. யோகா மற்றும் உடற்பயிற்சி என்ப பெயரில் முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பு பிஞ்சு உள்ளங்களில் ஊட்டி வளர்க்கப்படுகின்றது.

இதன் பின்னணியிலேயே 52 வயதான முஹம்மத் அஹ்லாக் என்பவர் செப்டம்பர் மாதம் மாட்டிறைச்சி உண்டார் என்று வதந்தி கிளப்பப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். இக்கொலை மதச்சார்பற்ற இந்தியாவுக்கு மட்டுமன்றி, உலக ஜனநாயகத்திற்கும் கருத்துச் சுதந்திரத்திற்கும் விடுக்கப்படும் பெரிய அச்சுறுத்தலாகும்.

அரசியல் பிழைப்புவாதத்திற்காக அதிகாரத்தில் உள்ளவர்கள் வெவ்வேறு வகையான தந்திரோபாயங்களைக் கையாள்வது இந்நூற்றாண்டின் பெரிய சாபமாகும். பெரும் தேசியவாதம், ஏகாதிபத்திய எதிர்ப்பு, மத அடிப்படைவாதம் என்பன அந்தத் தந்திரோபாயங்களில் மிகவும் குரூரமானது. இந்தியாவில் செயல்படும் தீவிர இந்துத்துவ அமைப்புகள் பா.ஜ.க.வை ஆட்சியில் நீடிக்கச் செய்வதற்கு தூய இந்து இந்தியாவைக் கண்டுபிடித்துள்ளன.

அரசியல் சட்டம் எங்கள் புனித நூல் என்று பாராளுமன்றத்தில் வேஷம் போடுகிறார். சட்டம் குறித்த விவாதத்தில் கலந்து கொண்டு 70 நிமிடங்கள் உரையாற்றிய நரேந்திர மோடி, வெளி உலகிற்குப் போடும் முகமூடி மிகவும் அசிங்கமானது; ஆபத்தானதும் கூட.

"நமது அரசியல் சட்டம் ஒற்றுமையான இந்தியாவை வலியுறுத்துவதுடன், அனைத்து இந்தியர்களுக்கும் கண்ணியமான விடிவை உறுதி செய்கிறது. இந்தியா பல்வேறு மாறுபட்ட கலாச்சாரங்களைக் கொண்டது. அத்தகைய மாறுபட்ட மக்கள் அனைவரையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் அரசியல் சட்டத்திற்கு உண்டு. அதன் புனிதத் தன்மையைப் பாதுகாப்பது எமது பொறுப்பு என்கிறார்.

மோடியின் வாயிலிருந்து உதிர்க்கப்படும் பல்வேறு பொய்களில் இதுவும் ஒன்று. தான் ஒரு ஜனநாயகவாதி என்பதாகவும், பன்மைத்துவத்தை அங்கீகரிக்கும் தாராண்மைவாதி போலவும் மோடி தன்னை எவ்வளவுதான் காட்டிக் கொண்டாலும் அவரது உண்மைச் சொரூபம் இப்போது அயோத்தியில் வெளிப்படத் தொடங்கியுள்ளது.

மத வெறி ஊட்டப்பட்ட RSS மற்றும் விஷ்வ ஹிந்து பர்ஷத் அமைப்புக்கள்தான் தமது அரசியல் பிரிவான பா.ஜ.க.வை அதிகாரத்திற்குக் கொண்டு வந்துள்ளது. பாகிஸ்தான் பிரிவினையால் சிறுபான்மையாக்கப்பட்ட இந்தியாவின் 20 கோடி சிறுபான்மை முஸ்லிம்களை தொடர்ந்தும் அரசியல் அநாதைகளாக வைத்திருப்பதற்கு இந்துத்துவம் என்ற புதிய பூதம் களமிறங்கியுள்ளது.

மோடியின் ஒரு வருட ஆட்சியில் மதச் சுதந்திரமோ, கலாசாரப் பன்மைத்துவமோ ஆரோக்கியமானதாய் இல்லை என்ற விமர்சனங்கள் தூக்கலாக மேலெழுந்துள்ளன. தூய இந்தியாவைக் கட்டமைக்கும் இந்துத்துவவாதிகள் ராமர் கோயிலைக் கட்டுவதற்கு வெளிக்கிளம்பியுள்ளமை மதச்சார்பின்மைக்கு விடுக்கப்படும் பெரிய அச்சுறுத்தலாகும். ஜனநாயகம் பன்மைத்துவம் அனைத்துக்கும் அடிக்கப்படும் சாவு மணியாகும்.

இத்தனைக்கும் மோடி இந்தியாதான் எனது அரசின் மதம்.

மோடியின் அரசாங்கத்தில் சிறுபான்மை முஸ்லிம்கள் இனி எதிர்பார்ப்பதற்கு எதுவும் இல்லை. ஏனெனில், மோடி ஒரு வகையில் ஜனநாயகத்தின் முகமூடி. இன்னொரு வகையில் ஜனநாயகத்திற்கு இழைக்கப்படும் பெரும் மோசடி. முகமூடிகளும் மோசடிகளும் அதிகாரத்தில் நீடிக்கும் வரை ஒரு நாடு முன்நோக்கி நகரப் போவதில்லை. வெளிப்பூச்சுகளும் வார்த்தை ஜாலங்களும் இந்தியா வல்லரசாக மாறப் போகின்றது என்ற மாயை உருவாக்கலாம். ஆனால், அது உண்மை அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாத மேடை

# தமிழ் - முஸ்லிம் உறவும் அரசியலும்

(ஈ.எல்.எம்.இர்ஷாத்)

இலங்கையில் நீண்ட காலமாக பரஸ்பர நல்லுறவுடன் ஐக்கியமாக வாழ்ந்து வந்த சமூகங்கள் ஒருவருக்கொருவர் எதிரிகளாக மாறி கசப்புணர்வுகளையும். காழ்ப்புணர்வுகளையும் தாராளமாக அனுபவித்து, கொடிய மூன்று தசாப்தங் களையும் கடத்தி விட்டு, தற்போது நல்வாழ்வுக்கான காலமொன்றை அடைந்திருக்கின்றார்கள்.

போருக்குப் பின்னரான இலங்கையில் அதிகம் பேசப்படும் ஒரு விடயமே இன நல்லுறவு ஆகும். கடந்த காலப் போர் விட்டுச் சென்ற தடயங்களில் இனத் துவேசங்களும், இனமுரண்பாடுகளும் முக்கியமானவை. குறிப்பாக வடகிழக்கு தமிழ்-முஸ்லிம் உறவு மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தது. இதனால் சமூக உளவியலில் ஏற்பட்டிருந்த கரும்புள்ளிகள் கொடூரமானவை.

பல்லினம் கொண்ட ஒரு நாடு உண்மையான அபிவிருத்தியை நோக்கி நகர வேண்டுமாயின் அங்குள்ள இனங்களின் ஒத்துழைப்பும், ஐக்கியமும் அவசியமானதாகும். ஒரு இனம் அடுத்த இனத்தைச் சுரண்டி வாழும்போது, பாரபட்சம் காட்டும்போது, சீண்டிப் பார்க்கும் போது, காழ்ப்புணர்வுகளை கட்டவிழ்த்து விடும்போது, உரிமைகளைப் பறிக்கும்போது பாதிப்படைவது சமூக ஐக்கியம் மட்டுமல்ல, ஒட்டுமொத்த நாட்டினுடைய அபிவிருத்தியுமே கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. இதுதான் இலங்கை யுத்த வரலாறு எமக்குப் புகட்டிய பாடம்.

அண்மைக் காலமாக குறிப்பாக தமிழ்-முஸ்லிம் உறவு வலுப்பெற்று வருவது திருப்தியளிக்கின்றது. கடந்த வடமாகாண சபைத் தேர்தலையொட்டி தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணிக்கும் (NFGG) இடையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை இச்சந்தர்ப்பத்தில் முன்மாதிரியாகக் கொள்ளப்பட வேண்டியது. இவ்வாறான செயற்பாடுகள் இன நல்லுறவை வலுப்படுத்துவது மாத்திரமன்றி, பேரினவாதிகளுக்கும் பிரித்தாள முனையும் சர்வதேச மற்றும் உள்நாட்டு அரசியல்வாதிகளுக்கும் பேரிடியாக அமையும்.

அரசியல் ரீதியான உடன்படிக்கைகளை யும் தாண்டி கல்வி, கலாசார அம்சங்களி லும் கூட்டிணைந்த திட்டங்களைச் செயற்படுத்தலாம். இதனை சர்வ சமய ஒன்றியங்கள், சிவில் சமூக நிறுவனங்கள், சமூக சேவை நிறுவனங்கள் செய்யலாம்.

இன நல்லுறவினை ஆரம்பமாக திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும். சமூக, அரசியல் ரீதியில் உயர் மட்ட உடன்பாடுகள் இனங்காணப்பட்டு, பேணப்பட வேண்டும். இதற்கென்றே நல்லுறவுச் சங்கங்களை நிறுவ முடியும். துரதிஷ்டவசமாக இலங்கையில் காணப்படும் அரசியல் கட்சிகள் அனேகமானவை இனச்சார்பு கட்சி களாகவே காணப்படுகின்றன.

தேர்தல் காலங்களில் கூட்டிணைந்த அரசியல் நிறுவனங்கள், பொதுவான இலக்குகளை வரையறுத்துச் செயற்படுவது மிக முக்கியமானது. ஏனெனில், இனங் களுக்கிடையிலான துவேசக் கருத்துக்கள் தேர்தல் காலங்களிலேயே அதிகம் பகிரப் படும். அதுவும் அரசியல் வாதிகளினா லேயே மேற்கொள்ளப்படும். அந்த சந்தர்ப்பங்களில் அரசியல் நிறுவனங்கள், கட்சிகள் இணைந்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு பரஸ்பர உடன்பாடு களோடும் சகிப்புத் தன்மையோடும் பரஸ்பர விட்டுக் கொடுப்போடும் செயற்படுவது அவசியமாகும்.

# கல்முனை நகர தமிழ்-முஸ்லிம் உறவில் பாரிய விரிசல்

(பி.எம். முஜீபுர் ரஹ்மான்)

கல்முனை அபிவிருத்திக்கு தமிழர்கள் ஏன் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள்? தமிழர்கள் ஏன் முஸ்லிம்களை நம்புகிறார்களில்லை? முஸ்லிம்கள் ஏன் தமிழர்களை நம்புகிறார்களில்லை? இது குறித்து இரு தரப்பு அரசியலும் என்ன செய்கின்றன? இதன் வரலாறு எப்படி அமைந்தது என்பன குறித்து இவ்வார வாத மேடையில் நோக்குவோம்.




1957 ஆம் ஆண்டு முதல் கல்முனை, பொத்துவில், சம்மாந்துறை முஸ்லிம் களுக்கும் தமிழர்களுக்குமிடையில் நீண்டகாலமாக சில மனக்கசப்புகள் தொடர்ந்தும் இருந்து வருகின்றன. முஸ்லிம்கள் எங்களது காணிகளையும், சில சொத்துக்களையும் அடாத்தாகப் பிடித்துள்ளார்கள் என தமிழ்த் தரப்பினர் கூறுகிறார்கள்.

அதேநேரம் நாங்கள் எந்த அநியாய மும் செய்யவில்லை, சட்டப்படிதான் அனைத்து வேலைகளையும் செய்துள்ளோம் என முஸ்லிம்கள் தெரிவிக்கின்றனர்.

கல்முனை நகரை முஸ்லிம்கள் அடாத்தாகப் பிடித்திருக்கிறார்கள். முஸ்லிம்கள் பண ஆசைகளைக் காட்டி, நலிவற்ற தமிழ் சமூகத்தை தாக்கி, அவர்களின் காணிகளையும் சொத்துக் களையும் பிடித்துள்ளார்கள் என தமிழர் கள் கூறுகிறார்கள். கல்முனை நகரம் தமிழர்களின் பாரம்பரிய பூமி என்றும், அதனை முஸ்லிம்கள் ஆக்கிரமித்துள் ளார் கள் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

கல்முனை முதலாம் வட்டாரத்தில் வாடி வீட்டுப் பிரிவில் பிசர் எனும் பெயருடைய ஆங்கிலேயர் ஒருவர் அரசி டமிருந்து 38 ஏக்கர் தோட்டத்தை வாங்கி, அந்தக் காணியில் தெங்கு உற்பத்தியை 50 ஆண்டுகளாகச் செய்து வந்துள்ளார். பின்னர், அவரிடம் வேலை பார்த்த இராஜநாயகம் எனும் தமிழருக்கு நன்கொடையாகக் கொடுத்து விட்டு, தன் சொந்த நாட்டுக்குச் சென்று விட்டார். இக்காணிகளை முஸ்லிம்கள் ஆக்கிரமித்து, அதிலேயே வாழ்ந்து வருகிறார்கள் என தமிழ்த் தரப்பினர் குற்றம் சாட்டுகின்றனர்.

முஸ்லிம்கள் இக்காணிகளை தகுந்த விலை கொடுத்து வாங்கி, அதிலே குடியேறியுள்ளதாக முஸ்லிம்கள் கூறு கின்றனர். இதற்கான முழு ஆதாரங்க ளும் முஸ்லிம்களிடம் உள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு, கல்முனை நகரில் அமைக்கப்பட்டுள்ள பள்ளிவாசல் தமிழர்களுக்குச் சொந்தமான காணியில் அமைந்துள்ளதாகவும், அதனை முஸ் லிம் கள் அடாத்தாகப் பிடித்துள்ளார்கள் என்றும் நீண்டகாலமாக தமிழர்கள் குற்றம் சாட்டி வருகிறார்கள்.

ஆனால், ஆங்கிலேயர் காலத்தில் ஒவ்வொரு வருடமும் அரச காணிகள் ஏலத்தில் விடப்படுவது வழக்கம். இவ்வேல விற்பனையிலேயே முஸ்லிம் கள் இக்காணியை வாங்கியுள்ளார்கள். 1934 ஆம் ஆண்டு கல்முனையைச் சேர்ந்த முத்துக் கிருஷ்ணன் என்பவரும், மருதமுனையைச் சேர்ந்த பக்கீர் தம்பி மரைக்காயர் என்பவரும் அரச காணி களை ஏலத்தில் வாங்கி ஆட்சி செய்து வந்துள்ளனர். அதன் பின்னர் முத்துக் கிருஷ்ணன் என்பவர் பக்கீர் தம்பி என்பவருக்கு காணியை விற்றுள்ளார். இதனை மட்டக்களப்பைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவர் எழுதியுள்ளார்.

இந்த பக்கீர் தம்பியின் பின் உறுத்தாளிகளே இக்காணியை இக்கல்முனைப் பள்ளிவாசலுக்கு கொடுத்துள்ளதாக வரலாறு கூறுகிறது என முஸ்லிம்கள் தெரிவிக்கின்றனர்.

1947 ஆம் ஆண்டு கல்முனை பட்டின சபையாகப் பிரகடனப்படுத்தப்பட்ட போது சில பொதுச் சொத்துக்களின் பராமரிப்பு அச்சபையிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது. அவற்றுள் பொலிஸ் கட்டிடம், சந்தைப் பகுதி, பிஸ்கால் கட்டிடம், பகிரங்க வேலைப் பகுதி காரி யாலயம், கல்முனை வைத்தியசாலை என அனைத்தும் உள்ளடங்கும். இதில் சந்தைப் பகுதியில் மீன் விற்பனை நிலையம், இறைச்சிக்கடை என 33 கடைத் தொகுதிகள் இருந்துள்ளன.

இக்கடைத் தொகுதியில் கல்முனைத் தமிழர்களுக்கு 7 கடைகளும், யாழ்ப் பாணத் தமிழர்களுக்கு 4 கடைகளும், இந்தியத் தமிழர்களுக்கு 2 கடைகளும், கல்முனை நகர முஸ்லிம்களுக்கு 12 கடைகளும், இந்திய முஸ்லிம் வியாபாரிகளுக்கு 6 கடைகளும், மருதமுனை முஸ்லிம்களுக்கு 2 கடைகளும் பங்கிடப்பட்டிருந்தன. மொத்தமாக இன அடிப்படையில் தமிழர்களுக்கு 13 கடைகளும், முஸ்லிம்களுக்கு 20 கடைகளும் பங்கிடப்பட்டிருந்தன. இது குறித்து தமிழர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

ஆனால், 25 வீதமான கல்முனைத் தமிழர்களுக்கு 40 வீதமான கடைகள் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது. இது முஸ்லிம்களின் பெருந்தன்மையைக் காட்டுவதாக முஸ்லிம்கள் தெரிவிக்கின்றனர்.

கல்முனைக்குடிக்கும் சாய்ந்தமருது வுக்கும் இடையில் தமிழர்கள் வாழ்ந்தார் கள் என்றும், அவர்களை இம்முஸ்லிம் க்கள் பலவந்தமாக வெளியேற்றினார்கள் என்று தமிழ் தரப்பினர் குற்றச்சாட்டை முன்வைக்கிறார்கள். குறித்த பிரதேசத் தில் வண்ணான் எனப்படுகின்ற, உடுப்புத் தோய்க்கும் சிலர் வாழ்ந்து வந்ததாகவும், அவர்களை முஸ்லிம்கள் வெளியேற்றியுள்ளார்கள் எனவும் அவர்கள் கூறுகிறார்கள்.

உண்மையில் வண்ணான் இனத்தவர் கள் சிலர் அப்பகுதியில் வாழ்ந்துள்ளார் கள். அவர்கள் எப்போதும் முஸ்லிம் , களை அண்டிய பகுதிகளிலேயே வாழ்ந்துள்ளார்கள். காலப்போக்கில் அவர்கள் முஸ்லிம்களுக்கு அக்காணி களை அதிக விலைக்கு விற்று விட்டுச் சென்றுள்ளார் கள். அப்பிரதேசத்தில் சுமார் 9 வண்ணான் குடும்பங்கள்தான் வாழ்ந்து வந்தனர் என முஸ்லிம்கள் தெரிவிக்கின்றனர்.

### தமிழ் - முஸ்லிம் உறவு இணைந்த செயற்பாடு

கல்முனை நகரம் செனிட்டரி சபை யாக சுமார் 43 வருடங்களும், உள்ளூ ராட்சி சபையாக 36 வருடங்களாகவும், பட்டின சபையாக 34 வருடங்களும், ஆக மொத்தம் 113 வருடங்களாக நகர அந்தஸ்துடன் செயற்பட்டுள்ளது. இதற்கு முஸ்லிம்கள் வரி செலுத்தி வந்துள்ளனர்.

இதன் பின்னர் ஆங்கிலேயரின் காலத்தில் நிலத் தொடர்பு, நீர் வசதி, பொருளாதார வசதி, சுகாதார நிலை, அபிவிருத்தி என்பவற்றிக்காக 7 வட்டாரங்களாகப் பிரித்துள்ளனர். இதில் தமிழர்களின் பாரம் பரியப் பிரதேச ங்களும் முஸ்லிம்களின் பாரம்பரியப் பிரதேசங்களும் உள்ளடங்குகின்றன. இதில் 2 வட்டாரங்கள் தமிழ் வட்டாரங்களாகவும் 1 தமிழ் முஸ்லிம் கலப்பு வட்டாரமாகவும், 4 தனி முஸ்லிம் வட்டாரங்களாகவும் பிரித்து அமைத்திருந்தனர்.

இங்கு சுமார் 113 வருடங்களாக தமிழ் மற்றும் முஸ்லிம்கள் இணைந்து அபிவிருத்தி செய்தும் நிருவகித்தும் வந்துள்ளனர் என முஸ்லிம்கள் தெரிவிக்கின்றனர்.

நகர தலைவர்களாகவும் பிரதிநிதி களாகவும் தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகளும் மாறி மாறி நிருவகித்து வந்துள்ளனர். கிட்னப் பிள்ளை உடை யார், சீனி விதானை, என்.எஸ். தங்க ராசா ஆகிய தமிழ்த் தலைவர்களும், முஸ்லிம்களில் ஏ.கே.காரியப்பர், இஸ் மாயில் காரியப்பர், ஹேக் முதலியார், எம்.எஸ்.காரியப்பர் ஆகியோர் முஸ்லிம் தலைவர்களாகவும் இருந்துள்ளனர்.

இன்று கல்முனை நகரத்தில் இயங்கும் தமிழ்ப் பாடசாலையான உவெஸ்லி பாடசாலையை ஏ.கே. காரியப்பர் என்ற முஸ்லிம்தான் ஆரம்பித்து வைத்தார் என முஸ்லிம்கள் தெரிவிக்கின்றனர். இதன் மூலம் தமிழ் முஸ்லிம் உறவு சிறப்பாக இருந்துள்ளது என்பது புலனாகிறது.

ஆனால், இன்றைய அரசியலும் இன்றைய சில சமூக செயற்பாட்டாளர் களும் இரு இனத்தையும் பிரித்தாள முயற்சிக்கின்றனர். இதனை இரு இனத்தவர்களும் புரிந்து செயற்படுவது முக்கியமாகும். கல்முனை முஸ்லிம்கள் தமிழர்களின் பிரச்சினைகளைப் புரிந்து விட்டுக் கொடுத்து செயற்படுவதோடு, தமிழ்த் தரப்பினரும் தற்போதைய முஸ்லிம்களைப் புரிந்து செயற்படுவதன் மூலமே கல்முனையை முன்னேற்ற முடியும்.

## எல்லை மீள்நிர்ணயம்... (01 ம் பக்கத் தொடர்)



இதற்கு பரந்த அளவிலான எல்லை மீள்நிர்ணயம் தேவைப் படுவதால் இதற்கென ஒருகமிட்டியும் 2012 இல் நியமிக்கப்பட்டது.

இந்தச் சட்டங்களின்படி, எல்லை நிர்ணய செயற்பாடுகள் முடியும் வரையில் பழைய தேர்தல் முறையில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு அல்லது மேற்குறிப்பிட்ட சட்ட மூலங் களை முழுமையான முறையில் செயற்படுத்துவதற்கு முடி வெடுக்கும் வாய்ப்பு இருந்தது.

ஆனாலும் 2013 ஜனவரி முதலாம் திகதிய வர்த்தமானியில் அப்போதைய அமைச்சர் அதாவுல்லா அறிவித்ததன்படி மேற்குறிப்பிட்ட சட்ட சீர்திருத்த ஒழுங்குகளை முழு மையான முறையில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு பழைய தேர்தல் முறை காலாவதியாகிறது. இதனால் புதிய முறையில் தேர்தலை நடத்த வேண்டியுள்ளதோடு, புதிய முறை எல்லை மீள்நிர்ணயத்தை வேண்டிநிற்கிறது.


தேசிய எல்லை நிர்ணயக் குழு 2015 ஜூன் 19 இல் முன்வைத்த அறிக்கையிலுள்ள எல்லை நிர்ணய வரைபில் முறைகேடுகள் உள்ளதாக ஆயிரத்துக்கு மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இந்த முறைப்பாடுகளை தீர்க்கும்வரை எல்லை நிர்ணயம் பூரணமடைவதில்லை. எல்லை நிர்ணயம் பூரணமடையாத வரை தேர்தலை நடத்த முடியாது என அவர் தெரிவித்தார்.

## சிங்ஹ லே... (01ம் பக்கத் தொடர்)

சிங்ஹலே என்ற சொல் பௌத்தர்கள் அல்லது சிங்களம் பேசுபவர்கள் என்ற அர்த்தத்தை கொடுத்துவிடக் கூடாது. அது யாருக்கும் தலைவணங்காத, எவருக்கும் கீழ்ப்படியாத சிங்கத்தின் இரத்தம் போல இருக்க வேண்டும். வீரமுள்ள சிங்கத்தைப் போன்று நாங்கள் தலைநிமிர்ந்து நடக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம்களுக்கு எதிரியாக முளைத்த பொதுபல சேனா தொடர்பிலும் முன்னாள் ஜனாதிபதியின் பரிவாரம் கண்டனம் தெரிவிக்காமல் அவர்களது செயல்களை அங்கீகரித்து வந்தமையும் குறிப்பிடத்தக்கது. நாட்டில் இஸ்லாமியப் பயங்கரவாதம் வளர்ந்து வருவதாக மஹிந்த ராஜபக்ஷ உடஹமுல்ல கூட்டத்தில் கூறியிருக்கிறார்.

## தாஜுதீன்... (01ம் பக்கத் தொடர்)



சிக்கலான தடயங்களை தேடுவதில் நிபுணத்துவம் பெற்ற கொழும்பு பல்கலைக்கழக கணினிப்பிரிவு இது விடயத்தில் கைவிரித்துள்ளது. தாஜுதீனின் வாகனமும் துரத்தி வந்த வாகனமும் மாத்திரமே தெளிவாகத் தெரிவதனால் மேலதிக விபரங்களை அறிவதற்கு அமெரிக்காவின் எப்.பி.ஐ. இடமோ இங்கிலாந்தின் ஸ்கொட்லான்ட்யார்டிடமோ ஒப்படைப்பது தான் சிறந்தது என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

தாஜுதீனின் கொலை விவகாரம் பல விடயங்களை அம்பலப்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் கிடைத்த தடயங்களுக்கு என்ன நேருமோ என்ற அச்சம் தற்போது தலைதூக்கத் தொடங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமிக்குப் பதினொரு வருடங்கள்: முஸ்லிம் குடும்பங்கள் தற்காலிக குடிசைகளில்

லதீப் பாறூக்

சுனாமிப் பேரலையின் வருடாந்த நினைவு கூறல் கடந்த டிசெம்பர் 26ம் திகதி இடம்பெற்றது. இது எமது மனச்சாட்சி மற்றும் மத ரீதியான தார்மீக தேடலுக்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

முன்னொருபோதும் இலங்கைத் தீவை தாக்காத அளவிற்கு பேரழிவு மிக்க இயற்கை சுனாமி அனர்த்தம் பல்லாயிரக்கணக்கான உயிர்களை காவு கொண்டதுடன், குடும்பங்களையும், சமூகங்களையும் துடைத்தெறிந்து கட்டடங்களைத் தரைமட்டமாக்கி, கிராமங்கள், நகரங்கள் என்பவற்றை



விழுங்கிய நிகழ்வானது இதற்கு முன்னர் ஒருபோதும் நிகழ்ந்திடாத பேரழிவாகும்.

இவ்வலைகள் பரந்த வேகத்தில் மளர்ந்து போயின, உயிர்ப் பிழைத்தவர்கள் வாயடைத்துப் போய் அதிர்ச்சியில் உணந்து போக விட்டுவிட்டுச் சென்றது.

சுனாமியின் பின்னரான சில நாட்கள், வாரங்களின் பின்னர் பாதிக்கப்பட்டவர்களுக்காக எல்லையில்லா அனுதாபங்கள் காணப்பட்டன. பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழ்வின் அனைத்து துறைகளிலும் உதவுவதற்கு எல்லா சமூகங்களிலிருந்தும் மிகப் பெருந்தொகையினர் முன்வந்தனர்.

இன, மத வேறுபாடுகளைத் தாண்டி பெருபாலோனோரின் செயற்பாடுகள் மிகவும் பாராட்டக்கூடியதொன்றாகும். அத்துடன் அன்பு, மனிதநேயம் என்பன சராசரி மக்கள் மத்தியில் இன்னும் உயிருடன் இருக்கின்றதென்பதனை இவை நிரூபித்துள்ளனர்.

பிளவுற்றிருந்த சமூகங்களை சுனாமி ஒன்றிணைத்தாலும் முரண்பாடுகளின் காரணமாக ஏற்பட்ட ஒரு வருட காயத்துக்குள் குறுகிய கனவாக இதுமாறியது.

பதினொரு வருடங்கள் கடந்தும் கணிசமான அளவு பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் இன்றுவரை உக்கிப்போன குடிசைகளில் வாடுகின்றனர். இது தவிர சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்காக சுமார் 500 வீடுகள் சவூதி நாட்டு அரசாங்க நிதிஉதவியுடன் கட்டப்பட்டது. இருப்பினும் நீதிமன்ற வழக்கின் காரணமாக இதுவரை எவரும் குடியமரத்துப்படாமல் வளரந்து வரும் காடுகளுக்கு மத்தியில் இவை ஏறத்தாழ சிதைந்து போய்யுள்ளன.

சுமார் மூன்று அரை மில்லியன் அமெரிக்க டொலர்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டது. சுனாமியால் பாதிக்கப்பட்ட கஷ்டப்படுகின்றவர்களின் இன்னல்களைப் போக்குவதற்கு வாய்ப்பு இருந்த போதிலும், இந்நிலையானது அரசியல்வாதிகளாலும் அதிகாரங்களாலும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் அன்றைய ஊழல் எதிர்ப்பு துணை நிர்வாக இயக்குனர் Rukshana Nanayakara குறிப்பிடுகையில்: இந்த நிதிப் பணத்துக்கு என்ன நடந்ததென்பதை அறிந்து கொள்ள பெரும்பாலும் இயலாமல் போய்விட்டது. ஆரம்ப கட்ட அரசாங்க கணக்கு பரிசோதனையின்படி புனரமைப்புப் பணியின் முதல் வருடத்தில் உதவித் தொகையின் 13% மானதே பயன்படுத்தப்பட்டுள்ளது. இதுதவிர எந்தவித முறையான கணக்கு பரிசோதனையும் இதுவரை இடம் பெறவில்லை.

அத்துடன் உதவிப் பணத்துக்கான முறையான பதிவுகளும் இருக்கவில்லை. நிதித் தொகையின் மிகச்சிறிய தொகையே உண்மையாக பாதிக்கப்பட்டவர்களைச் சென்றடைந்ததாகவே நம்ப வேண்டிவிட்டது.

அத்துடன் அன்றைய அரசாங்கம் கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையை அலட்சியம் செய்தது. இவ் அறிக்கையானது முறைகேடுகள் தொடர்பாகவும், 26.12.2014 - 30.06.2015 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் இடம்பெற்ற தோல்விக்குரிய கொடுக்கல் வாங்கல் பற்றியும் விபரிக்கக் கூடியதாகவுள்ளது. இது பொது திறைசேரி, மத்திய வங்கி, சுங்கத் திணைக்களம் என்பவற்றினை விமர்சனத்திற்குட்படுத்தக் கூடிய தவறுகளாகும்.

மேலும் ஏழமான பொலிஸ் விசாரணை இவ்வறிக்கையானது தற்போது தூசு படிந்துள்ளது. அத்துடன் மஹிந்தவின் அரசாங்கம் இவ்வறிக்கையை நிராகரித்ததுடன் ஊழல் நிறைந்த அதிகாரிகளை நியமித்து அரசியல் தலைவர்களுக்கு தீங்கற்ற விதத்தில் செயற்பட வைத்தது.

கணக்காய்வாளர் நாயகம் எஸ்.சீ. மாயதுன்ன அவர்களின் கருத்துப்படி ''அரசாங்க அதிகாரிகள் உரிய வழிமுறைகளை பின்பற்ற தவறியதால் மில்லியன் கணக்கான அமெரிக்க டொலர் பெறுமதியான சுனாமி உதவித் தொகை தவறான முறையில் செலவிடப்பட்டுள்ளது. மேலும், இவ் அதிகாரிகள் கோடிக்கணக்கான ரூபாய்களை சுனாமியால் நேரடியாக பாதிக்கப்படாத ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு வழங்கினர். ஆனால், சுனாமியால் உண்மையாக பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தவர்களில் பலர் நிவாரண ஒதுக்கீடுகளுக்கு தகுதியுடையவர்களாகவிருந்தும் அவர்களுக்கு அன்றாட உணவு நிவாரணம் கூட வழங்கப்படவில்லை.

சிலர் சுனாமியால் பாதிக்கப்படாதவர்களாக இருந்தும் வீடுகளைப் பெற்றனர். மேலும் சிலர் ஏனையோர் எதுவித மீன்பிடி படகுகளையும் பெறாத நிலையில் இரண்டு அல்லது மூன்று படகுகளை பெற்றுக் கொண்டனர். அத்துடன் அதிகாரிகள் அவசரத்துக்கு அழுத்தம் வழங்கி உண்மையான தர நிலைகளுக்கு இணங்கி நடக்க தவறிவிட்டனர். மேலும் சுனாமியானது அரசாங்கத்தினுடைய குறைபாடுகளை பல விதங்களில் மறைப்பதற்கு அருள்புரிந்தது.

அத்துடன் சுனாமி உதவிதொகையால் உள்நாட்டு நாணய மதிப்பை ஐந்து விகிதத்திற்கு மேலால் தக்கவைத்துக் கொண்டும் கடன் மன்னிப்பு, கடனைக் காலம் தாழ்த்திக் கொடுப்பதற்கான சட்ட உரிமை போன்ற சலுகைகளையும் ஏக காலத்தில் அனுபவித்தது.

பாரியளவில் ஊழல், வீண் விரயம் செய்தவர்களுக்கெதிராக தெளிவான ஆதாரங்கள் இருந்தும் ராஜபக்ஷவின் அரசாங்கம் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்பதனை பிந்திய விசாரணைகள் தெளிவுபடுத்தியுள்ளன. அதேவேளை அரசியல்வாதிகள் தமது ஆதரவாளர்களுக்கு நிதியை வழங்கவும்



வேறு தேவைகள் மற்றும் தமது பங்காளர்களின் நலன்களுக்காகவும் சுனாமி உதவிப் பணத்தை பகிர்ந்தளிக்கவும் அதிகாரிகளுக்கு உடந்தையாகச் செயற்பட்டனர்.

ஒரு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு. (சுனாமி உதவிப்) பணங்கள் பலமான அரச நிறுவனங்களுக்கு மாற்றப்பட்டது மட்டுமல்லாமல் தனிநபர், வர்த்தக நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் போன்றவற்றின் கணக்குகளுக்கும் பரிமாற்றம் செய்யப்பட்டன.

இவ்வளவு ஏன், முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிலின்டன், தலைமையில் செயற்பட்ட சுனாமி மதிப்பீட்டு கூட்டணி (Tsunami Evaluation Coalition) யின் அறிக்கையில் இலங்கை தேவைக்கதிகமான உதவியைப் பெற்றுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகையினால் இலங்கைத் தீவானது சிறப்பான முறையிலும், மிகத் திறமையாகவும் மீள் கட்டுமானத்திற்குட்படுத்தப்பட வேண்டும்.

முஸ்லிம் மீள்கட்டுமானம் மீள்குடியமரத்தல் என்ற நிறுவனம் ( Muslim Reconstruction and Resettlement Organization) மேற்கொண்ட ஆய்வின் பின்னர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அனர்த்த நிவாரண கண்கானிப்பு பிரிவிடம் தாமதம் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் உரிமை மீறல்கள் பற்றி முறைப்பாடு - செய்துள்ளது.

எத்தனை பேர் அழிந்து போனார்கள் என்பதனை எவருக்கும் உறுதியாக கூறமுடியாது. சில அறிக்கைகளின் தரவுகளின்படி 14 மாவட்டங்களில் 35,322 பேர் கொல்லப்பட்ட அதேவேளை 516,150 மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும், 65,275 வீடுகள் முழுமையாக சேதமடைந்தும், 38,561 வீடுகள் பகுதியளவில் சேதடைந்துமுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, கணக்கிடப்பட்ட மொத்த அழிவுத் தொகை 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

தென் மாகாணம், தென்கிழக்கு, கிழக்கு கரையோரம் போன்ற பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம்கள் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டார்கள். சில மதிப்பீடுகளின்படி இலங்கையில் இருக்கின்ற முஸ்லிம் சமுகத்தின் மொத்த தொகையில் ஒரு வீதமான மக்களை முஸ்லிம் சமூகம் இழந்துள்ளது.

அன்றைய ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க, லண்டனிலிருந்து நாடு திரும்பி கிழக்கு பகுதியில் பாதிக்கப்பட்ட சில பகுதிகளுக்கு மேற்கொண்ட உடனடி விஜயத்தின் போது பாதிக்கப்பட்ட உதவியற்றவர்களின் வீடுகள் ஆறுமாத கால பகுதிக்குள் மீள்கட்டுமானம் செய்யப்பட்டு வழங்கப்படும் என்று உறுதிப்பாட்டை வழங்கிச் சென்றார். ஆனால், இந்த வாக்குறுதிகள் சுனாமி அலைகள் வந்து வேகமாய் தொலைந்து போனது போல காணாமால் போய்விட்டன.

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து ஒன்றரை மாத்தின் பின்னர், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நான் மேற்கொண்ட விஜயத்தின் போது உயிர்பிழைத்தவர்களின் துயரங்களை வார்த்தைகளால் விபரிக்க முடியாதென்பதை உணர்ந்து கொண்டேன், அவர்களில் பெரும்பாலானோர் இன்றும் அதிர்ச்சியில் வாழ்ந்து வருகின்றனர்.

ஆறு மாதங்கள் கழிந்த பின்னரும், கிழக்கு மாகாணம் கிட்டத்தட்ட புறக்கணிக்கப்பட்ட பகுதியாகவே இருந்தது. அத்துடன் அனர்த்த காலங்களில் கூட திட்டமிட்ட பாகுபாடு காட்டப்பட்டது. மேலும் நியாயபடுத்துவதற்கு எதுவித காரணமுமின்றி குறித்த ஒரு பிராந்தியம் மனித அவலங்களும் துன்பங்களுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளதென்பதை பலரும் சுட்டிக்காட்டினர்.

கிழக்கு மாகாணத்தில் உயிர்பிழைத்தவர்கள் விரக்தியுடன் அரசாங்கம், அரச அமைப்புக்கள் அரசியல் வாதிகளுக்கெதிராக ஆவேசத்துடன் கொதித்தெழுந்ததுடன், வெளிநாட்டு நன்கொடையாளர்களின் முன்னெப்போதும் இல்லாத மனித அவலங்களுக்கு முன்னால் மேற்கொண்ட அலட்சியத்திற்காகவும் சீற்றம் கொண்டனர்.

அத்துடன் அவர்களது கஷ்டங்கள் நீக்கப்படாத நிலையில் ஏககாலத்திய சுனாமியால் பாதிக்கப்பட்ட தென்மாகாணத்தில் பல்வேறு திட்டங்களுக்காக அன்னாறம் அடிக்கல் நாட்டப்பட்டதாகவும் முறைப்பாடு செய்தனர்.

இச்சூழ்நிலையில் இலங்கைக்கு வருகைதந்த வெளிநாட்டு தலைவர்கள் தென்பகுதிகளுக்கு மாத்திரமே அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களில் ஒருவர் கூட கிழக்கில் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்படவில்லை.

மேலும் முஸ்லிம்கள் பெரும்பான்மை யாக வாழும் கிழக்கு மாகாணத்தில் கடுமையாக பாதிக்கப்பட்ட கரை யோர கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கு எதுவித கவனமும் செலுத்தப்படவில்லை. தவிர அம்பாரை மாவட்டத்தில் இருக்கின்ற அரசாங்க அதிகாரிகள் கூட கல்முனைப்பகுதியை சூழவிருக்கின்ற பிரதேசங்களை தரிசிப்பதில் கூட தவறிழைத்தனர்.

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து இரண்டு வருடங்களின் பின்னர்கூட கிழக்கு மாகாணத்தில் நிலைமை எதுவித முன்னேற்றமும் அடையவில்லை.

அத்துடன் அன்றைய ஐக்கிய நாடுகளின் பொதுத்தலைவர் கொபி அனான் போரில் ஈடுபட்ட அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகள் போன்ற இரு தரப்பினரையும், இவர்களின் வன்முறைகள் காரணமாக மீள்கட்டுமாணப் பணிகள் தாமதமாகியதென்று கடுமையாக சாடினார்.

''ஒருவருக்கும் பேரழிவை ஏற்படுத்திய சுனாமி அலைகளை தடுத்து நிறுத்த முடியாமல் போனது. ஆனால் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து மீண்டும் இலங்கை மக்களை விழுங்குவதற்கு அச்சுறுத்திக் கொண்டிருக்கும் முரண்பாட்டு அலைகளைத் தடுக்க வேண்டும். மேலும் இந்து நேசிய சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீள்கட்டுமானத்திற்கு உற்படுத்துவதிலிருந்து மக்களின் ஐக்தியத்தை பாராட்டினார். மாற்றமாக இலங்கையில் அந்த மனிதளமாறநிலை நிலைத்திருக்கவில்லை''

ஒரு கருணையுள்ளம் கொண்ட சிங்கள பத்திரிகையாளர் அவரது கட்டுரையில் நிலைமையை இவ்வாறு சுருக்கி பத்து வருடத்திற்கு முன்னர் குறிப்பிட்டிருந்தார்.

அந்நேரத்தில் நாம் அனைவரும் கிளர்ந்தெழுந்தது. உண்மைதான் ஆனால், கவலைக்குரிய உண்மையான விடயமென்வென்றால் எவ்வளவு வேகமாக எழுந்தோ அதைவிடவும் விரைவாக எமது செயற்பாடுகள் ஸ்தம்பிதமானது.

காரணம் டிசெம்பர் 26ம் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெற்ற மிகவும் கோரமான அழிவினாலாகும். ஒரு இலங்கை பிரஜையாக, ஒரு மானிட நேயமுள்ள மனிதனாக நாம் துயரத்துடன் நினைவு கூற வேண்டியது அதைத்தான்.

மேலும் கர்பலாவை நம்பியிருக்கும் பௌத்த நாட்டில் நாம் ஒரு விடயத்தை செய்ய முற்படும் போது அபசகுனமான நேரமென்றால் அது மேற்குறிப்பிட்ட நேரமாகத்தான் இருக்கும் எனவே நான் மிகவும் தாழ்மையாக வேண்டிக் கொள்வது எமது இரத்த ஓட்டத்திலும், இதயத் துடிப்பிலும், உணர்ச்சிகளிலும் இருக்கின்ற கவலைக்கிடமான உண்மையானதெனில், பிரச்சினைகளை தீர்த்து கொள்வதாக, சிறந்த செயற்பாடுகளை தீர்த்து கொள்வதற்காக, சிறந்த செயற்பாடு களை தீர்த்து கொள்வதற்கான சந்தர்ப்ப சூழ்நிலைகளை உருவாக்காமையேயாகும்.

ஆகவே, நாம் எமது குறைகளை திருத்திக் கொண்டு நாட்டின் பெறுமதிமிக்க பிரஜைகளாக அபிவிருத்தியையும் மனிதநேயத்தையும் ஒருங்கிணைத்து முன்நோக்கி நடைபோடுவோம், அது தனியொருவராக அல்ல மாற்றமாக சுனாமி அலைகளினால் துயர்கண்ட நெஞ்சங்கள் ஒவ்வொறினதும் கடப்பாடாகும்.

தமிழில்: றிஹான் அமீர் அலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைச் சூழலில் ஸலாத்தை பரப்புதல்

## முஸ்லிம்கள் மீதுள்ள தார்மீகப் பொறுப்பு



முஹம்மத் பகீஹுத்தீன்



இலங்கை முஸ்லிம் சமூகம் நீண்ட நெடுங்காலமாக ஸலாத்தை பரப்பும் தஃவா செயற்பாட்டில் தமக்குள் மாத்திரம் அதனை சுருக்கி வைத்துக் கொண்டு மூடுண்ட சமூக வாழ்வை கடைப்பிடிப்பது ஏன் என்ற கேள்விக்கு விடை தேடும்போது பின்வரும் உண்மை புலனாகின்றது.

அந்நியர்களுக்கு முஸ்லிம்கள் முந்திக் கொண்டு ஸலாம் சொல்வது கூடாது என்ற சிந்தனைப் போக்கு அதிகமான இஸ்லாமிய அறிஞர்கள் மத்தியில் பரவலாகக் காணப்படும் கருத்தாகும். இதே சிந்தனைப் போக்கு இலங்கை முஸ்லிம் சமூகத்திலும் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பொதுக் கருத்தாகவே காண முடிகிறது. அதற்கான காரணம் யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் நீங்கள் முந்திக் கொண்டு ஸலாம் கூற வேண்டாம் என நபிகளார் தடுத்துள்ள பிரபல்யமான ஸஹீஹான ஹதீஸாகும்.

இது இலங்கை சூழலில் மாத்திரமல்ல சர்வேதச முஸ்லிம் சமூகத்திலும் வேர் பிடித்துள்ள ஒரு சிந்தனையாகவே இருந்து வருகிறது. ஆனால் அந்நியர்கள் முஸ்லிம்கள் மீது ஸலாம் சொன்னால் பதில் கூறுவது ஆகுமானதே என்பதில் பாரிய கருத்து வேறுபாடுகள் எதுவும் இல்லை.

அதேவேளை இன்னும் பல இஸ்லாமிய அறிஞர்கள் பிற மத சகோதரர்களுக்கு ஸலாம் கூறுவது ஆகுமானதே என்றும், அது தஃவாவின் பார்வையில் கண்டிப்பான ஒரு சுன்னா என்றும் அபிப்பிராயப்படுகின்றனர். சகவாழ்வுக்கும் நல்லிணக்கம் பேணி வாழ்வதற்கும் இஸ்லாம் முதன்மைப்படுத்துகின்ற மனித நேயப் பெறுமானங்களில் இது மகத்தானது என்றும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அப்படியென்றால் இந்தக் கருத்து வேறுபாடு தோன்றுவதற்கான காரணம் என்ன? இது குறித்த அணுகுமுறை யாது? ஷரீஆவின் பின்னணியில் இந்த விவகாரத்தை எப்படி நோக்குவது? போன்ற கேள்விகளுக்கு தெளிவான பதில் கிடைக்கும் போதுதான் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம் சமூகத்தில் ஸலாத்தை பரப்புவது ஒரு தஃவா சார்ந்த பொறுப்பு என்பதை உணர முடியுமாக இருக்கும்.

அண்மையில் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் மத நல்லிணக்கம் தொடர்பாக கருத்தாடல் நடைபெற்றபோது, அதில் கலந்து கொண்ட மட்டக்களப்பு மாவட்ட இந்து மதகுரு, முஸ்லிம்கள் பிற மதத்தவர் களுக்கு ஸலாம் சொல்வதுமில்லை, பிற மத சகோதரர்கள் ஸலாம் சொன்னால் அதற்கு முஸ்லிம்கள் தங்களுக்கு மத்தியில் பதில் சொல்வது போல் 'வஅலைக்கும் ஸலாம்' என்று பதில் சொல்வதுமில்லை. 'வஅலைக்கும்' என்று மாத்திரம் கூறுவார்கள் என தனது நியாயமான ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

இங்குதான் நாம் இது பற்றி சீரியஸாக சிந்திக்க வேண்டியுள்ளது. இலங்கை சூழலில் ஸலாத்தைப் பரப்புவதில் ஷரீஆ ரீதியான தடைகள் உள்ளனவா? இன, மத நல்லிணக்கம் பாதிக்கும் வகையில்தானா இஸ்லாமிய முகமன் (ஸலாம்) அமைந்துள்ளது. ஸலாத்தை பரப்புவது பற்றி அல்குர்ஆன் மற்றும் சுன்னாவின் அடிப்படைக் கொள்கை எப்படி அமைந்துள்ளது? போன்ற கேள்விகளுக்கு விடை காணும்போதுதான் நடுநிலையான பாதைக்கு திரும்பி வர முடியும்.

இது ஸலாத்தை பரப்புதல் என்ற எண்ணக்கருவை புரிந்து கொள்வதற்கான ஒரு சிறந்த வாசிப்பு. மாறாக இங்கு குறித்த விடயம் தொடர்பான சட்டத் தீர்ப்பை முன்வைப்பது எமது நோக்கம் அல்ல. இந்த வாசிப்பு காலத்தின் தேவையையும் நலன்களையும் கருத்திற் கொண்டு சிறந்த தீர்வை நோக்கி நகர்வதற்கான பாதைக்கு வழிகாட்ட வேண்டும் என்றே அவாவுருகின்றோம்.

அவ்வாறே சிந்தனைக்கு வேலி கட்டாமல் பரந்த அறிவை தேடும் சுன்னாவை நோக்கிப் பயணிப்பதற்கு வழி கோலும் என நம்புகிறோம். மேலும் நபிகளாரின் சுன்னாவை, நபித் தோழர்களும், இஸ்லாமிய அறிஞர்களும் இமாம்களும் எவ்வாறு அணுகியுள்ளார்கள் என்பதைப் புரிந்து கொள்வதற்கும் இந்த வாசிப்பு உதவியாக அமையலாம்.

அந்நியர்களுக்கு ஸலாத்தை பரப்பும் விடயத்தில் வந்துள்ள பின்வரும் ஹதீஸ் மிகவும் பிரபல்யமானது. ''நீங்கள் யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் முந்திக் கொண்டு ஸலாம் சொல்ல வேண்டாம். அவர்கள் உங்களுக்கு ஸலாம் சொன்னால் 'வஅலைக்கும்' என பதில் சொல்லுங்கள். (ஆதாரம் புகாரி)

இந்தக் கருத்தில் இன்னும் பல ஸஹீஹான ஹதீஸ்கள் உள்ளன. அவற்றை தொகுத்து நோக்கும்போது குறித்த ஹதீஸை எப்படிப் புரிய வேண்டும் என்ற உண்மை புலனாகும்.

மேற்கூறிய ஹதீஸின் சந்தர்ப்ப சூழ்நிலைகளை மற்றும் அதன் பின்னணியை நோக்கும்போது நபிகளார் ஏன் அவ்வாறு ஸலாம் சொல்வதை தடுத்தார்கள் என்பதை அறிந்து கொள்ளலாம். யூதர்கள் குரோதம் கொண்டு நபிகளாரையும் நபித் தோழர்களையும் இழிவுபடுத்தும் வகையில் 'அஸ்ஸாம் அலைக்கும்' என கூறுவார்கள். அதன் பொருள் உங்களுக்கு மரணம் உண்டாகட்டும் என்பதே.

அப் போது ரஸூல் (ஸல்) அவர்கள் 'வஅலைக்க' என மாத்திரம் பதில் கூறி விடுவார்கள். இப்படித்தான் அவர்களுக்கு பதில் கூறவேண்டும் என்றும் கற்றுக் கொடுத்துள்ளார்கள். இது யூதர்களுக்கு முஸ்லிம்கள் ஸலாத்தைக் கொண்டு ஆரம்பிப்பதை நபிகளார் தடை செய்வதற்கான பின்னணியின் ஒரு வடிவமாகும்.

மற்றொரு சந்தர்ப்பத்தில் இறைதூதர் (ஸல்) அவர்கள், இதற்கான காரணத்தை பின்வருமாறு விளக்கியுள்ளார்கள். அஹ்ஸாப் யுத்தத்தின் பின்னர் மதீனா வந்தடைந்த நபிகளார், தம்முடனான உடன்படிக்கையை முறித்து, இக்கட்டான கட்டத்தில் துரோகம் செய்த யூத கோத்திரமான பனூகுறைழாக்களின் கோட்டையை முற்றுகையிட சென்ற சமயம், ''நீங்கள் யாரும் அவர்களுக்கு (போராடும் யூதர்களுக்கு) ஸலாம் கூற முந்த வேண்டாம் என்றும் அவர்கள் உங்கள் மீது ஸலாம் சொன்னால் 'வஅலைக்கும்' என மாத்திரம் பதில் கூறும் படியும் பணித்தார்கள்.'' இது தான் அந்நியர்களுக்கு ஸலாம் சொல்ல முந்த வேண்டாம் என்று வந்துள்ள ஹதீஸ்களின் பின்னணியாகும்.

இந்தப் பின்னணி எமக்கு புகட்டும் பாடம் யாதெனில், யுத்த சூழலில் நேரடியாக எதிரிகளை களத்தில் சந்திக்கும் போது ஸலாம் கூறும் ஒழுங்கு முறையை நபிகளார் கற்றுத் தந்துள்ளார்கள்.

நெருக்கடியான அந்த கெடுபிடி நேரத்தில் கூட பதில் ஸலாம் சொல்வதை மனித நேயமாகவே பார்த்துள்ளர்கள். எனவே சமாதானமாக வாழும் பாதுகாப்பான சமூக சூழலில் முகமலர்ச்சியுடன் ஸலாம் கூறுவதை பற்றி கேட்கவே தேவையில்லை. இருந்தும் நபிகளார் (ஸல்) அவர்கள் யூதர்களை யூதர்கள் என்று அறிந்த நிலையில் அவர்களுக்கு ஸலாம் கூறி பின்னர் நீண்ட நேரம் கதைத்தும் உள்ளார்கள் என்ற ஒரு நம்பகமான செய்தியை இமாம் நஸாஈயின் ஆசிரியர் அபூ யஃலா அறிவித்துள்ளார். (முஸ்னத் அபீ யஃலா: 6830)

எனவே குறிப்பிட்ட ஒரு காலக் கெடுவில் விதிவிலக்கான ஒரு சூழ்நிலையில் கடைபிடிக்க வேண்டிய ஸலாத்தின் ஒழுங்கை பொதுவான சட்டமாக நோக்கும் போதுதான் பார்வைகள் வேறுபடுகின்றன. மக்கள் மத்தியில் இறுக்கமான சிந்தனைகள் தோன்றுகின்றன. அது ஒரு குறிப்பிட்ட கால, சூழலுக்குரியது என்பதை ஏனைய ஹதீஸ்கள், குர்ஆன் வசனங்கள் நபிகளாரின் நடைமுறை வாழ்வு எமக்கு தெட்டத் தெளிவாக விளக்கிய பின்னர் அந்த நபி வாக்கை பிரத்தியேகமான சூழலுக்குரிய சட்டமாக நோக்குவதே இஸ்லாமிய சட்ட மரபாகும்.

### பிற மத சகோதரர்களுக்கு ஸலாம் கூறுவது கண்ணியக் குறைவு அல்ல

ஸலாம் என்பது முஸ்லிம்களது முகமன், வாழ்த்துதலாகும். அது அவர்களுக்கு மத்தியில் மாத்திரம் பகிரப்பட வேண்டிய மூடுண்ட வாழ்த்து முறை அல்ல. சகல இன, மத, குலங்களுக்கும் மத்தியில் பொதுவாக பரிமாறப்படும் எல்லோரும் அறிந்த இஸ்லாமிய வாழ்த்துப் பிரயோகமாகவே ஸலாம் இருந்து வந்துள்ளது. நபிகளாரின் வழிகாட்டலும் அதுவே. பிற மத சகோதரர்களுக்கு ஸலாத்தை கூறுவதால் அவர்களை போற்றிப் புகழ்ந்து அவர்களின் தரத்துக்கு மேலால் அவர்களை உயர்த்தி மதித்ததாக பொருள் கொள்ள வேண்டிய அவசியம் கிடையாது. காரணம் யூதர்கள் ஸலாம் என்ற வார்த்தையை மாற்றி உங்களுக்கு மரணம் உண்டாகட்டும் என்று கூறிய போதும் கூட ரஸூல் (ஸல்) அவர்கள் 'வஅலைக்கும்' என பதில் கூறியுள்ளார்கள். எனவே இங்கு தகுதிக்கு அப்பால் மெச்சிப் போற்றுவது என்ற பொருளுக்கு இடமே இல்லை.

முஸ்லிம் அல்லாதவர்களுக்கு ஸலாம் கூறுவதற்கு முந்திக் கொள்வது இறை நிராகரிப்பாளர்களை கண்ணியப்படுத்தியதாக அமையும் என சிலர் எண்ணுகின்றனர். அந்நியருடனான தொடர்புகள் குறித்து இஸ்லாத்தின் அடிப்படைகளை புரிவதில் வந்த தவறே இந்த எண்ணத்திற்கு காரணம். அவர்களுடன் அந்நியோனிய உறவும் தொடர்பும் உருவாகும் வகையில் தான் பரஸ்பர அறிமுகமே உள்ளது.

எனவே தான் ரஸூல் (ஸல்) அவர்கள் ''அவர்களுடன் யார் ஸலாத்தை கொண்டு ஆரம்பிக்கின்றாரோ அவர்தான் மக்களிலேயே அல்லாஹ்விற்கு மிகவும் பிரியமுள்ளவன்'' என்று கூறியுள்ளார்கள். எனவே கண்ணியமானவன் யார் என்றால் பிறருக்கு மத வேறுபாடின்றி ஸலாம் கூறுபவனே என நபிகளார் விளக்கியுள்ளார்கள்.

ஸலாத்தை பரப்புவது பொதுவான ஒரு சுன்னா என்பதை அல்குர்ஆன் பல இடங்களில் கூறுகிறது.

ஸூறதுன் நூரில் நீங்கள் வீடுகளுக்கு சென்றால் ஸலாம் கூறி நுழையுங்கள் என்று வழிகாட்டும் போது ''வீடுகள்'' என்றே குறிப்பிடுகின்றது. மாறாக முஸ்லிம் வீடு-காபிர் வீடு என்று பாகுபடுத்திக் கூறவில்லை. இமாம் தபரியவர்கள் ஸூரா இப்ராஹீமின் வசனமொன்றுக்கு விளக்கம் சொல்லும் போது ''நீங்கள் யூத வீடுகளுக்குள் நுழைந்தால் ''அஸ்லாமு அலைக்கும் என்று'' சொல்லுங்கள். அங்கு யாரும் இல்லையென்றால் ''அஸ்ஸலாமு அலைனா'' என உங்கள் மீதே ஸலாம் கூறிக் கொள்ளுங்கள் என்று குறிப்பிட்டுள்ளர்கள்.

ஸூரா கஸஸின் 55 ஆவது வசனத்தில் எங்களுடைய செயல் எங்களுக்கு. உங்களுடைய செயல் உங்களுக்கு. உங்களுக்கு ஸலாம் உண்டாகட்டும் என்று நம்பிக்கை கொண்டோர் பதில் கூறுவார்கள் என அல்லாஹுத் தஆலா முஃமின்களின் பண்பாட்டை சிலாகித்து கூறியுள்ளான்.

இது தவிர இப்ராஹீம் (அலை) தனது தந்தையைப் பார்த்து ஸலாம் என்று கூறியது, முஃமின்கள் அறிவீனர்களைப் பார்த்து ஸலாம் என்று கூறுவார்கள் போன்ற பல அல்குர்ஆன் வசனங்கள் உள்ளன.

பல்லின சமூகத்தின் உறவுக்கான அடிப்படைகளை அல்குர்ஆன் முன்வைக்கும்போது பரஸ்பர அறிமுகம் முக்கிய ஒரு கூறாகவே பிரஸ்தாபிக்கப் படுகின்றது. ஒரு முஸ்லிம் தனக்கே உரிய ஸலாம் என்ற வாழ்த்தைக் கொண்டுதான் அந்த அறிமுகத்தை மேற்கொள்ள வேண்டும். அது சகவாழ்வுக்கு வழிவகுக்கும். சகவாழ்வு நாளைய நல்லிணக்கத்திற்கு பாதை காட்டும். நல்லிணக்க சூழல் இஸ்லாம் என்ற மாபெரும் அருளை சுவைக்க வாய்ப்பாக அமையும். அந்த வகையில்தான் ஸலாத்தை பரப்புவது தஃவா ரீதியான ஒரு பொறுப்பு எனக் கூறுகின்றோம்.

எனவே இன, மத வேறுபாடின்றி, பிறருக்கு ஸலாம் சொல்வது மனித வாழ்வின் இயல்பான ஒரு கருமம் என்பதைப் புரிந்து கொள்வோம். விதிவிலக்கான யுத்த சூழலைத் தவிர. அந்த விதிவிலக்கான சமயம் வரும்போது மாத்திரம் ரஸூல் (ஸல்) அவர்கள் தவிர்ந்து கொள்ளுமாறு கூறிய ஹதீஸ் அமுலுக்கு வரும்.

### சுன்னாவில் ஸலாத்தை பரப்புவ்து குறித்து வந்துள்ள ஹதீஸ்கள் :

''தெரிந்தவர்களுக்கும் தெரியாதவர்களுக்கும் ஸலாம் கூறுங்கள்'' (புகாரி, முஸ்லிம்) இந்த ஹதீஸ் முஸ்லிம், முஸ்லிம் அல்லாத சகலரையும் குறிக்கும். ஏற்கனவே குறிப்பிட்டது போல் குறிப்பிட்ட யுத்த சூழலில் இஸ்லாத்திற்கு எதிராக போராடும் குழுவினருக்கு மாத்திரம் ஸலாம் கூறுவதைத்தான் நபிகளார் தடுத்துள்ளார்கள்.

''அல்லாஹுத் தஆலா ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களை படைத்து விட்டு ஆதமை நோக்கி அங்கே அமர்ந்திருக்கின்ற மலக்குமார்களுக்கு ஸலாம் கூறுமாறும் பின்னர் அவர்கள் உங்களுக்கு ஸலாம் கூறுவதை அவதானிக்கு மாறும், அவர்கள் கூறுவது தான் உமதும் உமது பரம்பரையினருக்குமான (ஸலாம்) வாழ்த்தாகும் என்றும் அல்லாஹ் கூறினான். அவர் அங்கு வந்து 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்றார்கள். அதற்கு மலக்குமார்கள் 'அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்' என்று கூறினார்கள்'' (புகாரி-முஸ்லிம்)

முதல் மனிதன் ஆதமுக்கும் அவர்களின் சந்ததியினர்களுக்குமான இஸ்லாமிய வாழ்த்து இதுதான். ஆதமின் சந்ததியில் முஸ்லிம், காபிர் இருப்பது தெரிந்ததே. இருந்தும் அனைவருக்கும் பொதுவான வாழ்த்தாகவே அல்லாஹ் இதனைக் கற்றுக் கொடுத்தான். எனவே மனிதர்கள் யாவரும் சகோதரர்கள். சகோதரர்களுக்கு மத்தியில் ஸலாம் சொல்வதில் வேறுபாடு தேவையில்லை என்பதையே அல்லாஹ் இங்கு கற்றுத் தருகின்றான். ''மனிதர்கள் யாவரும் சகோதரர்களே'' என்பது ஒரு நபி மொழியாகும்.

'ஸலாத்தை பரப்புங்கள்' என்று ஏராளமான ஹதீஸ்கள் வந்துள்ளன. அவை முஸ்லிம்கள் மத்தியில் என குறிப்பாக அன்றி பொதுவாகவே வந்துள்ளது.

### பிற மத சகோதரர்களுக்கு ஸலாம் சொல்லுவதில் ஸலபுஸ் ஸாலிஹீன்களது நடைமுறை:

இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு ஸலாம் கூறுவது பற்றி குறிப்பிடும் போது ஸலாம் கூறுவது தோழமை பாராட்டுவதின் உரிமை எனக் கூறியுள்ளார்கள் (அஹ்காமுல் குர்ஆன், ஜஸ்ஸாஸ் (ரஹ்), பாகம் 5, பக்கம் 315)

அபூ உமாமா (ரழி), அபூ தர்தா (ரழி), இப்னு அப்பாஸ் (ரழி), இப்னு மஸ்ஊத், இப்னு உமர் (ரழி) கதாதா (ரழி), இப்னு முஹய்ரீஸ், உமர் இப்னு அப்துல் அஸீஸ் போன்ற இன்னும் பல ஸஹாபாக்களும் தாபியீன்களும் பிற மத சகோதரர்களுக்கு ஸலாம் கூறுவதுடன் அது நல்லதொரு சுன்னா என்பதையும் விளக்கியுள்ளார்கள். அந்த வரிசையில் இமாம் ஷஅபி, ஸுஃப்யான் பின் உயைனா, இமாம் அவ்தாஈ, இமாம் மாவர்தி போன்ற இன்னும் பலருடைய கருத்தும் அனைவருக்கும் ஸலாம் சொல்லலாம் என்பதே. நான்கு மத்ஹபை சார்ந்த பல புகஹாக்களும் இந்த கருத்தை ஆதரித்தே கருத்து வெளியிட்டுள்ளனர். நவீன கால அறிஞர்களான அஷ்ஷெய்க் மர்ஹூம் ரஷீத் ரிழா, லெபனான் சட்டமா அதிபராக இருந்த மர்ஹூம் பைஸல் மௌலவி, கலாநிதி கர்ளாவி, உஸ்தாத் அப்துல் ரகுமான் அல்பர் போன்ற பலரும் மேற்கூறிய விதிவிலக்குடன் ஸலாத்தை பரப்புவது தஃவா என்றவகையில் முஸ்லிம்கள் மீதுள்ள பொறுப்பு என்ற சிந்தனை முகாமைச் சார்ந்தவர்களே.

பிற மத சகோதரர்களுக்கு ஸலாம் கூறுவது சம்பந்தமாக இமாம் அவ்ஸாஈயிடம் வினவியபோது,

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷெலினா ஸஹ்ரா

## பிரிட்டனில் ஒரு கலாசாரப் போராளி



நான் இஸ்லாத்தில் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடத்தைத் தேடுகின்றேன். மேற்கில் ஜெக்ஸ்ட்ரோ அல்லது பிளேயர் கூறுவதுபோல் இஸ்லாம் பெண்களை அடக்கி ஆளவில்ல. பெண்களின் பர்தா இவர்கள் கூறுவது போன்று அடிமைச் சின்னமல்ல. அவமானத்திற்குரியதுமல்ல. மேற்கில் வாழும் முஸ்லிம் பெண்களுக்கு இரு வகை அடையாளங்கள் உள்ளன. அவள் வாழும் நாட்டின் தேசிய அடையாளம் அவளுக்குமுள்ளது. தனது சமய அடையாளமான இஸ்லாமிய தனித்துவமும் அவளுக்குள்ளது. இஸ்லாம் பெண்களை எப்போதோ விடுதலை செய்துவிட்டது. பெண்கள் இங்கு விடுதலையை வேண்டி போராடத் தேவையில்லை.

நான் ஒரு பிரிட்டிஷ் பெண்ணாகவும் இஸ்லாமியப் பெண்ணாகவும் இருக்கின்றேன். அதில் எனக்கு எந்த சங்கடமும் இல்லை. இந்த இரட்டை அடையாளம் குறித்து மேற்கிலுள்ள முஸ்லிம் பெண்களிடையே ஒரு விழிப்புணர்வை உருவாக்குவதே எனது வாழ்நாள் நீடித்த பணியாகும்.

இது Love in a headscarf எனும் பிரபல நூலின் ஆசிரியர் பிரித்தானிய எழுத்தாளர் ஷெலினா ஸஹ்ரா ஜான் முஹம்மதின் கருத்தாகும்.

ஸஹ்ரா உலகப் புகழ்பெற்ற The Times, The Gurdian, The National, The Musllim News, Emel சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் இஸ்லாம் மற்றும் சமகால விவகாரங்கள் குறித்து தொடர்ச்சியாக எழுதி வருகின்றார். மேற்கில் வாழும் முஸ்லிம் பெண்கள் மற்றும் இஸ்லாம் குறித்து குறிப்பான ஆர்வம் அவரது எழுத்தில் தொனிக்கின்றது. பிரிட்டனில் இஸ்லாம் குறித்து நிலவும் படி வார்ப்புச் சிந்தனைகளை தனது எழுத்தின் மூலம் ஸஹ்ரா உடைத்து வருகின்றார்.

BBC, Gurdian என்பவற்றுக்கு தொடர்ச்சியாகப் பங்களிக்கும் அவரது இணையம் sprit21 எனும் பெயரில் இயங்குகின்றது. அது பல விருதுகளை வென்றுள்ளது. லண்டனில் வசித்து வரும் ஸஹ்ரா, பிரிட்டனில் பல தொலைக்காட்சி அலைவரிசைகளில் அடிக்கடி தோன்றுகிறார். பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சு மற்றும் பொதுநலவாய நாடுகளின் உயர் மட்ட அதிகாரிகளோடு சமாதான இடையீட்டாளராகக் கலந்து கொள்வதற்கு பல்வேறு நாடுகளுக்கும் அவர் பயணம் செய்துள்ளார். அந்த வகையில் எகிப்து, சவூதி அறேபியா, இந்தோனேஷியா, கட்டார், துருக்கி, சூடான் போன்ற நாடுகளுக்கு பலமுறை அவர் விஜயம் செய்துள்ளார்.

பிரிட்டன் முஸ்லிம்களுக்கும் அறபு இஸ்லாமிய நாடுகளில் வாழும் முஸ்லிம்களுக்கும் இடையில் விரிவான கலந்துரையாடல்களை நடத்திச் செல்வதில் ஸஹ்ரா குறிப்பான ஆர்வம் கொண்டுள்ளார். இளம் பிரிட்டிஷ் முஸ்லிம்களுக்கான பல்வேறு சமூக, கலாசார நிகழ்வுகளைத் திட்டமிட்டு ஏற்பாடு செய்து வரும் இவர், பிரிட்டனில் ஒரு புதிய முஸ்லிம் அடையாளத்தை உருவாக்கி வருகிறார்.

கல்வியிலும் தொழில் வாய்ப்பிலும் பிரிட்டிஸ் முஸ்லிம் மாணவர்களுக்கும் அங்குள்ள பிற சிறுபான்மை சமூக மாணவர்களுக்கும் புலமை பரிசில் வழங்கும் நோக்கில் அவரால் ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனத்தையும் ஸஹ்ரா வழிநடத்தி வருகின்றார்.

பிரிட்டனின் பிரபல த டைம்ஸ் பத்திரிகை மற்றும் பிரிட்டன் சமத்துவம் மற்றும் மனித உரிமை ஆணைக்குழு என்பன நடத்திய கருத்துக் கணிப்பீட்டில் பிரிட்டனில் வசிக்கும் செல்வாக்குள்ள 100 பெண் களில் ஒருவராக ஸஹ்ராவை அறிவித்தது. உலகில் செல்வாக்குள்ள 500 பெண்களில் ஒருவராகவும் அவர் கருதப்படுகின்றார்.

British Muslim Awards இற்கு 2014 ஜனவரியில் அவர் தெரிவானார். ஊடகத் துறைக்கு அவர் ஆற்றிய பங்களிப்புக்கு இந்த விருது வழங்கப்பட்டது. இவர் எழுதிய Love in a headscarf எனும் நூல் பிரிட்டிஷ் முஸ்லிம்களிடையே பெரும் கவனயீர்ப்பைப் பெற்றுள்ளது. மேலைத் தேய மதச்சார்பற்ற கலாசார சூழலில் பர்தா எனும் இஸ்லாமிய அடையாளத்துடன் ஊடகங்களுக்கு தலைநிமிர்ந்து பேட்டியளிக்கும் ஸஹ்ராவின் தன்னம்பிக்கையையும் துணிச்சலையும் ஊடகங்கள் ஆச்சரியத்தோடு பார்க்கின்றன. இஸ்லாமிய அடையாளத்துடன் பெண் சமூக வாழ்வில் தாராளமாகப் பங்கேற்க முடியும் என்பதற்கு ஸஹ்ரா ஓர் உதாரணம்.

இவரது நூல் குறித்து Journal of Islmaic Law and Culture இதழில் அபூ ஸுப்யான் என்பவர் மிக விரிவான திறனாய்வொன்றை எழுதியுள்ளார். Ther Gurdian, The Times பத்திரிகைகளிலும் இந்நூல் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற ஸஹ்ரா, வடக்கு லண்டனில் தனது கணவன், பிள்ளைகளோடு வாழ்ந்து வருகின்றார்.

# இலங்கையில் முஸ்லிம் அரசியல்

### 11 ஆவது பாராளுமன்றம்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 11 ஆவது பாராளுமன்றத் தேர்தல் 225 பேரை தெரிவுசெய்யும் வகையில் 2000-10-10 அன்று இடம்பெற்றது. அதில் 23 முஸ்லிம் உறுப்பினர்கள் தெரிவாகினர். பிரதமர் ரத்னசிறி விக்ரமநாயக்க தலைமையிலான பாராளுமன்றம் 200-10-18 இல் முதல் அமர்வை நடத்தியது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அத்தேர்தலில் மக்கள் ஐக்கிய முன்னணியுடன் சேர்ந்து போட்டியிட்டது. ஒப்பந்தத்தின்படி றவூப் ஹக்கீம் கண்டி மாவட்டத்தில் தேசிய ஐக்கிய முன்னணியில் (NUA) போட்டியிட்டார். ஏனையோர் பொ.ஜ.ஐ.மு.வில் போட்டியிட்டனர்.

எம்.எச்.எம். அஷ்ரப் திகாமடுல்ல மாவட்டத்தில் பொ.ஜ.மு இல் போட்டியிட இருந்த நிலையிலேயே 2000 செப்டம்பர் 14 இல் விமான விபத்தில் உயிரிழந்தார். அவரது இடத்திற்கு வேட்பாளர் பட்டியலில் பேரியல் அஷ்ரப் நியமிக்கப்பட்டார். அவர் தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்றத்திற்குத் தெரிவானார்.

இப்பாராளுமன்றத்திற்கு விருப்பத் தெரிவு வாக்குகள் மூலம் 16 உறுப்பினர்களும் தேசிய பட்டியல் மூலம் 07 உறுப்பினர்களும் தெரிவாகினர். அவர்களில் 7 பேர் ஐ.தே.க. உறுப்பினர்கள். 8 பேர் பொ.ஐ.மு. உறுப்பினர்கள். ஒருவர் நுஆ உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

தேசியப் பட்டியல் உறுப்பினர் எழுவரில் நால்வர் பொ.ஐ. முன்னணியைச் சேர்ந்தவர்கள். இருவர் ஐ.தே.க.யும் ஒருவர் மக்கள் விடுதலை முன்னணியை பிரதிநிதித்துவம் செய்தவர்.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றில் முஸ்லிம் பெண்கள் பாராளுமன்றத்திற்குத் தெரிவான முதற் தேர்தல் இதுவாகும். பாராளுமன்றத் தேர்தலில் முதலில் இறங்கியவர் திருமதி ஆயிஷா றவூப் ஆவார். இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்திற்குத் தெரிவாகிய டி.பி. ஜாயா தனது பதவியை ராஜினாமா செய்தபோது ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடந்த இடைத் தேர்தலில் 1950 மே மாதம் அவர் போட்டியிட்டு தோல்வியடைந்தார்.

2000-10-10 சரியாக அரைநூற்றாண்டின் பின்னர் இரு முஸ்லிம் பெண்கள் பாராளுமன்றம் சென்றனர். பேரியல் அஷ்ரப், அன்ஜான் உம்மா ஆகியோரே அவர்கள். இப்பாராளுமன்றத்தில் றவூப் ஹக்கீம் உள்நாட்டு, வெளிநாட்டு, வர்த்தக வாணிப அமைச்சராகவும், முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சராகவும், கப்பல் துறை அபிவிருத்தி அமைச்சராகவும் பணியாற்றினார். ஏ.எச்.எம். பௌஸி போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சராகவும், பேரியல் அஷ்ரப் கிழக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு, கிராமிய வீடமைப்பு, மகளிர் விவகார அமைச்சராக விளங்கினார். அலவி மௌலானா தொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

அதாவுல்லாஹ் கல்விப் பிரதியமைச்சராகவும், முஹியத்தின் அப்துல் காதர் கடற்றொழில் நீர்வள பிரதியமைச்சராகவும், என் அப்துல் மஜீத் அஞ்சல் தொலைத்தொடர்பு பிரதியமைச்சராகவும், நூர்தின் மஷூர் இனவிவகார, தேசிய ஒருமைப்பாட்டு, கனிய வள அமைச்சராகவும் விளங்கினார்.

இப்பாராளுமன்றத்தில் அடிக்கடி அமைச்சரவை மாற்றம் நிகழ்ந்ததோடு, பின்னர் பாராளுமன்றம் இடைநடுவே கலைக்கப்பட்டது. சந்திரிகா அரசாங்கத்திற்கும் சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் ஏற்பட்ட கடும் கருத்து வேறுபாடுகளால் முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டதோடு, பாராளுமன்றமும் கலைக்கப்பட்டது.

**இப்பாராளுமன்றத்தில் கலைக்கப்படும் வரை இருந்த முஸ்லிம் உறுப்பினர்கள்.**

| உறுப்பினர் | மாவட்டம் | கட்சி |
|---|---|---|
| ஏ.எல்.எம். அதாவுல்லாஹ் | திகாமடுல்ல | பொ.ஐ.மு. |
| யூ.எல்.எம். முஹியத்தீன் | ,, | பொ.ஐ.மு. |
| ஏ.எச்.ஏ. ஹலீம் | கண்டி | ஐ.தே.க. |
| றவூப் ஹக்கீம் | கண்டி | தே.ஐ.மு. |
| ஏ.ஆர்.எம். அப்துல் காதர் | கண்டி | ஐ.தே.க. |
| நூர்தீன் மஷூர் | வன்னி | பொ.ஐ.மு. |
| எம்.பி.எம். அப்துல் காதர் | மட்டக்களப்பு | பொ.ஐ.மு. |
| அலி ஸாஹிர் மௌலானா | மட்டக்களப்பு | ஐ.தே.க. |
| எம்.என். அப்துல் மஜீத் | திருகோணமலை | பொ.ஐ.மு. |
| பேரியல் அஷ்ரப் | திகாமடுல்ல | பொ.ஐ.மு. |
| எம்.எஸ். தௌபீக் | திருகோணமலை | பொ.ஐ.மு. |
| எம்.ஏ.எம். மஹ்ரூப் | ,, | ஐ.தே.க. |
| ஏ.எச்.எம். பௌசி | கொழும்பு | பொ.ஐ.மு. |
| எம்.எச். முஹம்மத் | ,,, | ஐ.தே.க. |
| இம்தியாஸ் பாகிர்மாக்கார் | களுத்துறை | ஐ.தே.க |
| முஹம்மத் மஹ்ரூப் | கொழும்பு | ஐ.தே.க. |

# மீள்பார்வை 20 ஆவது ஆண்டு நிறைவில்...

### சில நினைவுகள்




அது 1999 இன் ஓர் இள வேனிற் காலம். 1998 இல் நளீமிய்யாவிலிருந்து வெளியாகி ஓரிரு வாரம். இஸ்லாமிய தஃவாவில் முழு மூச்சாக உழைக்க வேண்டும் என்ற ஓர் உந்துதல்.

நளீமிய்யா விடுமுறை காலங்களில் மாத்தறை, கம்பளை, காத்தான்குடி, கொழும்பு என பல இடங்களிலும் அரபு இஸ்லாமிய வகுப்புக்களை நடத்துவதற்குச் சென்றுள்ளேன். வெளியானவுடன் கம்பளை தாருல் அர்கத்தில் 1998 இல் வெளியானோருக்கு முழுநேர ஊழியராகப் பணியாற்றுதல் தொடர்பான கலந்துரையாடல் உஸ்தாத் எம்.ஏ.எம். மன்ஸூர் தலைமையில் நடந்தது.

நான் முதன் முதலாக கம்பளைக்கும், பின்னர் கிண்ணியா மாத்தறை திக்வல்லை, காத்தான்குடி, வாழைச்சேனை, அக்குறணை என பல இடங்களுக்கும் அனுப்பப்பட்டேன். இக்குறிப்பிட்ட இடங்களிலிருந்தும் அதனைச் சூழவுள்ள வேறுசில ஊர்களுக்கும் பாடத்திட்டத்தின் அடிப்படையிலான வகுப்புக்களை நடாத்தல் அறபு மொழி கற்பித்தல், பல்வேறு கட்டத் தர்பியா நிகழ்ச்சிகளை நடாத்துதல் என பொறுப்புகள் தரப்பட்டன.

இறுதியாக என்னை கொழும்பிற்கு முழுநேர ஊழியராக நியமித்தனர். அங்கியிருந்து ராகம மருத்துவ பீடம், கழுத்துறை, தெஹிவளை, கல்கிசை, அக்பர் நகர், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்,"கொழும்புப் பல்கலைக்கழகம் என்பவற்றில் பல்வேறு வகுப்புக்களை நடாத்தும் பொறுப்பும் எனக்கு வழங்கப்பட்டது.

தலைநகரில் முழுநேர ஊழியராக பணியாற்றுவதில் எனக்கு அடிப்படையில் ஆர்வம் குறைவே. என்னை அவ்வாறு நியமிக்க வேண்டாம் என்று பல முறை நான் கோரியுள்ளேன். இருந்தும் மீள்பார்வை பத்திரிகைக்கும் பங்களிக்கும் வகையில் இந்த நியமனம் நடந்தது. ஏற்கனவே, கொட்டாஞ்சேனையிலுள்ள ஸெய்ன் மாவத்தையில் இருந்த தாருல் அர்கத்திற்கு நளீமிய்யாவில் கற்றுக்கொண்டிருந்த காலத்தில் அடிக்கடி வந்து போவதுண்டு.

தளிர் இதழுக்குக் கட்டுரைகளை மொழிபெயர்ப்பதற்கும் அப்போது வெளியிடப்பட்ட தனித்தனி சஞ்சிகைகளுக்கு ஆக்கங்களை மொழிபெயர்ப்பதற்கும் நான் அவ்வாறு வந்து சென்றுள்ளேன். அஷ்ஷெய்க் தாரிக் அலியும் நானும் இவ்வாறான மொழிபெயர்ப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தோம்.

மீள்பார்வை வெளியிடப்பட்ட ஆரம்ப காலங்களில் முஜ்தமா அரபு சஞ்சிகையிலிருந்து பல கட்டுரைகளை மொழிபெயர்த்து அனுப்பியுள்ளேன். துருக்கிய அரசியல்துறை ஆய்வாளர் அவ்ரகான் முஹம்மது அலி என்பவரால் எழுதப்படும் கட்டுரைகள் மொழி ரீதியிலும் விடய அடிப்படையிலும் விளங்குவதற்கு சற்று கடினமானவை. மொழிபெயர்ப்பதற்கும் அப்படித்தான்.

இக்கட்டுரைகளை மொழிபெயர்த்துத் தருமாறும் உஸ்தாத் என்னிடம் கேட்பார். நான் பல முறை இவ்வாறான கட்டுரைகளை மொழிபெயர்த்துள்ளேன். இக்காலத்தில் வெளியிடப்பட்ட மாற்றுப் பத்திரிகையான சரிநிகரிலும் இலங்கையின் தேசிய அரசியல், முஸ்லிம்களின் சமூகவியல், பாதுகாப்பு, இலக்கியம் தொடர்பாக தொடர்ச்சியான எனது கட்டுரைகள் வெளிவந்து கொண்டிருந்தன.

இந்தப் பின்புலத்தில் என்னிடம் காணப்பட்ட எழுத்தார்வத்தை அவதானித்தவர்கள் மீள்பார்வை பத்திரிகைக்கு எழுதுமாறு தூண்டினர். இதழ் 24 வெளிவரயிருந்த தருணத்தில், நான் கொழும்பு கிரேண்ட்பாஸ் - ஸ்டேஸ் வீதியில் இருந்த தாருல் அர்கத்தில் முழுநேர ஊழியராக நியமிக்கப்பட்டேன். இதன் மூலம் எனக்கு இரண்டு பணிகள் வழங்கப்பட்டன.

1. ஸ்டேஸ் வீதி தாருல் அர்கத்தின் கீழ் உள்ள குறிப்பிட்டளவு வகுப்புக்களை நடாத்துதல்.
2. மீள்பார்வையின் சில பக்கங்களுக்குப் பொறுப்பாக இருத்தல்.

இது ஒரு கடினமான பணி என்பதை உணர்வதற்கு எனக்கு அதிக காலம் எடுக்கவில்லை. ஏனெனில், கொழும்பிலும் புறநகர்ப் பகுதிகளிலும் இருந்த வகுப்புக்களின் எண்ணிக்கையை கணக்கிட்டபோது தலைசுற்றி வந்தது. சில இடங்களுக்கு தூரப் பயணம் செய்ய வேண்டும். நாம் விரும்பியோ விரும்பாமலோ பேரூந்தின் மிதிபலகையில் நின்றுதான் பயணிக்க வேண்டும். அக்பர் நகர வகுப்பு இதற்கோர் கச்சிதமான உதாரணம். இதற்குப் பொறுப்பாக இருந்தவர் சகோ. பைஸல் என்பது நினைவுக்கு வருகிறது.

கொழும்பு, ராகம, ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களில் மாத்திரம் வாராந்தம் 6 வகுப்புக்கள் இருந்தன. அளுத்கடையில் ஓர் முதியோர் வகுப்பும். ஸ்டேஸ் வீதியில் 02 பெண்கள் வகுப்பும் 02 ஆண்கள் வகுப்பும் என இருந்தன. களுத்துறையில் 01 வகுப்பும் கல்கிஸ்ஸையில் 01 வகுப்பும் இருந்தது.

அக்பர் நகர வகுப்பு வெள்ளிக் கிழமை மாலைவேளை என்பதனால் சன நெருக்கடி மிகுந்த பேரூந்தில் மிதிபலகையில் நின்று போவதே தலைவிதியாயிற்று. திரும்பும் போதும், நீர்கொழும்பு வீதிக்கு இரவு 10.30 மணிக்கு வருவதும் அங்கியிருந்து பேரூந்து எடுப்பதற்கு பனியில் காத்திருப்பதும் என காலம் கழிந்தது.

இந்த சூழ்நிலையிலேயே 16 பக்கங்களைக் கொண்டிருந்த மீள்பார்வையில் 03 பக்கங்களுக்கு நான் முழுப் பொறுப்பேற்றேன். ஏனைய பக்கங்களின் ஆக்கங்களை திருத்துவதும், சரவை பார்ப்பதும் எனக்குரிய பொறுப்பு. தேடல், சர்வதேச செய்திகள் எனக்கு வழங்கப்பட்டன.

அப்போது மன்னாரைச் சேர்ந்த முஜிப் தட்டச்சு செய்பவராக இருந்தார். யூ.எல். நியாஸ் மீள்பார்வை பொறுப்பாளராக விளங்கினார். உஸ்தாத் மன்ஸூர் பிரதம ஆசிரியராக இருந்தார். 'ஒரு கருத்து' எழுதுவதும் ஆசிரியர் தலைப்பை வரைவதுமே அவரது பொறுப்பாக இருந்தது. யூ.எல். நியாஸ் சில பக்கங்களுக்கு எழுதியதோடு, பக்க வடிவமைப்பையும் மேற்கொண்டார்.

பின்னர் மொழிபெயர்ப்பு பரீட்சையொன்றில் தேறிய அவர், அதன் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ள வேண்டியிருந்ததனாலும் தொடர்ந்து அத்துறையில் தொழில் பெற்றதாலும் மாலைவேளையிலேயே ஸ்டேஸ் வீதி அலுவலகத்திற்கு வருகை தரும் நிலை உருவானது. இக்காலத்தில் சிராஜ் தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில் கற்றுக்கொண்டிருந்தார். அவர் இடைக்கிடையே மீள்பார்வைக்கு அரசியல் பத்திகளை அனுப்பிக்கொண்டிருந்தார். மீள்பார்வை ஸ்டேஸ் வீதியில் இயங்கிய போது அதற்கு நான் தன்னார்வ ஊழியனாகவே நியமிக்கப்பட்டேன்.

வகுப்புக்களை சீராக நடாத்துவதே எனது அடிப்படைப் பொறுப்பு. பகுதி நேரமாகவே மீள்பார்வை பத்திரிகையை கவனிக்கும் பொறுப்பு எனக்கு விடப்பட்டது. காலவோட்டத்தில் இந்தப் பொறுப்பு கொஞ்ச கொஞ்சமாக அதிகரித்தது. (தொடரும்)

அபூ ஆகிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறியதொரு கூட்டத்தின்... (7ம் பக்கத் தொடர்)

இலங்கைக்கும் இஸ்ரேலுக்குமிடையில் விமான சேவையொன்று ஆரம்பிக்கப்படுமாக இருந்தால், அது மிகவும் துரதிஷ்டமான செயல். உலகில் இன்று ஐரோப்பிய நாடுகளில் கூட அங்குள்ள பல்கலைக்கழகங்களிலுள்ள பேராசிரியர்கள் இஸ்ரேலிய பல்கலைக்கழகங்களிலுடனான தொடர்புகளை துண்டித்து வருகிறார்கள். அங்கிருந்து பொருட்கள் கொள்வனவு செய்யப்படுவதனையும் நிறுத்தி வருகிறார்கள்.

இன்று புத்திஜீவிகள் விழிப்போடு உள்ளனர். இது யூதர்களுக்கெதிரான செயற்பாடல்ல, சியோனிச வேலைத்திட்டங்களுக்கெதிரான செயற்பாடுகளாகும். காஸா பள்ளத்தாக்கு இன்று வெட்டவெளிச் சிறைச்சாலையாக மாறியுள்ளது. அங்கு மனிதர்கள் ஈவிரக்கமின்றி கொல்லப்படுகிறார்கள்.

ஐ.நா. சபையில் 60 வீதம் இது பிழையென தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால், வீட்டோ அதிகாரம் பயன்படுத்தப்பட்டு அத்தீர்மானங்கள் நிராகரிக்கப்படுகின்றன. உலகில் மனித உரிமைகள் பற்றிப் பேசுகின்ற வல்லரசு நாடுகள் செயலில் அதை காண்பிப்பதில்லை. உலக மக்கள் கருத்துக்கு தலை சாய்க்காமல் புரியும் செயல்களுக்கு மத்தியில் நாம் இஸ்ரேலுடன் ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டு அவர்களுடன் வேறுபல சேவைகளை முன்னெடுக்கும் போது அது ஜனநாயக விரோதச் செயலாகிறது.

இவ்வேளையில் நாம் அவர்களின் வரவேற்பைத் தடுத்து ஐ.நா. வின் தீர்மானங்களுக்கு தலைசாய்க்குமாறு அறிவுரை கூற வேண்டும். இன்று ஒஸ்லோ உடன்படிக்கை, மிசல் உடன்பாடு இவையெல்லாவற்றையும் இஸ்ரேல் மீறியுள்ளது. இத்தகையதொரு நிலையில் அவர்களை வரவேற்பதென்பது ஜனநாயக பூர்வமான விடயமொன்றல்ல. அது இந்நாட்டு மக்களின் அபிமானத்திற்கு இழைக்கப்படுகின்ற அவமானம்.

**• நாட்டில் நல்லிணக்கத்தை எவ்வாறு ஏற்படுத்தலாம்?**

எமது நாட்டிலுள்ள சகல அமைச்சுக்களும் இப்பொறுப்பை ஏற்க வேண்டும். கல்வி அமைச்சுக்கு எமது குழந்தைகளின் சிந்தனை உருவாக்கத்தை சீர்செய்ய முடியும். ஊடகங்கள் வாயிலாக நல்லிணக்கத்தை ஏற்படுத்தலாம். திரைப்படதுறைக்கூடாகவும் பாடல்களுக்கூடாகவும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடிகின்றது.

'லொவே செமா எக மினிஸ் பவுளக் லே' என்று ஒரு சிங்களப்பாடல் உள்ளது. அதன் பொருள் உலகில் எல்லோரும் ஒரு குடும்பத்தை போன்றவர்கள் என்பதாகும். ஒரு எல்லைக்குள் நாம் சுருங்கி விடக்கூடாது. பரந்துபட்டதாக சிந்திக்க வேண்டும்.

எல்லா மனிதர்களையும் ஒரே குடும்பமாகக் கருதியே சகல மதங்களும் உலகில் உதித்தன. மதங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவோர் இன்று ஒரு சில அமைப்புக்களை உருவாக்கிக் கொண்டு மக்கள் மத்தியில் சச்சரவுகளை ஏற்படுத்தி வருகின்றனர். மனிதர்கள் எல்லோரையும் ஒரே குடும்பமாகக் கருதி பணியாற்ற வேண்டும். இவ்வெல்லா மதங்களினதும் ஆசிர்வாதம் இலங்கை மண்ணுக்குக் கிடைத்துள்ளது.

அதிலுள்ள நல்ல பக்கத்தை நாம் சிந்திக்க வேண்டும். அவற்றின் உள்ளடக்கத்தை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அதுவல்லாமல் தங்களுடைய நலன்களுக்காக வேண்டி மேலோட்டமாக எதையும் பார்க்கக் கூடாது. அதுவே அழிவின் ஆணிவேர்.

**• இலங்கை முஸ்லிம் சமுகத்திற்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

நாம் சிங்களம், முஸ்லிம், தமிழ், கிறிஸ்தவம் என்றில்லாமல் ஜனநாயகம் எங்குள்ளது மனித உரிமைகள் எங்குள்ளது சம உரிமைகள் எங்கு காணப்படுகின்றன என்பன பற்றியே சிந்திக்க வேண்டும். நாம் எமக்கு பிரச்சினையொன்று ஏற்படும் வேளையில் மாத்திரம் போராடக்கூடாது ஜனநாயக உரிமையொன்று மறுக்கப்படுகின்ற பொழுது மக்களுடைய உரிமைகள் இல்லாமல் போகின்றபொழுது ஏதாவது ஒரு அநீதி இடம்பெறுமாக இருந்தால், அங்கு நாம் எமது பொறுப்பை சரிவர நிறைவேற்ற வேண்டும். பிரச்சினையொன்று ஏற்படும் பொழுது மாத்திரம் முன்வருவதில் பிரயோசனமில்லை. அல்குர்ஆனிலும் நீதியை நிலைநாட்டுவது தொடர்பில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளன.

இந்நாட்டின் பிரஜைகள் என்ற அடிப்படையில் நாம் பொறுப்புடன் செயற்படும்போது, ஜனநாயகம், மனித உரிமைகள், நீதி நியாயத்திற்காக வேண்டி பொறுப்புடன் செயலாற்ற முன்வர வேண்டும். அங்கு நாம் தமிழ், சிங்களம், முஸ்லிம் என்று வரையறைக்குட்பட தேவையில்லை.

## ஆட்சியாளர்கள்... (03ம் பக்கத் தொடர்)



அதிகாரத்துடன் இணைத்துக் கொள்ளப்பட வேண்டுமா? அதிகாரப் பகிர்வு, பாராளுமன்றம் இரட்டைச் சபையாக மாற்றப்பட வேண்டுமா? மனித உரிமைகள் உள்ளிட்ட பல விடயங்கள் கலந்துரையாடப்பட வேண்டியுள்ளது.

**• நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்கின்ற உடன்பாட்டு அடிப்படையுடனே புதியதொரு அரசியலமைப்பு குறித்த முன்மொழிவுகள் தொடர்ந்தேர்ச்சையாக முன்வைக்கப்பட்டு வந்தன. நிறைவேற்று அதிகார முறைமை நீக்கப்பட வேண்டும் என அமைச்சரவைப் பத்திரமொன்றும் முன்வைக்கப்பட்டுள்ளது. உங்களுடைய குழு நிறைவேற்று அதிகார முறையை இல்லாதொழிக்க வேண்டுமென முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானங்களை புதிதாக ஆராய்ந்து பார்க்குமா?**

மக்களிடம் எத்தகைய அம்சங்கள் தொடர்பிலான கருத்துக்கள் வினவப்பட வேண்டும் என நாம் ஒன்றுகூடி தீர்மானிக்க வேண்டியுள் ளது. நாம் புதியதொரு அரசியல மைப்பையே உருவாக்க முயல் கின்றோம் அதற்கு கருத்து வினவப்படும் பொழுது பெயரளவிலான நிறைவேற்று அதிகாரமா? உண்மையான நிறைவேற்று அதிகாரமா? ஏற்படுத்தப்பட வேண்டும் என முதற் கட்டமாக ஆராயப்பட வேண்டியுள்ளது.

எனவே நிறைவேற்று அதிகாரம் தொடர்பில் கட்டாயமாக கருத்து வினவப் பட வேண்டியுள்ளது. அதற்கு முன்னர் குழுவிலுள்ள 24 பேரும் ஒன்றிணைந்து கேள்விக் கொத்தொன்றை தாயாரிக்க வேண்டியுள்ளது.

**• தேசிய இனப்பிரச்சினைக்கு எப்பொழுதும் பல்வேறுபட்ட தீர்வுகள் முன்வைக்கப்பட்டு வந்தன. யுத்தமும் கூட அதற்குரிய தீர்வுகளில் ஒன்றாக முன்வைக்கப் பட்டிருந்தது. உருவாக்கப் படவுள்ள புதிய அரசியலமைப்பிலாவது அதற்கு நிரந்தரத் தீர்வொன்று கிடைக்கா விட்டால் அரசியலமைப்பில் எவ்வித பிரயோசனமும் இல்லைதானே?**

அது உண்மை. இவ்வரசியலமைப்பின் மூலம் தேசிய பிரச்சினைக்கு கட்டாயமாக தீர்வொன்று வழங்கப்பட வேண்டும். அதற்குரிய கேள்விகளை தயாரித்து மக்களிடம் கருத்து வினவ வேண்டும். இரட்டைச் சபை பாராளுமன்றம், அதிகார பகிர்வு உள்ளிட்ட சோல்பரி யாப்பில் காணப்பட்ட சிறுபான்மையின் உரிமைகளாக வழங்கப்பட்டிருந்த 29 ஆவது அத்தியாயத்தினை கூட மீளக்கொண்டு வருவது தொடர்பில் நாம் மக்களிடம் கருத்து கேட்கவுள்ளோம்.

நாம் பல வருடங்கள் பூராக இனங்களாக பிரிந்து சண்டையிட்டுக் கொண்டதனால் சிங்கப்பூர், மலேசியா, வியட்னாம், பங்களாதேஷ் நாடுகளை விடவும் உயர் மட்டத்தில் காணப்பட்ட எமது நாடு, இன்று அடிமட்டத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. சகல இனப் பிரிவினரும் இப்பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வொன்றை காண வேண்டும். அது கடினமென நான் நினைக்கவில்லை.

தற்பொழுது சிறந்ததொரு சூழல் உருவாகியுள்ளது. கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது, இலங்கையின் எல்லா இன மக்களும் ஒரு குறிக்கோளுக்காக வேண்டி வாக்களித்ததனை நாம் அவதானித்தோம். ஜனநாயகத்திற்காக அவர்கள் ஒன்றுபட்டார்கள். அவ்வெற்றியில் முழு நாடும் சந்தோஷப்பட்டது. அரசியலமைப்பாக இருந்தாலும் அது எல்லோருக்கும் உரிய வெற்றியொன்றாக அமைய வேண்டும்.

**• பொதுமக்கள் ஒரு சில விடயங்களில் வகிக்கும் நிலைப்பாடுகள் குறித்து திருப்தி கொள்ள முடிகின்றதா? குறிப்பாக இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றை வழங்கி இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்தும் பொழுது பெரும்பான்மைச் சிங்கள மக்கள் அது தொடர்பில் வகிக்கும் நிலைப்பாடுகள் தடங்கலாக அமையலாம். அவ்வேளையில் மக்களுடைய கருத்துக்களை மாத்திரம் வினவுவது போதுமானதா?**

கருத்து வினவுவது மாத்திரம் போதாது. கலந்துரையாடல் ஒன்றையும் கொண்டு செல்ல வேண்டும். கருத்தொன்றை அவர்கள் வெளியிடும் போது ஏன் அந்த கருத்தில் உள்ளீர்கள் என நாம் வினவ வேண்டியுள்ளது. அதிகாரப் பகிர்வினால் நாடு பிளவுபடலாம் என்கின்ற கருத்தொன்று முன்வைக்கப்பட்டால் நாம் அவ்விடயம் தொடர்பில் உரையாடி நிலைமைகளை அவர்களுக்கு தெளிவுபடுத்த முடியும். மக்கள் அச்சப்படும் இடங்களில் அவற்றைப் போக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க முடியும். எதற்காக மக்கள் அச்சப்படுகின்றார்களோ அதற்குரிய காரணங்களைக் கண்டறிந்து பாதுகாப்பு வழங்க முடியும். இது கருத்து வினவல் ஒன்று மாத்திரமல்ல கலந்துரையாடலும்கூட.

**• உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கால எல்லை போதுமானதா?**

காலக்கெடு ஒரு பிரச்சினைதான். ஆனால், ஜூன், ஜூலை மாதங்களாகும் போது அரசியலமைப்பை நிறைவேற்றி முடிக்க வேண்டும் என்ற கருத்துள்ளது. எனவே, அதற்குரிய செயற்பாடுகள் இடம்பெறும்போதுதான் கால எல்லைக்குள் அவற்றை செய்ய முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும்.

மூன்று மாதங்களை இலக்குவைத்து நாம் பணியாற்றுகின்றோம். கால எல்லை தொடர்பில் குறைகூறிக் கொண்டிருக்காமல் ஒப்படைக்கப்பட்ட பணியை செய்வது அவசியம். நாம் எமது ஏனைய பணிகளிலிருந்து ஒதுங்கி முழுமையாக மூன்று மாதங்கள் கஷ்டப்பட்டு இவ்விடயத்தை செய்து முடிக்க வேண்டும்.

## ஈரான்-சவூதி... (08ம் பக்கத் தொடர்)



படைப் பலத்தைப் பயன்படுத்தியது முதல், இன்று சிரியாவில் ஷீஆ ஆட்சியைத் தக்கவைப்பதற்கு ஈரான் தனது படைப் பலத்தை பயன்படுத்தி வருவது வரை இரு நாடுகளுக்கும் இடையில் கடந்த மூன்று தசாப்தங்களாக பெரும் பனிப்போர் நீடித்து வருகின்றது.

ஏற்கனவே சிரியா, யெமன், ஈரான், லிபியா ஆகிய நாடுகளில் நடைபெற்று வரும் ஆயுத மோதல்களால் இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் கொல்லப்பட்டும் குடி பெயர்ந்தும் பாதிக்கப்பட்டு வரும் சூழலில், தற்போது எழுந்துள்ள ஈரான்-சவூதி அறேபியா மோதல் ஒட்டுமொத்தப் பிராந்தியத்தையும் படுமோசமான சூழ்நிலைக்குத் தள்ளும் என அவதானிகள் எச்சரிக்கின்றனர்.

## இலங்கைச் சூழலில்... (12 ம் பக்கத் தொடர்)



''நீர் ஸலாம் சொன்னால் உனக்கு முன்னர் ஸலபுஸ் ஸாலிஹீன்களும் ஸலாம் கூறித்தான் இருக்கின்றார்கள். நீர் ஸலாம் சொல்வதை தவிர்ந்து கொண்டால் உம் முன்னோரான ஸாலிஹீன்களும் தவிர்ந்துள்ளார்கள்'' என்றே பதில் கூறினார்கள். எனவே இது நெகிழ்ந்து கொடுக்கும் விவகாரம். இதில் கருத்து முரண்பாடு உண்டு. தான் பிடித்தது தான் சரியானது எனப் பிடிவாதமாக இருக்கத் தேவையில்லை என்பதே இமாம் அவ்தாஈ சூட்சுமமாக குறிப்பிடும் கருத்தாகும்.

முஸ்லிம்கள், யூதர்கள், இணை வைப்பாளர்கள், சிலை வணங்கிகள் எனப் பலரும் உள்ள ஒரு மஜ்லிஸை இறைதூதர் (ஸல்) அவர்கள் கடந்து சென்ற போது அவர்களுக்கு ஸலாம் கூறியதாக ஸைத் (ரழி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் புகாரி, முஸ்லிம், திர்மிதி போன்ற ஸஹீஹான கிரந்தங்களில் பதிவாகியுள்ளது.

அபூ உமாமா (ரழி) அவர்கள் முஸ்லிம், கிறிஸ்தவர்கள், யூதர்கள், பெரியோர், சிறியோர் என்ற எந்த வேறுபாடுமின்றி அனைவருக்கும் ஸலாம் சொல்லுவார்கள். அதற்கான நியாயத்தை அவர் விளக்கும் போது அது நபி வழி என்ற சிந்தனையைத்தான் முன்வைத்தார்கள். (தபராணி).

ஸஹாபாக்களின் இந்நடைமுறையானது ஆழ்ந்து நோக்கப்பட வேண்டிய விடயமாகும். ஸலாம் கூறுவதை இறைதூதர் (ஸல்) ஏன் தடுத்தார்? அதற்கான பின்னணி யாது? என்பதை மிகச்சரியாக புரிந்ததனால் தான் அவர்கள் சகல மனிதர்களுக்கும் ஸலாம் கூறியுள்ளார்கள்.

ஸஹாபாக்கள் ஸலாத்தை பரப்புவது பற்றி வந்த ஹதீஸின் இலக்கை நோக்கியுள்ளார்கள். யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் ஸலாத்தை கொண்டு நீங்கள் ஆரம்பிக்க வேண்டாம் என்பதை குறிப்பிட்ட பேராட்ட சூழலில் மாத்திரம் தடுக்கப்பட்டது என்பதை அவர்கள் புரிந்து கொண்டார்கள். ஸஹாபாக்களின் அந்த அணுகுமுறையை அடியொட்டியே பல புகஹாக்கள் இன, மத வேறுபாடின்றி பொதுவாக ஸலாத்தை பரப்புவது ஒரு சுன்னா என நோக்கியுள்ளார்கள்.

இலங்கை சூழலில் ஸலாத்தை பரப்புவது மிகவும் கூடிய கரிசனை செலுத்தக் கூடிய தஃவா பெறுமானமாக பார்க்க முடியும் என்பதே சுன்னாவின் வழிகாட்டலாக தென்படுகிறது. அந்த உண்மையைத்தான் சட்டக்கலை வல்லுனர்களின் வித்தியாசமான சிந்தனைகள் எமக்கு கற்றுத்தருகின்றன.

பல்லின சமூகத்தில் வாழும் நாம் எமது உறவுகளையும் தொடர்புகளையும் பலமாக கட்டியெழுப்புவதற்கு பரஸ்பர அறிமுகமும் நலன்களை முதன்மைப் படுத்தி செயற்படுவதும் இன்றியமையாதது. இன, மத வேறுபாடு பார்க்காமல் அடுத்தவர்களுக்கு ஸலாம் சொல்லுவது அதில் முதலிடம் பெறுகிறது. ஷரீஆவில் அதற்கு எந்த தடையும் இல்லை என்பதுவே வரலாறு புகட்டும் பாடமாக உள்ளது.

மிஞ்சிப் போனால் இது ஒரு கருத்துவேறுபாடுள்ள விடயம். கருத்து வேறுபாடுள்ள ஒரு விடயம் வெறுக்கத்தக்க ஒரு பாவமும் அல்ல. தடுக்கப்பட வேண்டிய தீமையும் அல்ல. எனவே இது குறித்து விரிந்த உள்ளத்துடன் நோக்கப் பழகுவதே நடுநிலைச் சிந்தனையை சுமந்துள்ள முஸ்லிம்களின் உயர்ந்த பண்பாடாகும்.

## சிங்கள பௌத்த... (04 ம் பக்கத் தொடர்)

துட்டகைமுனு உயரிய மறு உலகத்தில் பிறந்தார் என்பது மாத்திரமல்லாமல், மஹாவம்சத்தின்படி அவர் அன்புமிகு புத்தரின் நெருங்கிய மாணவர்களுள் ஒருவராவார். அவருடைய தந்தையான காக்க வன்னியதிஸ்ஸ அரசன் அன்புக்குரிய புத்தரின் தந்தையாவார். அவருடைய தாயாரான விஹாரதேவி அன்புக்குரிய புத்தரின் தாயாவாள். அவருடைய கனிஷ்ட சகோதரனான சத்தாதிஸ்ஸ மன்னன் அன்புக்குரிய புத்தரின் இரண்டாவது நெருங்கிய மாணவராவார். அவருடைய புதல்வரான சாலிய இளவரசர் அன்புக்குரிய புத்தரின் புதல்வராவார்.

புனித யுத்தத்தின் நற்கூலிகள் பரிசுத்தப் போர்க் கள வீரனுக்கு மாத்திரமல்லாமல் அவனுடைய முழுக் குடும்பத்திற்கும் கிடைப்பதாகக் கூறும் மஹாவம்சம், பௌத்த மதத்திற்காக வேண்டி முன்னெடுக்கப்படுகின்ற அத்தகைய புனித யுத்தமொன்றின் பிரதிபலன்கள் தொடர்பிலும் தர்க்கிக்கின்றது.

துட்டகைமுனு - எல்லாளன் யுத்தம் இடம்பெற்று ஏழு நூற்றாண்டுகளுக்கு பின்னரே அரசியல் வேலைத்திட்டமொன்றுடன் கூடிய பௌத்த துறவியொருவரினால் (மஹாநாம தேரரினால்) மஹாவம்சம் எழுதப்பட்டது. துறவறம் பூணுவதற்கு எல்லா ஆசாபாசங்களையும் விட்டொதுங்குவது அத்தியாவசியம் என்பது புத்தரின் மதம் தொடர்பில் குறைந்தபட்ச அறிவுள்ள ஒருவருக்குக் கூட தெரிந்த விடயமாகும். ஆசாபாசங்களில் ஒட்டிக்கொள்ளும் ஆணோ அல்லது பெண்ணோ அவை எந்தளவு தூரம் நேர்மையானதாக, மனச் சாட்சிப்படி இருந்தாலும் அக்கட்டுப்பாடுகளே முழு வாழ்வையும் கட்டிப் போடுகிறது.

துறவறம் பூணுகின்ற ஒருவர் நாடு, இனம் அல்லது மதம் உள்ளிட்ட எந்தவொரு விடயங்களிலும் ஒட்டிக் கொள்வதில்லை. எந்தவொரு கொலையையும் அனுமதிப்பதற்கு அவர்களுக்கு முடியாது. அவ்வாறு துறவு நிலைக்குட்பட்ட பிக்கு ஒருவரினால் மதத்தின் பெயரால் மனிதக் கொலைகளை நியாயப்படுத்தியதாக மஹாவம்சத்தின் எழுத்தாளரான மஹாநாம தேரர் கூறுவது பாரியதொரு பொய்யாகும். ஆனால், பௌத்தத்தின் பஞ்சசீலங்களில் முதற் சீலத்தை மீறி, அந்த பாரிய பொய் இன்று உயர் அந்தஸ்தில் முடி சூடப்பட்டுள்ளது.

சமாதானத்தை விரும்பிய மனிதரொருவரான யேசுநாதரை போராட்டத்தின் இளவரசர் ஒருவராக மாற்றுவதற்கு கொன்ஸ்டைன் அரசனுக்கும் அவனைப் பின்தொடர்ந்து வருபவர்களுக்கும் முடிந்தது. அதற்காக வேண்டி அவர்கள் பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டிருந்த பின்னால் துரத்தி பழிவாங்கும் கடவுள் ஒன்று தொடர்பிலான கொள்கையை பயன்படுத்தினார்கள்.

மஹாநாம தேரருக்கு அத்தகைய கொள்கை உதவிகள் புத்தரின் சமயத்திலிருந்து கிடைக்கவில்லை. எனவே, அவர் தானாகவே அக்கொள்கையை நிர்மாணித்துக் கொண்டார். தேசிய ஹெல உறுமய மற்றும் பொது பலசேனா அமைப்புக்களின் தலைவர்களுடைய உண்மையான தீர்க்கதரிசி (அருட் போதகர்) மஹாநாம தேரரேயன்றி புத்தபெருமானல்ல.

### பொய்மையை விதியாக்கிக் கொள்ளல்

மஹாவம்ச கதைகள் வெறும் வம்சக் கதைகளில் வருகின்ற புகழ்பெற்ற புராணக் கதைகளாக மாத்திரம் சிங்களவர்களால் நோக்கப்படுவதில்லை. நவீன இலங்கையின் பயணத் திசையும் அவற்றிக் கூடாக தீர்மானிக்கப்பட்டு விட்டது. அநகாரிக தர்மபாலவின் தலைமைத்துவத்தின் கீழ் 19 ஆவது நூற்றாண்டில் முன்னெடுக்கப்பட்ட பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்திற்குள் நிலவிவந்த சிறுபான்மை எதிர்ப்புச் சுபாவம் மஹாவம்ச புனைக் கதைகளுக்கூடாகவே முதிர்ச்சி பெற்றது. இப்புனைக் கதைகளின் அடிமையாக மாறியதனால் நெறிபிறழ்ந்து போன சிங்கள பௌத்த மதம் தமிழர்களுக்கு போதனை புரியும் சக்தியை இழந்துகொண்டது.

இலங்கைக்குரிய கலாநிதி அம்பேத்கர் ஒருவரை உருவாக்கி கொள்வதில் தோற்றுப் போனது. தேரவாத பௌத்த மதத்திற்குள் ஒலிக்கும் குரலாக பெருமளவு பௌத்த தமிழர்கள் அன்று உருவாகியிருந்தால் எங்களுடைய சுதந்திரத்திற்கு பிந்திய வரலாறு இதைவிடவும் குறைந்தபட்ச அழிவுப் பாதையைக் கொண்டிருக்கும்.

எவ்வாறிருப்பினும் தமிழ் மக்கள் பௌத்த சமயத்தை தழுவ வேண்டுமென்றால் சிங்கள மேலாதிக்கச் சிந்தனை அடையாளங்களை ஒரு புறத்தில் வைத்துவிட்டு, மஹாவம்சத்திற்கு முன்னர் பௌத்த சமயத்திற்குள் காணப்பட்ட உயர்ப் பண்புகளை மீண்டும் கைப்பற்றிக் கொள்ள வேண்டியுள்ளது.

''நட்புத் தொடர்புகள் இல்லாவிட்டாலும் குறைந்தபட்சம் பொறுமையுடனாவது நல்லிணக்கத்தைப் பேணுவதற்கு எமக்கு முடியுமான விதத்தில் ஏதாவது ஒரு வேலைத்திட்டமொன்றை ஏற்படுத்திக் கொள்வதே எமது முன்னாலுள்ள சவாலாகும்'' என்பதாக பிரான்ஸ் தேசத்து நாவலாசிரியரான 'அந்ரோ மல்ரோ' விடம் ஒரு தடவை ஜவகர்லால் நேரு கூறியிருந்தார்.

எந்தவொரு பல்லின நாடும் எதிர்கொள்ளும் சவாலே இது. மஹாவம்ச புனை கதைகளுக்குள் புதையுண்டியிருக்கும் காலமெல்லாம் மேற்படி சவாலை வெற்றி கொள்வதற்கு இலங்கைக்கு முடியாமல் போகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயமி



## இறுவட்டு அறிமுகம்

லறீனா அப்துல் ஹக் மெட்டமைத்து, எழுதி, பாடியுள்ள பாடல்களின் தொகுப்பான''சுயமி'' இசைத்தட்டு அண்மையில் வெளியிடப்பட்டது.

9 மெல்லிசைப் பாடல்கள் அடங்கிய இந்த இறுவட்டு முஸ்லிம் இசையின் நீண்ட இடைவெளியை நிரப்ப முயல்கின்றது. பல்வேறு பாடுபொருள்களைக் கொண்டமைந்துள்ள இப்பாடல்கள் புதிய நம்பிக்கையைத் தருகின்றன. இவரது பாடல்களுக்கு கபிலபூகலாரச்சி, தர்ஷனராஜமன்த்ரி ஆகியோர் இசையமைத்துள்ளனர்.

முஸ்லிம் சமூகத்தில் அவ்வப் போது பாடல் முயற்சிகள்நடைபெறுகின்றன. லறீனா அப்துல் ஹக்கின் ''சுயமி'' இசைத்தட்டு ஒரு தனித்துவமான முயற்சியாக மிளிர்கிறது.

## நூல் அறிமுகம்

# பிக்சல் முழுமையான டிஜிட்டல் ஒளிப்பதிவு நூல்

ஆசிரியர் :சி.ஜெ.ராஜ்குமார்



இப்புத்தகம் முழுக்க முழுக்க டிஜிட்டல் சினிமா ஒளிப்பதிவு மற்றும் டிஜிட்டல் சினிமா வின் தயாரிப்பு பற்றி எளிய தமிழில் விரி வாக எழுதப்பட்டுள்ளது.

டிஸ்கவரி புக்பேலஸின் வெளியீடாக வந்திருக்கும் ''பிக்சல்''லில் 200 க்கும் மேற்பட்ட புகைப்படவிளக்கங்களுடன் சினிமாவின் ஆரம்பம் முதல் 1670 தொடங்கி 2012 வரை நடந்தசரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் எழுதப்பட்டுள்ளன. மேலும் தற்போது உபயோகத்தில் இருக்கும் பல்வேறு டிஜிட்டல் காமிராக்களையும் அது அறிமுகமான விவரங்களையும் அலசுகிறது.

இந்நூலில் இந்திய சினிமாவில் டிஜிட்டல் ஒளிப்பதிவின் பங்குபற்றியும், சில முக்கியமான டிஜிட்டல் திரைப்படங்களும் பட்டியலிடப்பட்டுள்ளது.

இந்த புத்தகத்தின் சிறப்பம்சம் கேனான் 5டி காமிராமுதல்ரெட், ஆரிஅலெக்ஸா, சோனிபோன்ற அனைத்துவிதமான காமிராக்கள், அதன் செயல்பாடுகள் பற்றி மட்டுமல்லாமல் அவற்றை எப்படி இயக்குவது என்பதுபடிப்படியாக விளக்கப்பட்டுள்ளது. மிகசமீபத்தியவரவான ரெட்டிராகன் சென்சார் மற்றும் இனிமேல் வரவிருக்கும் புதியதொழில்நுட்பமான ''சினிமாக்ளவுட் கம்ப்யூட்டிங்'' போன்றவற்றை இந்நூல் அறிமுகப்படுத்துகிறது.

# கிரீடங்களை அவமதித்தவள்



ஆக்கிரமிப்பாளர்களே
எனது பாடலை விட்டு விடுங்கள்
சின்னஞ்சிறு ஆன்மா ஏந்தியது
நெடுந்தூரம் போய்விடட்டும்

நீங்கள் இட்ட வரம்புகளுக்குள்
நின்று ததும்புகிறேன்
நீங்கள் வகுத்திருந்த வேலிகளின்
எல்லையில்
வாழ்வைக் கை விட்டுத்
திரும்பியுள்ளேன்

எக்காலத்திலுமினி
உங்கள் பீடங்களில் முழந்தாளிட
வரமாட்டேன்
நீங்கள் ஆராதிக்கும் நாமங்களிலும்
சேரமாட்டேன்

ஆதிமுதல் போற்றிவரும்
அந்தக்கிரீடங்களின் மீது
அவமதிப்பை விட்டெறிகிறேன்
உங்கள் அலங்காரப்பட்டினங்களின்
துர்வாடையையும்
பேரிரைச்சலையும்
சகித்திடமுடியாமல் அகன்று
போகிறேன்

பாய்மரத்தையும் திசைகாட்டியையும்
கரைமணலில் புதைத்து
அலைகளில் தள்ளி விட்டீர்கள்
யாருமே காப்பாற்ற வர முடியாத
துயரக்கடல்நடுவே
அமிழ்ந்து கொண்டிருக்கிறது
உயிரின் படகொன்று

- பஹீமாஜஹான்

# தீவில்தனித்த மரம்

- பஹீமாஜஹான்

தூரதேசப்பறவையொன்று
தங்கிச்சென்றமரம்
மீளவும்
அந்தப்பறவைக்காகக்
காத்துக்கிடக்கிறது

தன்கிளைகள்எறிந்துதேடும்
வான்பரப்பில்பறவை
அதன்பாடலைப்
பதித்துச்செல்லவில்லை.
வேர்களஊன்றுபரவும்மண்ணில்

அது
எந்தநிழலையும்
விட்டுச்செல்லவும்இல்லை

மலைகளிடமோநதிகளிடமோ
பறவைதனது
பயணப்பாதைபற்றிய
செய்திஎதனையும்
பகன்றிடவேஇல்லை

சூரியசந்திரரும்
தாரகைக்கூட்டங்களும்
குருவியின்சேதிகளை
உரைத்திடமொழியின்றிமறையும்

வேர்களும்கிளைகளும்
நீளமுடியாமலொருபெருங்கடல்
மௌனத்தில்உறைந்த
மரத்தைச்சூழ்ந்திருந்து
ஆர்ப்பரிக்கிறதுநிதமும்

www.faheemapoems.blogspot.com

## கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு





இன நல்லிணக்கப் பணிகளில் ஈடுபட்டுவரும் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி ஹெம்மாதகம உப பிராந்தியம் பிற மத வறிய மாணவர்களின் நலன்கருதி அவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்களை அண்மையில் வழங்கிவைத்தது. ஜமாஅத்தின் சமூக சேவைப் பகுதியினூடாக மேற்கொள்ளப்பட்ட இந்நிகழ்வானது கெஹெல்பன்னல சிங்களப் பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கெஹெல்பன்னல மற்றும் புஹுல்ஹேன பாடசாலைகளைச் சேர்நத 260 வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

பாடசாலை அதிபரின் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் ஹெம்மாதகம 'பௌத்த முஸ்லிம் மித்ரத்வ' சங்கத்தின் செயலாளர் தேசமான்ய சாமகீர்த்தி அல்ஹாஜ் ஏ.ஸீ.எம் அஸ்ஹர் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

## பழைய மாணவ ஒன்று கூடல்




இலங்கையில் முதன்மையான பாடசாலைகளில் ஒன்றான கெகுணகொல்ல தேசிய பாட சாலையின் வரலாற்றில் முதல் தடவையாக பழைய மாணவர் ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டு பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. நூற்றாண்டை நோக்கிய முன்னெடுப்புக்கள் மிக மும்முரமாக அரங்கேறி வரும் இத்தருணத்தில் அதன் ஒரு அங்கமாக பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் கடந்த 27 டிசம்பர் 2015 அன்று பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் ஒவ்வொரு வகுப்புகளுக்குமான பிரதிநிதிகளை உள்ளடக்கியதான பழைய மாணவர் சங்க மத்திய குழு தெரிவு செய்யப்பட்டனர். (ரிம்சி ஜலீல்)

## மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள்




MFCD நிறுவனத்தின் சிறுவர் பராமரிப்பு பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2016 கல்வி ஆண்டுக்கான பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வாரம் நாடளாவிய ரீதியில் நடைபெற்றது.

குறித்த வேலைத்திட்டத்தில் MFCD சிறுவர் பராமரிப்பில் உள்ள மாணவர்களுக்கு 2016 புதிய கல்வி ஆண்டுக்கு தேவையான பாடசாலை உபகரணங்கள் அடங்கிய பொதி ஒன்று வழங்கப்பட்டது.

கொழும்பு, கம்பஹா, களுத்தறை,கண்டி,திருகோணமலை,மட்டக்களப்பு ஆகிய மாவட் டங்களை சேர்ந்த மாணவர்கள் குறித்த திட்டத்தில் பயன் பெற்றனர்.

## நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தின் செயற்பாடு ஆரம்பிப்பு





சிறுநீரக நோயாளிகளை கருத்திற்கொண்டு திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய், ஜயந்திபுர கிராமத்தில் அண்மையில் நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவர்கள் நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தின் செயற்பாட்டை ஆரம்பித்து வைத்தார்.

இந் நிகழ்வில் கிழக்கு மாகாண அமைச்சர் களப்பத்தி, முன்னாள் பிரதி அமைச்சர் எம்.எஸ்.தௌபீக், அமைச்சின் மேலதிக செயலாளர் டீ.எம்.சி.திசாநாயக்க மற்றும் பல உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். ( ஜெம்ஸாத் இக்பால்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்து விட்டது



விலை - 60/=

# ஒலிம்பிக்வரை ஓடுவேன் முஹமத் அஷ்ரப்



கடந்த வருட இறுதியில் தியகமவில் இடம்பெற்ற தேசிய மெய்வல்லுனர் போட்டியில் (Na?onal Championship Game) அம்பாறை மாவட்டம் பொத்துவிலைச் சேர்ந்த அப்துல் லதீப் முஹமத் அஷ்ரப் 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் 2ம் இடம்பெற்று சாதனைபடைத்தார். இவர் 100 மீற்றர் தூரத்தை 10.42 செக்கனில் ஓடி முடித்துள்ளார்.

இவ் வெற்றியின் மூலம் பெப்ரவரி மாதத்தில் இந்தியாவில் நடைபெறும் தெற்காசிய விளையாட்டுப்போட்டிக்கு அஷ்ரப் நேரடியாக தெரிவானார். 2006ம் ஆண்டு பொத்துவில் அல்-இர்பான் மத்திய கல்லூரியில் கற்றுவந்த அஷ்ரப் முதற்தடவையாக 16 வயதின் கீழ் 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் வலய மட்டத்தில் 2ம் இடத்தை பெற்றுக் கொண்டார். அவ்வருடம் நடைபெற்ற மாவட்டமட்ட ஓட்டப்போட்டியில் முதலிடத்தைப் பதிவு செய்தார்.

2008 ல் நடைபெற்ற 19வயதின் கீழ் 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் வட்டார, வலய, மாவட்ட மட்டங்களில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டார். அதே வருடம், அகில இலங்கை மட்டத்திற்கு செல்ல வாய்ப்பிருந்தும் அவர் போட்டிகளில் கலந்துகொள்ளவில்லை.

2009இல் அகில இலங்கை மட்ட 100மீற்றர் போட்டியில் பங்கு பற்றி 3ஆவது இடத்தைப்பெற்றார். 2011இல் தேசிய இளைஞர் விளையாட்டுப்போட்டியில் 100மீற்றர் ஓட்டத்தில் முதலிடம் பெற்றார். பின் மேலதிக பயிற்சிகளுக் காக இராணுவ பயிற்சியில் இணைந்து கொண்ட அஷ்ரப் 2012 தேசிய மெய்வல்லுனர் போட்டியில் 100மீற்றரில் மூன்றாம் இடத்தைப் பெற்றர். 2013இல் லெஸபோனியா விளையாட்டுபோட்டி இந்தியாவில் நடைபெற்றது. அதில் 100மீற்றர் அஞ்சல் ஓட்டப்போட்டியில் அஷ்ரப் தலைமையிலான குழு முதலிடம் பெற்றது.

2015ல் சீனாவில் நடைபெற்ற ஆசிய மெய்வல்லுனர் விளையாட்டில் அஞ்சல் ஓட்டத்தில் 4ம் இடத்தைப்பெற்ற அஷ்ரப் அதே வருடம் தாய்லாந்தில் நடைபெற்ற அஞ்சல் ஓட்டப்போட்டியொன்றில் முதல் சுற்றில் இரண்டாம் இடத்தையும் மூன்றாம் சுற்றில் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டார். கடந்த வருடம் தென் கொரியாவில் நடைபெற்ற உலக இராணுவ விளையாட்டுப்போட்டியில் பங்கு பற்றிய அஷ்ரப் தலைமையிலான அஞ்சல் ஓட்டக்குழு 39.43 செக்கன் வேகத்தை பதிவு செய்து மூன்றாம் இடத்தைப் பெற்றது.

பெப்ரவரியில் நடைபெறும் தெற்காசிய விளையாட்டுப்போட்டியில் அஞ்சல் ஓட்டப் பிரிவில் முதலிடங்களைப் பெற்று எதிர்வரும் ஆகஸ்டில் ஒலிம்பிக் தகுதிகாண் போட்டியிலும் முதலிடங்களைப் பதிவு செய்து ஒலிம்பிக்கில் கலந்துகொள்வதே தனது இலட்சியம் என அஷ்ரப் தெரிவிக்கின்றார்.எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி சுயமுயற்சியில் நெடுந்தூரம் பயணித்து சாதனை படைத்துவரும் அஷ்ரப் குறித்து எமது சமூகம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

வெளிவந்து விட்டது



விலை: 50/=

Published by:
Salamah Publications Bureau
No. 1 A, Hill Castle Place,
Bandaranayaka Mawatha, Colombo 12
Contact: 0777 386364
majallassalama@gmail.com
Facebook: salama.srilanka

# ஸ்நூகர் கிண்ணம் பசீலுக்கு



இலங்கை ஸ்நூகர் சம்மேளனம் ஏற்பாடு செய்த 21 வயதின் கீழ் தேசிய ஸ்நூகர் போட்டியில் இராணுவ அணியைச் சேர்ந்த எம்.எப்.எம்.பசீல் முதலிடம் பெற்று கிண்ணத்தை கை பற்றியுள்ளார். கொழும்பு 'ஓடர்ஸ்' விளையாட்டுக்கழகத்தில் இப்போட்டித் தொடர்கள் இடம்பெற்றிருந்தன.

இறுதிப்போட்டியில் சோனக இஸ்லாமிய கலாச்சார நிலையத்தைச் சங்கத்தைச் சேர்ந்த எம்.எம்.ஷாமிலை தோற்கடித்து 1/4 செற் கணக்கில் பசீல் வெற்றிபெற்றார்.
இறுதிச் சுற்றில் எம்.ஷாமில் இராணுவ அணியின் எஸ்.எம்.ரஷீதை தோற்கடித்ததுடன் எம்.எப்.பசீல் இராணுவ அணியின் எம்.ரிகாஸினை தோற்கடித்தார். எம்.ரிகாஸை தோற்கடித்த எஸ்.எம்.ரஷீத் ஸ்நூகர் போட்டி தொடரில் 3ம் இடத்தைப் பெற்றார்.

போட்டி தொடரில் முதல் மூன்று இடங்களை பெற்ற வீரர்கள் 21 வயதின் கீழ் ஆசிய ஸ்நூகர் போட்டியில் கலந்து கொள்ள வாய்ப்பினை பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

e MEDIA அல்குர்ஆனை கற்போம் கற்பிப்போம்

"தப்ஸீர் விளக்கவுரை"

அஷ்ஷெய்க் முஹம்மத் பகீஹுத்தீன் (நளீமி)

பிரதி புதன் கிழமைகளில் 8.00pm - 9.00pm

ஸலாமா தலைமையக கேட்போர்கூடம்
Bandaranayaka Mawatha,
2A, Hillcastle Place, colombo-12

ஏற்பாடு SSD



வெளிவந்து விட்டது



இஸ்லாத்தின் தனிப் பண்புகள்

ஆசிரியர் :

அஷ்ஷெய்க் றவூப் ஸெய்ன் (நளீமி)

விலை: 250/=

Published by Focus Media (Pvt) Ltd, 49 Sri Mahinda Dharma Mawatha Colombo 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org